# கிராமியம்-கல்வி-மேம்பாடு

## சமூகவியல் பார்வைகள்



இ.இராஜேஸ்கண்ணன்

# கிராமியம்-கல்வி-மேம்பாடு

## சமூகவியல் பார்வைகள்

இ.இராஜேஸ்கண்ணன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

சாத்வீகசுருதி

# கிராமியம்-கல்வி-மேம்பாடு

**சமூகவியல் பார்வைகள்**

கிராமியம்-கல்வி-மேம்பாடு,சமூகவியல் பார்வைகள்/ கட்டுரைகள்/ இ.இராஜேஸ்கண்ணன்/முதல் பதிப்பு-டிசம்பர் 2013 /வெளியீடு-சாத்வீகசுருதி,இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி/பதிப்புரிமை-இ.சுனிதா/அட்டை,பக்கவடிவமைப்பு-தானா விஷ்ணு/ பின்னட்டை ஒளிப்படம்-யாத்ரிகன்/அச்சுப்பதிப்பு-ஆகாயம் பதிப்பகம், இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டி

*Kiramiyam-Kalvi-Mempadu,Samukaviyal Parvaikal* (Rurality-Education-Development,Sociological views/ collection of articles/ R.Rajeshkannan/ First Edition-December 2013/ Published by-Shaathveegashruthy,Imayanan East,Uduppiddy/Copy right-R.Sunitha/Cover&layout-thana vishnu/ Back cover photo- Yaathrikan/Printed by- Aakayam pathippakam,Imayanan East,Uduppiddy.

விலை: 250/=

ISBN 978-955-4900-00-4

விளைநிலம் தந்த
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகவியல் துறைக்கு..

நன்றி

பேராசிரியர் என்.சண்முகலிங்கன்

ஆகாயம் பதிப்பகம்- தானா விஷ்ணு

யாத்ரிகன்

சுனிதா

# அணிந்துரை

**பேராசிரியர் என்.சண்முகலிங்கன்**
முன்னாள் துணைவேந்தர்
தலைவர், சமூகவியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

மேம்பாடு பற்றிய இன்றைய சொல்லாடல்கள் புதிய தரிசனங்களை எமதாக்குகின்றன. காலனித்துவ மேலாண்மையுடனான கருத் தாக்கங்கள் பலவும் இன்று கேள்விக்குள்ளாகின்றன. பௌதீக எல்லைகளற்ற உலகம், பண்பாட்டு எல்லைகளைக் கடந்த உலகமய மாதலே மேம்பாடு என்ற பரப்புரைகளின் உண்மைச் சொரூபங்களும் வெளிக்கத் தொடங்கியுள்ளன. "உலக கிராம" கதையளப்புக்களிலிருந்து மீண்டும் கிராமங்களை நோக்கிய நகர்வு தொடங்கியுள்ளது.

நிலைபேறான மேம்பாடு என்பது கிராமிய வாழ்வின் உயர்தனி விழுமியங்களின் வழியது என்ற ஞானம், கிராமியச் சமூகவியலை (Rural Sociology) இதுநாள்வரை மூடியிருந்த திரைகளை விலகச்செய்துள்ளது. இத்தகைய ஒரு சூழமைவில் எங்கள் சமூகவியல் சிரேஷ்ட விரிவுரை யாளர் இராஜேஸ்கண்ணனின் கிராமியம்-கல்வி-மேம்பாடு என்ற நூலின் வரவு பெருமகிழ்ச்சி தருகின்றது. எங்கள் புலங்களில் சமூகப்பயனான சமூகவியல் கல்வியை வேர்விடச்செய்ய நாம் செய்த தவம் பலிதமாகிற மகிழ்ச்சி இது.

முன்னை வாழ்வின் மேலான விழுமியங்களை ஆராதிக்கும் அதேவேளையில் இன்னும் தொடரும் அநீதியான மேலாண்மைகளைக் கேள்விக்குள்ளாக்கும் சிந்தனை வீச்சுக்களாக இக்கட்டுரைகள்

அமைந்துள்ளன. கிராமிய வாழ்வின் அசைவியக்கத்தின் ஆதார விசையான கல்வி, இக் கட்டுரைகளின் மையப் பொருளாகவுள்ளது.

கிராமியச் சமூகவியல், கல்வியின் சமூகவியல் ஆகிய வற்றினைத் தன் ஆய்வார்வத்துறையாக வரித்துக்கொண்ட இராஜேஸ் கண்ணனின் தெளிந்த பார்வையும் பகுப்பாய்வுத்திறனும் இக் கட்டுரைகள் முழுமையும் பளிச்சிடக் காணலாம். கிராமியச் சமூகவியல் துறையில் முத்திரை பதித்த சமூகவியலாளர்கள் பலரும் கிராமிய வாழ்வுடன் தங்களை இரண்டறப் பிணைத்துக் கொண்டவர்கள். கிராமிய மக்களின் வல்லமைகளையும் வலிகளையும் நன்குணர்ந்தவர்கள். இந்தவகையில் கிராமிய வாழ்வைத் தன் ஆய்வனுபவமாகவும் வாழ்வனுபவமாகவும் ஆழத்தரிசிக்கும் இராஜேஸ்கண்ணனின் புலமைத்திறனுக்கும் சமூக உணர்திறனுக்கும் சான்றாக இந்நூல் விளங்குகின்றது என்றால் மிகையில்லை.

தமிழை அறிவியல் மொழியாக்கும் எங்கள் காலப் பணியிலும் புதுவரவான இந்நூலானது சமூகவியல் மாணவர்களுக்கு மட்டுமன்றி சமூகமேம்பாட்டில் அக்கறைகொண்ட அனைவருக்கும் உறுதணை யாகும். இதுபோல் இன்னுமின்னும் ஆழ்ந்த அறிவுச் செல்வங்களை இராஜேஸ்கண்ணன் எம் சமூகத்துக்காக்க ஈன்றபொழுதில் பெரிது வக்கும் தாயாக எல்லையிலா என் அன்பு வாழ்த்துக்கள்.

## பொருளடக்கம்

| | |
|---|---|
| 1.கல்வியும் கிராமிய மேம்பாடும் : ஒரு கல்வியின் சமூகவியல் தரிசனம் | 1-10 |
| 2.உட்படுத்தல் கல்வி: மனப்பாங்கு மாற்றமும் சவால்களும் | 11-19 |
| 3.ஆசிரிய முன்மாதிரிகளும் தலைமைத்துவமும் | 20-27 |
| 4.இளையோர் பண்பாடும் சமூக விலகலும் : நிகழ்போக்குகளும் மாற்றத்துக்கான உபாயங்களும் | 28-42 |
| 5.கிராமிய வாழ்வின் பண்பாட்டுச் சூழல்: நிலைபேறும் மாற்றமும் | 43-49 |
| 6.யாழ்ப்பாணத்துக் கிராமிய கூட்டுவாழ்வும் மாறுதல்களும் | 50-58 |
| 7.போரின் பிந்திய கிராமிய மேம்பாட்டில் சனசமூக நிலையங்கள் | 59-68 |
| 8.பேண்தகு மேம்பாட்டில் சமூக வலுவூட்டலின் வகிபாகம். | 69-81 |
| 9.உலகமயமாக்கமும் மேம்பாடும் | 82-89 |
| 10.முரண்பாடு :முகாமையும் உருமாற்றமும் | 90-98 |
| உசாத்துணைகள் | 99-102 |

# கல்வியும் கிராமிய மேம்பாடும் : ஒரு கல்வியின் சமூகவியல் தரிசனம்

01

## Education and Rural Development: A View on Sociology of Education

### அறிமுகம்

கல்வியின் சமூகவியல் என்பது தனித்துவம் வாய்ந்த ஆராய்ச்சிப் புலமாக விரிவு பெற்றுவிட்டது. இது கல்வி என்ற தனி நிறுவனத்தின் அகநிலையான இயங்குதளங்களைச் சமூகவியல் அறிவின் பிரயோகத்துடன் தரிசிக்கும் அதே வேளையில் கல்விக்கும் ஏனைய சமூக நிறுவனங்களுக்கும் இடையிலான தொடர்புகள் மற்றும் ஊடாட்டங்களையும் ஆய்வு செய்கின்ற இலக்குகளைக் கொண்டுள்ளது. சமூக அபிவிருத்தியின் குறிகாட்டிகளில் முதன்மைபெறும் கல்வி, ஒரு கிராம மட்டத்திலான மேம்பாடு தொடர்பில் எதிர்கொள்ளும் சவால்களையும், அச்சவால்களின் வழியே எழும் புதிய மாற்றீட்டுக் கொள்கைகளுக்கான திசைகாட்டல்களையும் கோட்பாடு வழிநின்று நோக்குவதே இந்தக் கட்டுரையின் இலக்கு.

உலகம் முழுவதிலும் கிராமியமும், அதன் மேம்பாடு தொடர்பான எதிர்பார்ப்புக்களும், அதற்கு கல்வியின் பங்களிப்பும் ஒரே வகையில் சிந்திக்கப்படுவதில்லை. அவை இடத்துக்கிடம் வேறுபட்ட வழிகளில் வரையறுக்கவும் திட்ட மிடவும்படுகின்றன. ஆயினும் இன்றைய உலக மயமாக்கல்

ஒழுங்குகளின் பின்னணியில் 'கிராமிய மேம்பாட்டினை உலகமயமாக்கல்' (Globalizing rural development) என்ற செயன்முறை விரும்பியோ விரும்பாத நிலையிலோ முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இதற்காக உலக அரங்கம் தொட்டு கிராமிய அடிமட்டம் வரை பல முகவர்கள் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றனர். இதன் விளைவாக கிராமியம் (rurality) தொடர்பில் ஒரு உலகப் பொது நிலையிலான அணுகுமுறைகளை பிரயோகமாக்க அந்த முகவர்கள்/ முகவரமைப்புக்கள் முனைகின்றன. இதனால் ஒரு புறத்தில் 'மரபு மாறாத கிராமிய சமுதாயத்தின்' முன் னேற்றம் தொடர்பான வழிவகைகளுக்கும் மறுபுறத்தில் நவீனத்துவமான கிராமிய சமுதாய முன்னேற்றத்துக்கான தந்திரோபாயங்களுக்கும் இடையிலான விவாதங்கள் தொடர்ந்த வண்ணம் உள்ளன. எது எவ்வாறாயினும் கிராமிய மேம்பாடு என்பது அதன் சூழலுக்கு ஏற்ற சாத்தியமான வழி முறைகளை உள்வாங்க வேண்டும் என்பது பொதுநிலையில் ஏற்கப்பட வேண்டியதே. இந்நிலையில் இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளிலுள்ள கிராமங்களின் பேண்தகு மேம் பாட்டிற்கு கல்வியின் பங்களிப்பு தொடர்பான மிக விரிவான ஆய்வுகள் அவசியமாகின்றன. ஏனெனில், இலங்கையின் தேசிய மேம்பாட்டின் தூண்களாக விளங்கும் சேவைத் துறைகளில் மிக முக்கியமாக கல்வியும் உள்ளடங்கியுள்ளது. இந்தக் கல்விக் கொள்கைகளில் தேசிய மேம்பாடு தொடர்பாக அடைய முனையும் இலக்குகளுக்கும், கிராமிய மேம்பாடு தொடர்பாக அடைய முனையும் இலக்குகளுக்கும் இடையிலே செயன்முறை ரீதியாக இடைவெளிகளைக் கொண்டிருப்பது பொது நிலையிலும், ஆய்வுகளின் வழியிலும் உணரப்பட்டு வருகின்றது. இதனால் உலகநிலைப்பட்ட கிராமிய மேம் பாட்டுக்கான கல்விக் கொள்கைகளை உள்வாங்கிக்கொண்டு பிராந்தியக் கிராமங்களுக்கான மேம்பாட்டின் தடைகளை வெற்றி கொள்ளத்தகுந்த வழிமுறைகள் குறித்து சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது. இதற்கான ஒரு ஆரம்ப சிந்தனை யாகவே இந்தக் கட்டுரை அமைகின்றது.

**கிராமிய மேம்பாடு ஒரு தொடருறு எண்ணக்கரு வளர்ச்சி**

*1950 களின் பின்னர் கிராமிய மேம்பாடு என்ற எண்ணக்கருவின்* (theme) *வளர்ச்சியை விளக்கும்* Ellis and Biggs (2001) *என்பவர்கள் பின்வரும் இரு அடிப்படைகளை விளக்குகின்றனர்.*

1. *ஆதிக்கம் மிக்க கட்டளைப் படிமங்கள்* (Dominant Paradigms)
2. *பிரபலமான கிராமிய மேம்பாட்டு குவியங்கள்* (Popular Rural Development Emphases)

*1950 ஆம் ஆண்டு தொடக்கம் 2000ம் ஆண்டுகள் வரை கிராம மேம்பாட்டின் ஆதிக்கம் மிக்க கட்டளைப் படிமங்களாக,*

1. *நவீனத்துவம் மற்றும் இரட்டைப் பொருளாதாரம் (1950 –1970 கள் வரை)*
2. *சிறு அளவிலான பண்ணை மற்றும் விவசாய விளைவுகளின் வினைத்திறன் (1960 –2000 வரை)*
3. *மக்கள் பங்கேற்றல் மற்றும் வலுவூட்டல் செயன்முறை ( 1980– 2000 வரை)*
4. *பேண்தகு மேம்பாட்டு அணுகுமுறை(1980–2000 வரை)*

*ஆகிய நான்கு எண்ணக்கருக்கள் வெவ்வேறு காலங்களில் முனைப்புப் பெற்றமை விளக்கப்பட்டுள்ளது. இது உலக ஒழுங்கின் வரலாற்று வளர்ச்சியுடன் பொருத்திப் பார்க்கப்பட வேண்டிய ஒன்றாகும்.*

*மேற்கண்ட கட்டளைப்படிமங்களுக்கும் கால வேறுபாட்டுக்குமேற்ப ஒரு கிராமிய மேம்பாடு என்பது தனது குவிமையமாக கொண்ட பிரபலம் வாய்ந்த கருத்தாக்கங்களாக பின்வருவன அமைந்தன.*

1. *சமுதாய அபிவிருத்தி (1950 –1970 கள் வரை)*
2. *சிறு விவசாய வளர்ச்சி ( 1960 –1970 கள் வரை)*
3. *ஒருங்கிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி (1970– 1980கள் வரை)*
4. *சுதந்திர சந்தை முறை ( 1980 –1990 கள் வரை)*
5. *பங்கேற்றலுடனான சந்தை முறை (1980– 2000 கள் வரை)*
6. *வறுமைத் தணிப்பு*

மேற்கண்ட இரு விடயங்கள் தொடர்பிலான வரலாற்று வளர்ச்சியை கல்வியுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது, இந்தத் தொடர்ச்சிகளை உடனுக்குடன் கல்விக் கொள்கைகள் தன்னகத்தே உள்வாங்கிக் கொண்டவனா என்பது முனைப்புப் பெறுகின்ற ஒரு கேள்வியாகின்றது. ஆகக்குறைந்தது இரண்டாயிரமாம் ஆண்டுகளில் (நிகழும் நூற்றாண்டில்) கிராமிய மேம்பாட்டின் செல்நெறிகளுக்கும் கல்விக்குமிடையிலான யதார்த்தமான இணைவு குறித்தேனும் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

இவற்றின் அடிப்படையில் இன்றைய கிராமியமேம்பாடு மற்றும் கல்வி தொடர்பான எண்ணக்கருக்களில் பின்வரும் விடயங்கள் முக்கியம் பெறுவதாக David Atchoarena and Charlotte Sedel (2003,P: 52) கூறுகின்றனர். அவையாவன:

1. வறுமைத் தணிப்பைக் குவிமையப்படுத்தல்.
2. சுதேசிகளின் அறிவின் உள்ளுறை திறனை ஏற்றுக்கெள்ளுதல்.
3. பங்கேற்பு அணுகுமுறைகளின் பிரயோகத்தை முன்னேற்றுதல்.
4. சமுதாய ஈடுபாட்டினை வலியுறுத்துதல்.
5. சுதந்திரமான கொள்கைகள் மற்றும் கட்டமைப்பு சீராக்க நிகழ்ச்சித்திட்டங்களின் உள்ளான அரசின் தயக்கம்/ பின் வாங்கலை வெற்றி கொள்ளல்.
6. கிராமிய வெளியில் மேம்பாட்டின் முழுமையான நோக்கங்களை உள்ளீர்த்தல்.
7. அறிவுத் திறன்களை கட்டி வளர்ப்பதன் மூலம் விவசாயம் தவிர்ந்த தொழில் வாய்ப்புக்களுக்காக கிராமிய மக்களைத் தயார் செய்தல்.
8. கிராமியம், நகரம் தொடர்பிலான இரட்டைத் தன்மையினை விளங்கிக் கொள்ளல்.
9. சிவில் சமூகத்திற்கும் அரசசார்பற்ற நிறுவனங்களுக்குமான பங்காளித்துவத்தை விருத்தி செய்தல்.
10. பால்நிலை விவகாரங்களை குவிமையப்படுத்துதல்.

11. HIV மற்றும் எயிட்ஸ் தொடர்பிலான குவிமையப்படுத் துதல்.

மேற்கண்ட விடயங்கள் உலகளாவிய பொது நியமங் களுக்கு உட்பட்ட கருத்துக்களாக பரிணாமம் பெற்றவை. கிராமிய மேம்பாட்டில் மேற்கண்டவிடயங்கள் குறித்த சவால்களை வெற்றிகொள்வதற்கான ஏற்பாடுகள் கல்வியில் அமைதல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பு பொதுவாக உள்ளது. அத்துடன் பிராந்திய கிராமங்களுக்கான தனித்துவம் வாய்ந்த மேலும்பல விடயங்கள் இவற்றுடன் மேலும் உள்ளீர்க்கப்பட வேண்டிய தேவையும் உள்ளது. பெண் தலைமைக் குடும்பங்களின் மீதான குவிமையம், உணவுப் பாதுகாப்பும் போசனையும், சூழல் தொடர்பிலான பிரச்சினைகளும் பாதுகாப்பும்,சிறுவர் உரிமைகளும் முதியோர் பாதுகாப்பும், மேம்பாட்டுக்கான உளப்பாங்கு தடைகளும் அவற்றுக்கான விழிப்புணர்வு மற்றும் பயிற்சிகள், கிராமிய பல்வகைத்துவமும் முரண்பாடுகளும் முரண்பாட்டைத் தீர்த்தலும், கிராமிய குறிச்சிக் கலாசாரங்களும் (pocket cultures) என்று நீளும் பட்டியல் ஒன்றை மேலும் சேர்த்துக்கொள்ள வேண்டிய தேவை வளர்ந்துவரும் நாடுகளின் கிராமிய மேம்பாட்டு கொள்கை வகுத்தலில் உள்ளது. இவற்றை கல்வியில் உள்வாங்குதல் என்பது பாரிய சவாலாக அமைகின்ற அதே வேளையில் பாடசாலைக் கல்வியிலும், உயர் கல்வியிலும் இவை குறித்த கவனஈர்ப்பும் மாற்றுச் சிந்தனைகளும் இடம்பெறும் போது தான் தனித்துவம் வாய்ந்த பிராந்திய கிராமிய மேம்பாடு சாத்தியமான திசையில் நகர முடியும்.

## கிராமிய மேம்பாட்டிற்கான கல்வியின் பங்களிப்பு

மேற்குறித்த விடயங்களின் பின்புலத்தில் ஒரு வளர்முக நாட்டின் கிராமிய மேம்பாட்டுக்கான கல்வியின் பங்களிப்புக்கள் குறித்துச் சிந்திக்க முடியும். கல்வி என்பதன் அடிப்படைத் தார்ப் பரியமே அறிவு, திறன் மற்றும் உளப்பாங்கு மாற்றம் என்பது தான். இவை மூன்றையும் கிராமிய சமுதாய மேம்பாட்டிற்கான சாத்தியங்களுடன் இணைத்துச் சிந்திக்கவேண்டியுள்ளது.

மகாத்மாகாந்தியின் 'ஆதாரக்கல்வி' என்பது இதற்கான பூரணமான அடிப்படைகளைத் தந்தது. ஆதாரக்கல்வி என்பதில் கூட காந்தியடிகள் உடல் உழைப்பு, பெண் கல்வி, முதியோர் கல்வி, தீண்டத்தகாதவர்கள் மற்றும் பூர்வீகக் குடிகளுக்கான கல்வி, சமத்துவக் கல்வி என்று பல விடயங்களை கிராமிய மேம்பாட்டிற்கு ஏற்ற வகையிலே விளக்கியுள்ளார். அவரது கருத்துக்களில்கூட நிகழ்போக்கில் கிராமிய மேம்பாட்டுக்கான கல்விபற்றி விளக்குபவர்கள் கூறும் கருத்து நிலைகள் விரவிக்கிடக்கின்றன.

கிராமிய மேம்பாட்டுக்கான கல்வியின் பங்களிப்புக்களை பின்வரும் வகையில் நோக்கலாம்.

1. இக் கல்வியின் சிக்கலானதும் உலகலாவியதுமான தாக்க விளைவுகளை படிப்படியாக அங்கீகரித்தல்.

இதன் பிரகாரம் கல்வியானது கிராமிய சமுதாயத்தில் விவசாய விருத்தி, மனித மூலதன விருத்தி, அபிவிருத்திக்கான பல்பரிமாணம் கொண்ட முழுதளாவிய அணுகுமுறைகளை உள்வாங்கல் என்பவற்றை ஏற்படுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. மனித மூலதன விருத்தியானது கல்வியை ஒரு முதலீடாகவே நோக்குகின்றது. இதனால் பொருளாதாரவிருத்தி மற்றும் விவசாய விருத்தி ஏற்படுமெனக் கருதப்படுகின்றது. கல்வி விவசாயிகளின் தரத்தை உயர்த்தும் புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்கி வினைதிறன் மிக்க வளஒதுக்கீட்டினை அதிகரிக்கும் புதிய தொழில்நுட்பங்களை உள்வாங்கி விளைதிறன் மிக்க உற்பத்தி வழிமுறைகளை விவசாயிகள் அறிய உதவும். அதாவது, உலகம் முழுவதும் கிராமிய விவசாயத் துறையில் புதிதாக வரும் மாற்றங்களைக் குறித்து கல்வி கிராமிய சமுதாயங்களுக்கு அறியத்தருவதாக அமைதல் வேண்டும்.

2. கல்வியின் வழியே முன்னைய அனுபவங்களை மாற்றியமைத்தல்.

இதன் பிரகாரம் சமூகம் தரும் அனுபவங்களை சரிவர விளங்கிக் கொண்டு அதற்கான மாற்று வழிகளை சிந்திப்பதைக் குறிக்கின்றது. இந்த அணுகு முறையினுள் கிராமியச் சூழலுக்கு ஏற்ற வகையில் பாடசாலைகளை மாற்றியமைத்தல், கிராமிய பிரதேசத்துக்கான முறைசாரா கல்வி ஏற்பாடுகளை முன்வைத்தல் என்பன அடங்குகின்றன. பாடசாலை களில் உற்பத்தித் திறனுள்ள வேலை திட்டங்களைச் செய்தல், பாடசாலை தோட்டங்களை உருவாக்குதல். சமுதாய பாடசாலைகள் எனப்படும் (integrated schools) ஒருங்கிணைக்கப்பட்ட பாடசாலைகளை உரு வாக்குதல் என்பன இதற்கான உபாயங்களாக பின்பற்றப்படுகின்றன.

3. கிராமப்புறங்களுக்கான ஆரம்பக்கல்வி ஏற்பாடுகளை சீரமைத்தல்.

இதன் பிரகாரம் சிறுபராயத்திலேயே மனப்பாங்கு மற்றும் நடத்தை மாற்றங்களைத் தரும் உபாயங்களு டன் கூடிய கல்வி சீரமைப்புக்களை முன்வைத்தல் வேண்டும். இதற்கான ஆரம்பப் பள்ளியின் கலைத் திட்ட உள்ளடக்க சீரமைப்பு, ஆரம்பப் பள்ளிகளின் தர உள்ளீடுகளை திட்டமிட்டு தீர்மானித்தல், முன் பிள்ளைப் பருவ விருத்திக்கான வீட்டுச் சூழலை பாட சாலை வகுப்பறைகளில் உருவாக்குதல் போன்ற பல உபாயங்கள் கையாளப்பட்டு வருகின்றன.

4. நிகழ் போக்கில் உள்ள உடனடிப்பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கான ஏற்பாடுகளைக் கொண்டிருத்தல்.

இதன் பிரகாரம் கிராமப்புறங்களின் மேம்பாட்டினை பாதிக்கும் பல பிரச்சினைகள் புதிதாக எழுந்துள்ளன. பெண்களின் மீதான வன்முறைகள், சூழலியல் பிரச் சினைகள், உள்நாட்டில் இடம்பெயர்ந்தோர் பிரச்சினை, கவனிக்கப்படாத அல்லது எல்லைப்படுத்தப்பட்ட

மக்களின் பிரச்சினை போன்ற பல விவகாரங்கள் கிராமிய மேம்பாட்டின் இன்றைய சவால்களாக நிலைத்துவிட்டன. இந்த சவால்களை வெற்றி கொள்ளச் சாத்தியமான வழிமுறைகள் உலகம் முழுவதும் கிராமங்கள்தோறும் எடுத்துச் செல்லப் படுகின்றன.

5. மக்கள் பங்கேற்றலை அதிகரிப்பதற்கான கல்விசார் ஏற்பாடுகளை முன்வைத்தல்.

இதன் பிரகாரம் கிராமிய சமுதாயம் ஒன்றினை மேம்படுத்துவதற்கான வலுவூட்டப்பட வேண்டிய பல பிரிவினர் உள்ளனர். பெண்கள், இளைஞர்கள், மாற்று வலுவுள்ளோர் போன்றோர்களின் கிராமிய மேம் பாட்டுக்கான பங்கேற்றலில் உள்ள சவால்களை வெற்றி கொள்ளத்தக்கதான ஏற்பாடுகளை கொண்டி ருத்தல். இதற்காக இன்று அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடையே ஒத்துழைப்புக்கள் உருவாக் கப்பட்டு படிப்படியாக அவை கல்வியினுள் உள் வாங்கப்பட்டு வருகின்றன.

மேற்கண்ட கல்வியின் பங்களிப்புக்கள் இங்கு சுருக்கமாகவே இடம்பெறுகின்றன. இவற்றை வெவ்வேறு நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படும் கிராமிய மேம்பாட்டுத் திட்டங்களின் அனுபவங்களின்வழி விரிவாக நோக்கமுடியும். அது விரிவஞ்சி இங்கு தவிர்க்கப்படுகின்றது.

### சவால்கள்

கிராமிய சமுதாய மேம்பாட்டுக்கான கல்வி என்பது தொடர்பில் பல ஏற்பாடுகள் மற்றும் அமுலாக்கங்கள் நிலவுகின்ற போதிலும் அவற்றுக்கான சவால்களும் தொடர்கின்றன. இந்தச் சவால்கள் பயனாளிகளான மக்கள், கொள்கை வகுத்தல் மற்றும் அமுலாக்கலுக்கான முகவர்கள், கல்வியை கிராமிய சமுதாய மேம்பாட்டுடன் இணைவாக்கும் தொழில்நுட்பரீதியான முறையியல்கள் போன்றவற்றின் வழி

எழுகின்றன.

இவற்றில் பயனாளிகளான மக்களின் சார்பில் எழும் சவால்கள் பற்றி பின்வரும் அம்சங்களை முன்வைக்கலாம்.

1. கல்வி மற்றும் கிராமிய மேம்பாடு தொடர்பாக மக்களிடம் உள்ள விழிப்புணர்வுக் குறைவு
2. கிராமிய மேம்பாட்டுக்குத் துணையான கல்வி அறிவினை பிரயோகப்படுத்தலிலான பின்னடைவு மற்றும் தயக்கம்.
3. கல்விக்கும் வாழ்வுக்கும் இடையே இடைவெளிகளுடன் காலத்தை கழித்தல்.
4. புதிய மாற்றங்களை உள்வாங்கத்தக்க உளப்பாங்கு மாற்றமின்மை.

மேலும், கொள்கை வகுத்தல் மற்றும் அமுலாக்கல் துறைசார்ந்தவர்கள் சார்பிலான சவால்கள் பின்வருமாறு அமையலாம்.

1. அரச, அரசசார்பற்ற நிறுவன முரண்நிலைகள்.
2. கொள்கை வகுத்தலில் அரசாங்கத்தின் அசமந்தம்/ ஈடுபாடின்மை
3. அதிகளவிலான செலவு.
4. முகவரமைப்புக்களிடம் மறைபொருளாக அமைந்த சுய நோக்கங்கள்.

அத்துடன் கல்வியை கிராமிய சமுதாய மேம்பாட்டுடன் இணைக்கும் தொழில்நுட்ப ரீதியான முறையியல் அடிப்படையிலான சவால்கள் குறித்து பின்வரும் விடயங்களை கூறலாம்.

1. எல்லாக் கிராமிய சமுதாயமும் ஓரினத்தன்மை உடையதல்ல.
2. கல்விக் கொள்கை வகுத்தலில் கீழிருந்து மேலான அணுகுமுறை பயன்பாட்டில் இல்லை.
3. கிராமிய சூழலுக்கேற்ற வகையில் போதனை முறையிலோ கலைத்திட்ட உள்ளடக்கங்களிலோ நெகிழ்ச்சித்தன்மை ஏற்படுத்த முடியாமை.

## நிறைவுக்குறிப்பு

மேற்கண்ட விளக்கங்களின் அடிப்படையில் வேறுபடும் கிராமியச் சூழல்தான் வளர்முக நாடுகளின் இயல்பான சமூக அமைப்பு. தேசிய மேம்பாட்டின் அடிப்படை அந்தக் கிராமங்கள்தான் கல்வித்துறை தேசியக் குறிக்கோள்களை கொண்டிருத்தல் அவசியமானது. அதேநேரத்தில் பிரதேச சமுதாய மேம்பாட்டுக்கான கொள்கைகளை கொண்டிருக்க வேண்டியதும் மிக அவசியமானதே இந்த சவாலை எதிர் கொள்வது மிகவும் கடினமானது. எனினும், பிரதேச சமுதாயங் களின் நலநிலைக்கு ஏற்ற வகையிலான நெகிழ்ச்சித் தன்மைகளை ஆகக்குறைந்தது பாடசாலை மட்டத்திலாவது நடைமுறை சாத்தியமுடையதாக்க பரந்துபட்ட ஏற்பாடுகள் அவசியமாகின்றன. இதற்கான பொறுப்பேற்றல்களின் ஒருங்கிணைப்பு மிக அவசியமானதாகின்றது.

# உட்படுத்தல் கல்வி:
## மனப்பாங்கு மாற்றமும் சவால்களும்

02

## Inclusive Education:
## Attitude Changes and Challenges.

### முகவுரை

'அனைவருக்கும் கல்வி' என்பது ஒரு கோட்பாடாக இன்று முனைப்புப் பெற்றுள்ளது. இந்தக் கோட்பாட்டு இலக்கினை நடைமுறையில் அடைந்துகொள்ளவதற்கு பல்வகை முன்னெடுப்புக்களை கல்வியுலகம் மேற்கொண்டு வருகின்றது. இதற்காக கல்வி மறுசீரமைப்பு, கலைத்திட்ட உருவாக்கம், ஆளனி நியமனங்கள், ஆசிரியகல்வி என பல்வேறு முன்னெடுப்புக்கள் சாத்தியமாக்கப்பட்டு வருகின்றன. அதே வேளையில் 'அனைவருக்கும் தரமான கல்வி' என்ற கோட்பாடும் வளர்ந்துள்ளது. இந் நிலையில்தான் விசேட தேவையுள்ளவர்களுக்கான கல்வி என்ற அடித்தளத்தில் 'உட்படுத்தல் கல்வி' எண்ணக்கரு ரீதியாக முனைப்புப் பெற்று இன்று நடைமுறைச்சாத்தியம் பெற வேண்டிய ஒரு செயன்முறையாக மாறியுள்ளது.

கல்வி என்பது ஒரு சமூகத்தின் தனித்துவம் வாய்ந்த நிறுவனம். இது சமூகத்தின் பிரதிபலிப்பாக மேற்கிளம்புகின்ற அதே நிலையில் சமூகப்பிணக்குகளுக்கான தீர்வுகளையும் சமூக மாற்றத்துக்கும் மற்றும் மேம்பாட்டுக்குமான அடிப்படை களையும் தருதல் அவசியமாகின்றது. இதனால் கல்விச்

செயன்முறைகளில் உருவாக்கப்படுகின்ற புதிய புதிய சிந்தனைகள் அவற்றின் சமூகப்பயன்பாட்டுடனும் சமூக எதிர்பார்ப்புடனும் ஒன்றிணைத்தே நோக்கப்படுதல் வேண்டும். 'உட்படுத்தல் கல்வி' என்பது வெறுமனே ஒரு எண்ணக்கரு வாகவும் கோட்பாடாகவும் அன்றி சமூகத் தேவைகளுடனும் இணைந்த ஒன்றாக நோக்கப்பட வேண்டும். அவ்வாறு நோக்கப்படும் போது அதன் சமூகத்தேவை என்ன? சமூகப் பயன்கள் எவை? அதனை நடைமுறைப்படுத்துவதில் உள்ள சமூகரீதியான சாத்தியங்கள் மற்றும் அசாத்தியங்கள் எவை? போன்ற சில கேள்விகளுக் கான பதில்களை நாம் அறிந்திருக்க வேண்டிய தேவை உள்ளது.

எந்தவொரு சமூக நிறுவனத்திலும் குறிப்பிடத்தக்க ஒரு மாற்றம் அறிமுகமாகும்போது அதனை அமுல்படுத்தும் பொறிமுறைகள் (implementing mechanism) மாத்திரம் சவால்களை எதிர்கொள்வதில்லை. சமூகமும் அதன் செல்வாக்கு நிலைக்கு உட்படும் மாறாக சமூகத்தில் நிகழ்போக்கிலும் சிலவகை சாதகமான மாற்றங்களும் எதிர் பார்க்கப்படும். இந்த அடிப்படையிலேயே 'உட்படுத்தல் கல்வி என்ற சமகாலக் கல்விச் செயன்முறையின் அமுலாக் கத்தினை சமூகவியல் அடிப்படைகளில் இந்தக் கட்டுரை நோக்க விளைகின்றது.

**விசேட கல்வியும் உட்படுத்தற் கல்வியும்.**

உட்படுத்தற் கல்வி என்பது விசேட கல்வித்துறை சார் தேவைகளில் ஒன்றாகியுள்ளது. சாதாரண வகுப்பறைகளிலே தங்கள் கற்றலை மேற்கொள்வதில் விசேட தேவையுள்ள மாணவர்களுக்கு இடர்பாடுகள் உள்ளன. விசேட தேவை யுள்ளவர்களுக்கு தனித்துவமான கற்பித்தல் முறைகள், கற்றல் வளங்கள், கற்பித்தல் நுட்பங்கள் வழக்கத்திலுள்ளன. இவற்றைப் பிரயோகித்து பார்வை-கேட்டல் குறைபாடு உடைய வர்கள், உடல் வலுக்குன்றியவர்கள் போன்றவர்களுக்கு கல்வி வழங்கும் ஏற்பாடாகவே விசேடகல்வி என்பது அமைகின்றது. இந்தத் தேவைக்காக ஏற்கனவே பல்வேறு செயற்றிட்டங்கள்

நடைமுறைப்படுத்தப்பட்டன.

விசேடகல்வி வழங்குவதற்கான ஏற்பாடுகளில் ஆரம்பத்தில் அரசின் தலையீடுகள் போதுமானதாக அமைந்ததா என்பது கேள்விக்குரியதே. செவிப்புலன்-விழிப்புலன் அற்றவர்களுக்கான பாடசாலை, அங்கவீனர்களுக்கான பாடசாலை, பார்வையற்றவர்களுக்கான 'பிறேயில்' முறை போன்ற பல விசேட கல்வி முன்னெடுப்புக்கள் வந்தன, 1961 இல் ஜெயசூரிய அறிக்கை, 1962 இல் கென்மோர் அறிக்கை, 1979 இல் போகொட பிறேமரட்ண அறிக்கை என்பவற்றைத் தொடர்ந்து விசேட கல்விக்கான நடைமுறைச் சாத்தியமான செயற்பாடுகள் மிக முனைப்புடன் முன்னெடுக்கப்பட்டன. எனினும் இவையாவும் விசேடகல்வித்தேவை உடையவர்களுகான தனிமைப்படுத்தப் பட்ட செயற்பாடுகளையே கொண்டிருந்தன.

ஆரம்பத்தில் இலங்கையில் தீவிர மனவெழுச்சிசார் தடைகள் உள்ளோர், கற்றல்வலுவற்றோர், மொழிதல் வலுவற்றோர்கள், பன்னிலை வலுவற்றவர்கள், பார்வைக் குறையுள்ளோர், கேட்டற் குறையுள்ளோர், உடலுறுப்புக் குறை யுள்ளோர், சுகவாழ்வுக் குறையுடையோர், மூளை பாதிப்பு டையோர், தன்னுள் ஆழ்பவர்கள் போன்ற பலவகை விசேட தேவையுடையவர்கள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான தனித்துவமான கல்வி ஏற்பாடுகள் செய்யப்பட்டு அதுவே விசேடகல்வி எனப்பட்டது. இவர்கள் மாத்திரமன்றி மீத்திறன் மிக்க, கொடுப்பினைமிக்க ஆற்றல்கள் உள்ள மாணவர் களைக்கூட விசேடகல்வி பெறவேண்டியவர்களாகவே கருதினார்.

இத்தகைய விசேட தேவை உடையவர்களை விசேடமாகக் குறித்து ஒதுக்கப்பட்ட நிலையில் வைத்து கற்பிப்பதை விடுத்து அவர்களையும் சாதாரண வகுப்பறைகளிலும் பாடசாலைகளிலும் உட்படுத்திக் கற்றலில் ஈடுபடுத்த வேண்டும் என்பதே 'உட்படுத்தல் கல்வி' எனப்படு கின்றது. இந்த எண்ணக்கருவின் உருவாக்கத்தின்பின்

குறைபாடுடையோர், வலுவற்றோர், வலுக்குறைந்தோர், அங்கவீனர்கள் என்ற சொற்பிரயோகங்கள் கைவிடப்பட வேண்டியவையாகின. பதிலாக 'மாற்று வலுக்கொண்டோர்' என்ற பிரயோகம் மேலெழுந்துள்ளது. ஏனெனில் இவர்கள் ஒவ்வொருவரிடத்திலும் 'விசேடமான','மாற்றான' தனித்துவத் திறமைகள் உள்ளன அவற்றை வெளிக்கொணர்வதற்கு இயல்பான மாணவர்களுக்குரிய வகுப்றைச் சூழலும், சமூகச் சூழலுமே அவசியம் என்ற கருத்து செல்வாக்குப் பெற்றுள்ளது. அதாவது எல்லாப் பிள்ளைகளுக்குமான பொதுக்கல்விக் கோலத்தினுள் மாற்றுவலுவுள்ள பிள்ளைகளும் அடக்கப்பட்டு அந்தச் சூழ்நிலையிலே வைத்து அவர்களின் தேவைகள் இனங்காணப்பட்டு அவற்றை நிறைவேற்றும் ஏற்பாடுகள் வடிவமைக்கப்படல் வேண்டும் என்பதே உட்படுத்தல் கல்வியின் மையநோக்காகும்.

மாற்றுவலுவுள்ள பிள்ளைகளும் இந்த சமூகத்தின் மனிதர்களே. ஏனையவர்களைப் போல அவர்களும் சமுதாய வாழ்வின் ஒவ்வொரு பொருண்மைகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதில் உரித்துடையவர்களே. சகல பிள்ளைகளிடையிலும் வேறுபாடுகளைவிட ஒற்றுமைகளே அதிகம். இதனால் குறைந்தளவு வேறுபாட்டின் அடிப்படையில் பிள்ளைகளிடையே வேறுபாடு காட்டுதல் அவர்களின் உரிமைகளை மறுப்பதாகும். எந்தவொரு பிள்ளையும் ஒத்த வயதுப் பிரிவினருடன் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதே சிறந்தது என்ற அடிப்படையில்தான் விசேட தேவையுள்ள மாணவர்களை உட்படுத்தல் என்பது இன்றைய கல்வியுலகில் முனைப்புப் பெற்ற கோட்பாடாகியுள்ளது.

### சமூக மனமும் உட்படுத்தற் கல்வியும்

விசேட தேவையுள்ள மாணவர்களைச் சாதாரண வகுப்பறைகளில் உட்படுத்தலின் போது சமூகத்தின் மனோபாவம் என்ன என்பது சிந்திக்க வேண்டிய ஓர் அம்சமே. பெற்றோர், ஆசிரியர்கள், ஏனைய சமூக நிறுவனங்கள், அரசு

என்று தொடரும் சமூகக் கூறுகள் ஒவ்வொன்றினதும் பங்களிப்புக்கள் மற்றும் பலவீனங்கள் என்ன என்பது குறித்து ஆராய வேண்டும்.

உலகளாவியரீதியில் சட்டரீதியாக பல ஏற்பாடுகள் வந்து விட்டன. மனித உரிமைகள் சாசனம், சிறுவர் உரிமைகள் சாசனம் என்பவற்றின் வாயிலாக இதனை அறியலாம். சிறுவர் உரிமை சாசனத்தின் 23 ஆம் 28 ஆம் உறுப்புரைகள் மாற்றுவலுவுள்ள பிள்ளைகளின் சுயபலம், கௌரவம், கண்ணியமான வாழ்வு சமுதாயத்தில் பெறும் வாய்ப்புக்கள், அவர்களின் பராமரிப்பு மற்றும் பாதுகாப்பு, ஆற்றலின் அடிப்படையிலான கல்வி என்பன பற்றி மிக விரிவாக விளக்குகின்றன. இவற்றின் பின்னணியில்தான் விசேட தேவை உள்ளவர்களுக்கான உட்படுத்தற் கல்வி என்ற எண்ணக்கரு விருத்தி பெற்றது. எனினும் எமது சமூகத்தில் அதனை அமுல் படுத்தும் போது மாற்றப்பட வேண்டிய அடிப்படை மனோபா வங்களும் எதிர்கொள்ளவேண்டிய சவால்களும் அதிகமாகவே உள்ளன. இத்தகைய சவால்களை சமூகமட்டத்திலான சவால்கள், கல்வியுலகின் சவால்கள் என இருவகைகளில் ஆராயலாம்

**சமூக மட்டத்திலான சவால்கள்**

1. பொதுவாக மாற்றுவலுவுள்ள பிள்ளைகளைச் சமூகம் இரக்கத்துடன் பார்க்கும் நிலை தொடர்கிறது. இதனால் சாதாரண மனிதர்களிலிருந்து அந்நியப்படுத்தப்படு கின்றார்கள் அல்லது அந்நியமாகின்றார்கள். சமூகத்தின் இந்தப் 'பார்வைக் கோளாறு' உட்படுத்தற் கல்வி வகுப் பறைவரை தொடருமாயின் அது பாரிய சவாலாக அமையலாம். உடலில் ஏற்படும் ஒரு குறைபாடு என்பது ஒட்டுமொத்தமாக ஒரு சாதாரண பிள்ளையிலிருந்து விசேட தேவையுள்ள பிள்ளையை முற்றிலும் வேறு படுத்திப் பார்க்க வாய்ப்பினைத் தந்துவிடுவது மிகவும் அபத்தமான ஒரு சமூக மனோபாவமாகும்.

2. சமூகமட்டத்தில் பல்வேறு அடிப்படையிலான 'அடுக்கமைப்பு' முறைகள் உள்ளன. அவை தவிர்க்கவியலாது வகுப்பறைகளிலும் பிரதிபலிக்கின்றன. பொருளாதாரம், வர்க்கம், சாதி போன்ற அடிப்படைகளிலான அடுக்கமைப்பின் பிரதிபலிப்புக்கள் எவ்வாறு செல்வாக்குச் செலுத்துகின்றனவோ அவ்வாறு உடற்குறைகளும் வகுப்பறைகளில் மாணவர்களிடையே ஓர் 'அடுக்கமைப்பை' உருவாக்கி விடாது பார்த்துக் கொள்ளவேண்டிய நிலையுள்ளது.

3. உட்படுத்தல் கல்வி தத்துவத்தின் பிரதான அம்சங்களில் ஒன்றாக வலுவற்ற பிள்ளைகள் சாதாரண மாணவர்களுடன் வகுப்பறைகளிலே சேர்ந்து ஊடாடுவதால் சமூகச் சூழலுக்கு பொருத்தப்பாடடைவது வலியுறுத்தப் படுகின்றது. இதனால் 'சமபங்காளிகள்' என்ற உணர்வு நிலை மாற்றுவலுவுள்ளவர்களிடத்தில் ஏற்படுகின்றது என்ற எதிர்பார்ப்பு உள்ளது. ஆனால் இயல்பான சமூகச் சூழ்நிலையில் சாதாரண நிலையிலுள்ள பிள்ளைகளின் பெற்றோர் அங்கவீனம் போன்றவற்றுக்கு உட்பட்ட பிள்ளைகளிடத்தில் தமது பிள்ளைகளுக்கு நிகரான மாற்றுவலு உள்ளது என்பதனை பொது நிலையில் ஏற்க மறுப்பவர்களாகவே உள்ளனர். இந்த மனோபாவத்தினை மாற்றிக்கொள்ள பெற்றோர் முனைதல் வேண்டும்.

4. மாற்றுவலுவுள்ள பிள்ளைகள் இயல்பாகவே உளவியல் ரீதியான தாழ்வு மனப்பான்மை நிலையில் பெரும்பாலும் இருப்பது எமது சமூகச் செயற்பாடுகளிடை தவிர்க்க வியலாத ஒன்றாகும். இவர்கள் சாதாரண மாணவர்களுடன் சமநிலையில் இயங்கும்போது சில சந்தர்ப்பங்களில் இந்த மனப்பான்மை அதிகரிக்கும் வாய்ப்புகள் ஏற்படக்கூடிய நிலைகளும் உள்ளன. இதனை தவிர்ப்பதற்கான மனோபலத்தை அந்த மாணவர்கள் பெற்றுக் கொள்ள வழிசமைப்பது மிக அவசியமான பணியாகி விடுகின்றது. இந்தச் சவாலை வெற்றி கொள்ள

வேண்டியவர்களாக ஆசிரியர்களே விளங்குவர்.

5. மாற்றுவலுவுள்ள பிள்ளைகளின் பெற்றோர் சார்பிலும் முக்கியமானதொரு மனநிலைமாற்றம் வேண்டப்படு கின்றது. அதாவது தங்கள் பிள்ளைகள் பராமரிக்கப்பட வேண்டியவர்கள், இயல்பாகச் சமூகச்சூழலுக்குப் பொருந்த முடியாதவர்கள், சவால்களை எதிர்கொள்ள முடியாதவர்கள், என்றுமே கவனமெடுப்பவர்களின் உதவி நாடி நிற்பவர்கள் என்ற மாற்றவியலாத எண்ணம் உள்ளவர்களாக இருப்பர் இவற்றை மாற்றிக்கொண்டு தங்கள் பிள்ளைகளின் உளவளர்ச்சிக்கும், சமூகப் பொருத்தப்பாட்டுக்கும் உந்துசக்தி வழங்கக் கூடியதாக தமது மனோபாவத்தை மாற்றிக் கொள்ளத் தயாராக வேண்டும்.

**கல்வியுலகின் சவால்கள்**

சமூக ரீதியில் பல சவால்கள் இருப்பினும் அவற்றைவிட அதிகளவு சவால்களைக் கல்விசார் உலகு சந்திக்க வேண்டியுள்ளது. நிர்வாகநிலை, கற்றல் கற்பித்தல் முறைகள், ஆசிரிய வளங்கள் கலைத்திட்ட நடைமுறைகள் போன்ற பல்வேறு அம்சங்களிலும் அந்தச் சவால்கள் வெற்றி கொள்ளப்படவேண்டியுள்ளன. அவற்றில் பின்வருவன குறிப்பிடத்தக்கவையாகும்:

01. சாதாரண மாணவர்களின் செயற்பாடுகளை உள்ளடக்கிய பாடசாலைகளையும் கல்விச் செயற்பாடுகளையும் நிர்வகித்த கல்வி நிர்வாக அமைப்புக்கள் விசேட தேவை உள்ள பிள்ளைகளை உள்வாங்கும் போது நிர்வாக போக்குகளில் மாற்றங்களை உள்வாங்க வேண்டிய தேவைகள் உள்ளன. விசேடமான பயிற்சி பெற்ற ஆசிரிய வழிகாட்டுனர்கள், ஆலோசகர்கள் என்பவற்றுக்கு அப்பால் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவி வேண்டி சில ஒத்துழைப்புக்களை (collaborations) உருவாக்க வேண்டி ஏற்படும்.

02. வகுப்பறையை பொறுத்தவரை ஏற்கனவே விசேட கல்வி ஆசிரிய நியமனங்கள் உள்ளபோதிலும், மாற்றுவலுவுள்ள பிள்ளைகளைக் கையாளும்திறன் விருத்திபெற்ற ஒரு கணிசமான ஆசிரியவளம். அவசியப்படும். கல்வியியல் கல்லூரிகளிலும் ஏனைய சில நிறுவனங்களிலும் இதற்கான ஆசிரியர் கல்வி நடைமுறைகள் ஏற்கனவே அறிமுகமான போதிலும், நடைமுறைச் சாத்தியமாக்கும் ஆசிரியவளம் மேலும் அதிகரிக்கப்பட வேண்டிய தேவையுள்ளது.

03. மாற்றுவலுவுள்ள மாணவர்களின் கற்றலுக்கான உபகரணக் கையாட்சி மிகமுக்கியமான ஒன்றாகும். சாதாரண வகுப்பறையில் இதன் பிரயோகத்தை உறுதி செய்துகொள்ளல் என்பது முக்கியமான முயற்சியாகும்.

04. கற்பித்தல் நுட்பங்களில் சாதாரண வகுப்பறைக்குரிய பொதுவான முறையியல்கள் வகுக்கப்பட்டுள்ள நிலையில் மாற்றுவலுவுள்ள மாணவர்கள் வகுப்பறைத் தலைமைத்து வத்தை பொறுப்பேற்கக் கூடிய வகையில் குழுச் செயற்பாடுகள் போன்றவற்றை ஏற்படுத்தி செய்யவேண்டிய தேவைகள் உள்ளன.

05. இத்தகைய வகுப்பறைகளில் குழுக்கற்பித்தல் (team teaching) அணுகுமுறை விரிவாக்கம் செய்ய வேண்டிய ஏற்பாடுகள் உள்ளன. துறைசார் விசேட பயிற்சி பெற்ற ஆசிரியர்களும், பாட நிபுணத்துவமுள்ள ஆசிரியர்களும் வகுப்பறைகளில் ஒன்றிணைவதன் மூலமாக ஏற்பாடுகள் சாத்தியமாக்கப்படவேண்டும்.

06. வகுப்பறைகளில் பரீட்சை நோக்குகள், மதிப்பீட்டு நடை முறைகள் என்பவற்றுக்கு அமைவான கலைத்திட்ட முன் நகர்வில் கூடிய அக்கறை செலுத்தவேண்டிய நிலைமைகள் உள்ளதுடன் புறக்கலைத்திட்ட விடயங்களில் கண்ணியத் துடன் கூடியதான ஏற்பாடுகளும் எதிர்பார்க்கப் படுகின்றன.

## முடிவுரை

உட்படுத்தல் கல்வி தொடர்பான கொள்கைகள் இத்தகைய சவால்களை வெற்றிகொள்வதையும் நோக்கமாகக் கொண்டே அமைந்தன. எனினும், நடைமுறையில் எந்தவொரு சமூகம் சார்ந்த கல்வியுலகு சார்ந்த சவால்களும் எதிர்கொள்ளப்பட்டு வெற்றிகாணும் நிலையில்தான் அதன் சமூகப்பயன் நோக்கு நிறை வேறுகின்றது. மாற்றுவலுவுள்ள பிள்ளைகள் எங்கள் சமூகத்தின் தவிர்க்கவியலா வகிபங்குகள் என்பதற்கு அப்பால் எமது சமூக மேம்பாடு பற்றிய சிந்தனைகளில் வலுப்படுத்தப்பட வேண்டிய பிரிவினர் என்ற வகையில் 'உட்படுத்தல் கல்வி' என்பது எமது சமூகமேம்பாட்டுக்கான ஒரு பக்கத்துக்கான கதவினை அகலத்திறந்து விடுவதால் அதற்கான சவால்களை வெற்றிகொள்ளவதில் ஆசிரியர்கள், பெற்றோர்கள், கல்வி நிர்வாகம், சமூகநிறுவனங்கள், சமூகப்பணி மையங்கள் யாவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது எமது பொறுப்பு.

# ஆசிரிய முன்மாதிரிகளும் தலைமைத்துவமும்

03

## Teacher-Role Model and Leadership

### அறிமுகம்

இன்று கல்வி உலகு மிகவிரிவுற்ற போதிலும் மாணவர்களும் ஆசிரியர்களும் ஏனைய கல்வி நிர்வாகிகளும் வகுப்பறைகளினுள்ளும் வெளியுலகிலுமாகப் பல சவால்களை எதிர்கொள்கின்றனர். வகுப்பறைகள் சமூகத்தின் சிற்றுருவங்களாக அமைகின்றன. மாணவர்கள் அந்தச் சமூகச் சிற்றுருவின் தவிர்க்கவியலாத கூறுகளாவர். வகுப்பறைகளிலும் சமூக வெளியிலும் ஆசிரியர்கள் மாணவர்களுக்கு நல்ல 'மாதிரி வகிபங்குகளாக' (role model) விளங்கும் அதேவேளை தங்களின் தலைமைத்துவ ஆற்றல் மற்றும் முகாமைத்துவத் திறன்களால் மாணவர்களை எதிர்காலச் சமூகத்துக்கான மனிதர்களாக மாற்றும் பணியினை ஆற்றுகின்றார்கள்.

ஆசிரியர்கள் தாம் எடுக்கும் பல்வேறு வகிபங்குகளால் மாணவர்களுக்கு முன்மாதிரிகளாகச் செயலாற்றுகின்றனர். தமது முகாமைத்திறன்களை வளர்த்துக்கொண்டு வகுப்பறையினையும் அங்குள்ள மாணவர்களின் சகலவிதமான நடத்தைகளையும் முகாமை செய்யும் பாரிய பொறுப்பினை ஏற்றுள்ளனர். இதனால் மாணவர்களின் வகிபங்கு மாதிரிகளாகவும் தலைமைத்துவ வடிவங்களாகவும் முகாமை

ஆற்றலுக்கான வழிகாட்டிகளாகவும் ஆசிரியர்கள் அமைந்து விடுகின்றனர்.

இந்த அடிப்படையில் இங்கு பின்வரும் இரு விடயங்கள் நோக்கப்படவுள்ளன.

1. ஆசிரியர்கள் தமது வகிபங்கினையும் தலைமைத்துவ ஆற்றலையும் முகாமைத்துவத் திறனையும் மாணவர்களிடம் எவ்வாறு சுவறச் செய்கின்றனர்? அதன் போது அவர்கள் கையாளவேண்டிய நுட்பங்கள், தந்திரோபாயங்கள் எவை? சந்திக்கும் சவால்கள் எவை? கைக்கொள்ளவேண்டிய மாற்றுவழிகள் எவை? போன்ற வினாக்களுக்கு விடைகாணுதல்.

2. மாணவர்கள் எவ்வாறு ஆசிரியர்களைத் தமது முன்மாதிரிகளாகப் பின்பற்றித் தமது தலைமைத்துவப் பண்புகள், முகாமைத்துவ ஆற்றல்களை வளர்த்துக் கொள்கின்றனர்? அதற்காக அவர்கள் எதிர்நோக்கும் சவால்கள் எவை? அவை சமூக வாழ்வில் பிறழ்ந்து போகும் தருணங்கள் எவை? போன்ற வினாக்களுக்கு விடை காணுதல்.

இந்த இரு விடயங்களும் பகுப்பாய்வு செய்யப்படும் தருணத்தில் ஆசிரியர்கள் மும்முனைப் பொறுப்புடையவர்களாகின்றனர்.

1. மாணவர்களுக்கு முன்மாதிரியாக அமைந்து மாணவர்களின் முன்மாதிரியான சமூக வகிபங்கினை உறுதிப் படுத்துதல்.

2. மாணவர்களின் தலைமைத்துவ ஆற்றலைச் சமூகத்துக்கு வழங்க ஆசிரியர்கள் தமது தலைமைத்துவப் பண்பினைப் பயன்படுத்துதல்.

3. மாணவர்களின் முகாமை ஆற்றலை வளர்க்க ஆசிரியர்கள் தமது முகாமைத்துவ நுட்பங்களை வளர்த்தலும் வெளிக்கொணர்தலும்.

இத்தகைய பெறுப்புக்களை ஆசிரியர்கள் நிறைவேற்ற வலியுறுத்துவதே இந்தக்கட்டுரையின் நோக்கம்.

**வகுப்பறைகளின் சமூக முக்கியத்துவம்**

வகுப்பறையின் இயக்கத்தினை சமூகவியல் பின் புலத்தில் நின்று தரிசிக்கும்போது மேற்குறித்த பொறுப் புக்களை ஆசிரியர்கள் நிறைவேற்றுவதில் கோட்பாட்டு ரீதியான வேணவாக்களுக்கு அப்பால் செயற்பாட்டு ரீதியான பல சவால்களை எதிர்கொள்வதை அறியமுடிகின்றது.

வகுப்பறை ஒன்றின் தோல்வி வாழையடி வாழையாகி விடுகின்ற நிதர்சனத்தினை சமூகங்கள் வெற்றிகொள்ளத் தலைப்பட்டு பல முயற்சிகளை எடுத்துவருகின்றன. ஒட்டு மொத்தமாக ஆசிரியர்களின் தோள்களில் ஏற்றப்பட்டுள்ள சுமைகளை பங்கிட்டுச் சுமப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போதிலும்கூட வகுப்பறையில் ஆசிரியரின் முக்கித்துவம் ஒரு சமூக முக்கியத்துவமாக உணரப்படுவது தவிர்க்கமுடியாத ஒன்றாகியுள்ளது.

பாடசாலை வகுப்பறைகள் எதிர்காலச் சமுதாயத்தின் பயிலிடங்கள். வகுப்பறைகளில் மாணவர்கள் தமது சமூக வகி பங்கினை உணர்கின்றனர். ஓர் ஆசிரியர் ஒரு வகுப்பறையை வெற்றிகரமாகக் கையாளும்போது ஒரு நல்ல சமுதாயம் உருவாக்கப்படுகின்றது. இந்த அடிப்படைகளை Parsons என்ற சமூகவியலாளர் விளக்கும் போது;

1. ஆசிரியர்கள் தமது மாணவர்கள், எதிர்காலத்தில் எடுக்கவிருக்கும் முதிர்வகிபங்கிற்கு (adult role) ஏற்ப மாணவர்களின் வெற்றிகரமான ஆற்றுகைக்கு (successful performance) அவர்களது ஈடுபாடு (commitment) மற்றும் வினையாற்றல் திறன்கள் (capacities) என்பவற்றை வகுப்பறையில் உள்ளகப்படுத்தல் (internalize) வேண்டும்.

2. முதிர் சமூகத்தின் (adult society) நடிபங்குக் கட்டமைப்பினுள் மனித வளங்களை எவ்வாறு பகிர்ந்து ஒதுக்கிடல் (allocate) செய்ய வேண்டும் என்பது வகுப்பறையில் சாத்திய மாகின்றது.

3. எதிர்காலத்தில் மாணவன் ஒருவன் எடுக்கவிருக்கும் முதிர்வகிபங்கு ஆற்றுகைக்கு ஒரு மாணவனது தனித்துவ ஆளுமையினை விருத்திசெய்ய மனவெழுச்சி மற்றும் தொழினுட்ப அடிப்படைகளின் பயிற்றுவித்தல் ஆசிரியர்களால் வகுப்பறைகளில் செய்யப்படுகின்றன.

4. எதிர்கால வகிபங்கு ஆற்றுகைகளுக்கு (future role-performance) அடிப்டையான முன்தேவைப்பாடுகளை வகுப்பறை சாத்தியமாக்குவதால் மாணவர்களின் சமூக மயமாக்கல் முகவராக வகுப்பறைகள் விளங்குகின்றன.

5. சமூகத்தின் பரந்துபட்ட விழுமியங்களை வாழ்வில் நடை முறைப்படுத்துவதற்கான ஈடுபாடு மற்றும் சமூகக் கட்டமைப்பினுள் பல்வகை வகிபங்குகளுக்கான சிறப்பாகக் குறித்து ஒதுக்கப்பட்ட கடமைகளை ஆற்று தலிலான ஈடுபாடு என்பன மாணவர்களிடத்தில் ஏற்படும் களமாகின்றது.

6. தனியாள் வகிபங்கிற்கான செயற்பாடுகளை ஆற்று வதற்கான திறன்களை (competence/skill) உடையவர்களாக மாணவர்களை ஆக்கும் களமாகின்றது எனக் கூறுகின்றார். இவரது கருத்துக்களின் அடிப்படையில் நின்று வகுப்பறையிலும் சமூகத்திலும் ஆசிரியர்களின் வகிபங்கு மாதிரி பற்றி ஆழமாகவும் அகலமாகவும் சிந்திக்க வேண்டிய தேவையுள்ளது.

## சமூகத்தில் ஆசிரியரின் வகிபங்கு மாதிரி

பொதுநிலை சமூகத்தில் ஒருவனது வகிபங்கு என்பது அவனுக்குரிய வேறுபட்ட பொறுப்புக்கள் மற்றும் பாத்திர வேறு பாடுகளைக் குறிக்கின்றது. சமூகத்தின் வகிபங்கு என்பது குறித்து சமூகவியலாளர்கள் பல வரையறைகளைக் கூறுகின் றனர். Robert Bierstedt என்பவர் 'அந்தஸ்து என்பதன் நடத்தை சார் அம்சங்கள் அல்லது அந்தஸ்து என்பதன் இயக்கவியல்' என்பதே வகிபங்கு என்று கூறுகின்றார். ஒருவர் தான் கொண்ட

அந்தஸ்து நிலைக்கு ஏற்ப எவ்வாறு செயற்படுகின்றார் என்பதையே வகிபங்கு என்று இவர் வரையறுக்கின்றார். Duncan Mitchell என்பவர் 'சமூக நிலையுடன் (social position) இணைந்துள்ள எதிர்பார்க்கப்படும் நடத்தைகள் 'சமூக வகிபங்கு ' என்று கூறுகின்றார். Kingsley Davis என்ற அறிஞர் கூறுவதைப்போல ஒரு தனியான நிலைக்கு (position) அவர் சில முன் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யவேண்டியுள்ளது. அவ்வாறு பூர்த்தி செய்யப்படும் முன்தேவைப்பாடுகளை 'வகிபங்கு ஆற்றுகை' (role performance) மூலமாகவே ஒருவர் ஆற்றுவார் என்ற விளக்கத்துடன் ஒப்பிட்டு நோக்குதல் வேண்டும்.

வகிபங்கு ஆற்றுகைதான் ஒருவரது வகிபங்கு நடத்தை (role behaviour) ஆகின்றது. பிரயத்தனங்கள் (efforts), பொறுப்புணர்வு (feeligs of obligation), அனுபவம் மற்றும் மரபுரிமை (experience and heredity), தனியன்களின் திறன்கள் (capacity of individuals) போன்ற அம்சங்களின் வாயிலாக ஒருவர் தமது வகிபங்கு நடத்தைகளைச் சரியாக வெளிக்கொணர முடியும். ஆசிரியரிடம் சிறந்த வகிபங்கு ஆற்றுகை, வகிபங்கு நடத்தை என்பன எதிர்பார்க்கப்படுவதற்கான அடிப்படை அவர்கள் தகுந்த வகிபங்கு மாதிரியாக அமையவேண்டும் என்ற எதிர்பார்ப்புடனே ஆகும்.

இந்த அடிப்படைகளில் நின்று பிரயோகரீதியாக ஆசிரியர்கள் மாணவர்களின் தனி ஆளுமை விருத்திக்கு ஏற்ற மாதிரிகளாக அமையும்வகையினை தெளிவுபடுத்தலாம். N.Graves என்பவர் ஆசிரியர் பற்றிக்கூறும் ஐந்து பரிமாணங்கள் முக்கியமானவை. பிள்ளைகளுக்குச் சிறப்பான அறிவினை வழங்குவதன் மூலமாக தொழினுட்பரீதியான பரிமாணம் நிறைவேற்றப்படுகின்றது. பிள்ளைகள் அறிவைப்பெறுவதற்கான முனைப்பை வழங்குவதன் மூலம் முனைப்பு ரீதியான பரிமாணம் ஆசிரியரால் நிறை வேற்றப்படுகின்றது. பிள்ளைகள் தமது சூழலில் தனிப்படவும் சமூகரீதியிலும் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்கும் போது அவர் மீது அக்கறை

காட்டுவதால் உணர்வு ரீதியான பரிமாணம் வெளிப்படுகின்றது. பாடசாலை மட்டத்திலும் வகுப்பறைகளிலும் முகாமைத்துவ விடயங்களில் கொள்ளும் ஈடுபாடு காரணமாக ஒழுங்கமைப்பு மையமான பரிமாணம் நிறைவேற்றப்படுகின்றது. இறுதியில் சமூகத்தில் ஆசிரியர் கொள்ளும் தொடர்பு காரணமாக சமூகமட்டப் பரிமாணம் வெளிக்கொணரப்படுகின்றது. இந்த ஐந்து வகிபங்குகளை ஆற்றுவதன் மூலம் ஆசிரியர் சிறந்த வகிபங்கு மாதிரியாக மாணவரிடத்தில் தமது ஆளுமையினைச் சுவற (difussion) செய்கின்றார். தமது 'வசீகரத்தன்மை' (charisma), உயிர்ப்பூட்டல் ஊக்கல் (inspirational motivaton), புலமைசார் தூண்டல், (intellectual stimulation), தனியாள் கவனிப்பு (individual considration) என்பவற்றின் மூலம் ஆசிரியர் மாணவர்களின் ஆளுமையுள் உள்ளிறங்கிவிடுகின்றனர். இதன்மூலம் மாணவர்களின் நல்லதொரு மாதிரியாக அமைந்து ஆசிரியர் வழிகாட்ட முடியும்.

**ஆசிரியரின் தலைமைத்துவம்**

ஆசிரியர் ஒருவர் எதிர்காலச் சமூகத் தலைவர்களைச் செதுக்கும் சிற்பி என்ற வகையில் தன்னுள் உள்ளமையப் பெற்ற தனிநபர் ஆற்றல்களை மாணவர்களின் திறன் விருத்திக்கும் தலைமைத்துவப் பண்பின் விருத்திக்கும் பயன்படுத்தல் வேண்டும். ஆசிரியர் ஒருவர் நிலை மாற்றலுக்கான தலைமைத்துவப்பண்பினை (transformational leadershlp) கொண்டிருக்வேண்டும் என எதிர்பார்க்கப் படுகின்றது. 'ஒரு குழுவின் இலக்கினை முன் நகர்த்துவதற்கு அக்குழுவில் செல்வாக்குச் செலுத்தும், குழுவை திசை முகப்படுத்தும் ஒருவரே தலைவர்' என்று வரையறுக்கப் படுகின்றார். அத்துடன் 'இலக்கினை அடையும் நோக்கில் தொடர்பாடல்வழி ஒரு குழுவில் செல்வாக்குச் செலுத்தும் செயன்முறையே' தலைமைத்துவம் எனவும் கூறுவர்.

சமகாலத்தில் நிலை மாற்றுதலுக்கான ஒரு தலைமைத் துவத்தின் பண்புகளாகப் பல்வேறு விடயங்கள் கூறப்படு கின்றன. மனவெழுச்சி உறுதிப்பாடு, சமூக சகவாசப் பிரியம்,

திறந்த மனப்பாங்கு, ஏற்றுக்கொள்ளல், மனச்சாட்சிப்படி செயலாற்றுதல், விமர்சனம் ஏற்றுகும் மனநிலை, நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தல், விமர்சனப்பார்வை உடையவராதல், பொறுப்பேற்கும் துணிவு, நடுநிலையாகத் தொழிற்படுதல், சாத்தியமான மாற்றுவழிகளைச் சிந்தித்தல், இடர்களின்போது உதவிச் செயலாற்றுதல், எதிர்காலம் பற்றி முன்னோக்குதல், நெகிழ்வுடையவராதல், சாதுரியப்பண்பு, சுயநம்பிக்கையும் உறுதிப்பாடும், பிறர்மீது கட்டுப்பாடு வகிக்காது சேர்ந்து தொழிற்படும் ஊக்கம், முன்வந்து செயலாற்றுதல், நேர்மையாக இருத்தல், உயர்ந்த செயற்படு சக்திமட்டம் உடையவராதல் போன்ற ஏராளமான பண்புகளைத் தாமும் உள்வாங்கி பின்னர் மாணவர்களிடத்து நிலைமாற்றம் செய்யவும் சாதகமான வழிகளை ஆசிரியர் வரித்துக்கொள்ள வேண்டிய தேவை உள்ளது. இவை ஒவ்வொன்றும் எப்படி ஒரு வகுப்பறை சூழலில் சாத்தியமாகும் என்ற வினா எழுவது தவிர்க்க வியலாதது. ஆனால் இவ்வளவு பண்புகளும் ஆசிரியர்களின் வழி மாணவர்களிடம் வகுப்பறையிலேதான் கடத்தப் படுகின்றது என்பது கல்வி உளவியலாளர்களால் வலியுறுத்தப்படுகின்றது.

## ஆசிரியர் முகாமைத்துவம்

இன்றைய உலகில் தனியாள், குடும்பம், சமூகம், நிறுவனங்கள், அமைப்பாண்மைகள், என்பவற்றின் முகாமையிலும் முகாமைத்துவ நுட்பங்களிலும் முன்னேற்றகரமான பல வழிமுறைகள் முன்மொழியப்படுகின்றன. Darid என்ற கல்வியியலாளர் ஆசிரியர்களுக்கு நான்கு பரிமாணங்கள் உண்டு என்கிறார். அதாவது சமூகத்தலைவர்கள், மேம்பாட்டுப் பணியாளர், முதலாந்தர முகாமையாளர் மற்றும் மேற்பார்வை செய்பவர் என்பவை ஆசிரியரின் முகாமைத்துவ முக்கியத்துவத்தினை வலியுறுத்தும் பரிமாணங்களாக விளக்கப் படுகின்றான்.

ஆசிரியர் ஒருவர் பகுப்பாய்தல், திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், வழிப்படுத்தல், இசைவுபடுத்தல், மதிப்பீடு செய்தல்

போன்ற முகாமைத்துவக் கூறுகளைத் தமது மாணவர்கள் தொடர்பாக வகுப்பறைகளில் நாளாந்தச் செயற்பாடுகளில் பிரயோகிக்கின்றார். அதன் மூலமாக தம்மைச் சார்ந்த மாணவர் தொகையினருக்கு ஒரு முகாமையாளராகப் பணியாற்றி மாணவர்களிடம் இத்தகைய திறனை வளர்ப்பதில் ஈடுபாட்டுடன் செயலாற்றுகின்றார். மாணவர்களின் தலைமைத்துவத்திறன் மற்றும் சமூக வகிபங்கு மாற்றங்கள் என்பன ஆசிரியர்களின் முகாமைத்துவ ஆற்றல்களினால் வழி நடத்தப்படுகின்றன.

ஆசிரியர் ஒருவர் நேரமுகாமை, வேகமாகச் செயலாற்றுதல், சத்தியத்துடனும் இயல்பான யதார்த்த நிலையுடனும் செயல்புரிதல், மாணவர்களிடையே வேலைப் பகிர்வை சாத்தியமாக்கல், பதிவுகள் மதிப்பீடுகளை இற்றைப்படுத்துதல், திட்டமிடலும் நடைமுறைப்படுத்த லுக்கான ஆயத்த நிலையும், வகுப்பறை ஒழுங்கமைப்புகள், மாணவர் எதிர்கொள்ளும் பிணக்குகளை கருத்திலெடுத்தல் என்று தொடரும் பல முகாமைத்துவ வேலைகளை வகுப்பறைகளில் அமுலாக்குவதன் மூலமாகத் தன்னிடம் கற்கும் ஒவ்வொரு மாணவனுக்கும் முகாமைத்துவ வழிகாட்டி யாகின்றார்.

## நிறைவுரை

ஆசிரியர்கள் தகுந்த கோட்பாட்டுத் தெளிவுடனும், அவற்றைப் பிரயோகப்படுத்துகின்ற தொழினுட்ப மற்றும் திறன் அடிப்படையலான வழிமுறைகளின் துணையுடனும் தொழிற்படும் பட்சத்தில் அவர்களின் முன்னுதாரணமான வகிபங்கு சாத்தியமாகின்றது. இந்த வகிபங்கின் வகுப்பறைத் தொழிற்பாடானது. எதிர்காலத்தில் எமது சமுதாயத்திற்கு நல்ல முகாமையாளர்களையும் தலைவர்களையும் தரவல்ல ஒரு முக்கியமான சமூகமாக வகுப்பறைகளை மாற்றிய மைக்கும். ஆசிரியர்கள் தமது மகத்தான பணியின் உயிர்ப்பினை என்றும் கௌரவத்துடன் கண்ணியத்துடனும் போற்றுவதே இதற்கான அடிப்படைத் தேவையாகும்.

# இளையோர் பண்பாடும் சமூக விலகலும் : நிகழ்போக்குகளும் மாற்றத்துக்கான உபாயங்களும் 04

## Youth Culture and Social Deviance: Present Trends and Strategies for Change

இன்று உலகம் முழுவதும் மனிதவாழ்வின் போக்கினை மாற்றியமைத்துவரும் பல்வேறு சமூக விவகாரங்கள் தொடர்பில் பெருமளவு அக்கறை செலுத்தப்படுகின்றது. சமூக விவகாரங்கள் அவை விரவியுள்ள வெகுஜனத் தளங்களைப் பொறுத்து கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எந்த விவகாரமாயினும் அது சமூகத்திற்குத் தரும் எதிர்முகமான விளைவுகள் குறித்து பல்வேறு மாற்றீடுகளைச் சமூகம் எதிர் பார்த்து அவாவி நிற்கின்றது. இவ்வாறான விவகாரங்களில் ஒன்றான இளையோர் விலகல் (youth deviance) ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துள்ளது. இலங்கைச் சமுதாயத்தினைப் பொறுத்தவரையில் போருக்குப் பின்னான சமூகத்தின் போக்குகளில் தவிர்த்துவிடமுடியாத ஆய்வுத் தேவையினை வலியுறுத்தி நிற்கும் விவகாரங்களில் ஒன்றாக இளையோர் விலகல் உருவெடுத்துள்ளது. இளையோர் பண்பாட்டில் (youth culture) செல்வாக்குச் செலுத்துகின்ற புறவிசைகளின் காரணமாக புதிய வகையான இளையோர் உபபண்பாடுகள் (youth sub - cultures) தோற்றம் பெறுகின்றன. இவற்றின் அபரிமிதமான உருவாக்கம் மற்றும் பரவுகையால் சமூக நிலையில்

இளையோரின் நியமம் சார்ந்த பல விவாதங்களும் கருத்தாடல்களும் நிகழ்ந்த வண்ணம் உள்ளன. இத்தகைய கருத்தாடல்களில் உணர்வுகளுக்கு கொடுக்கும் முக்கியத் துவத்தை அறிவுசார் ஆராய்ச்சிக்குக் கொடுப்பது குறைவாக அமைந்துவிடுவதால் இளையோர் விலகல் தொடர்பான பொத்தம் பொதுவான முடிவுகள்தான் எஞ்சிநிற்கின்றன. இந்தப் பொது முடிவுகள் சில சமயங்களில் இளையோரை சமூகவாழ்விலிருந்து புறந்தள்ளிவிடும் வலிமைமிக்கவையாகி விடுவது பேராபத்தினைத்தரும். இதனால், இளையோர் விலகலின் போக்குகள், இளையோர் விலகலுக்கான பின்புலக் காரணிகள், அவ்விலகல்களை முகாமைசெய்தல் தொடர்பிலான அணுகுமுறைகள் தொடர்பிலான சில சாத்தியமான சிந்தனைகளை கருத்தாடவேண்டியதன் அவசியத்தை இந்தக் கட்டுரை தனது இலக்காகக் கொள் கின்றது.

**இளையோர் : ஒரு கருத்தியல் பார்வை**

இளையோர் என்பவர் யாவர்? இவர்களின் இயல்புகள் எவ்வாறு அமையும் என்பது தொடர்பாக சமூகவியலாளர் மற்றும் உளவியலாளர்களின் விளக்கங்கள் வேறுபட்டவை. 'இளமை என்பது வாழ்வின் காலப்பகுதி பற்றிய ஒரு விடயமல்ல அது ஒரு மனநிலையே. இது ஒரு செயலாற்றலுக்கான திறன் (skill) சம்பந்தப்பட்ட விடயமே. இது ஒரு கற்பனையாற்றல் களின் தரம் (quality of imagination) சம்பந்தமான விடயம் என்பதுடன் மனவெழுச்சிகளின் உந்துசக்தியான வாழ்வின் ஆழமான ஊற்றின் உற்சாகநிலை' என்று பொதுவாக விளக்கம் தருவர்.

தொழிற்பாட்டியல் சமூகவியலாளர்கள் இளையோரை ஒரு பண்பாட்டின் விசேடத்துவமான வடிவமாக (as a distinctive form of culture) கருதுகின்றனர். ஏனெனில் இளையோர், அவர்களின் பெற்றோர் தமக்கெனக் கொண்டிருக்கும் நியமங்கள், விழுமியங்களிலிருந்து வேறுபட்ட சில விசேடத்

துவமான விழுமியங்கள் நியமங்களைக் கொண்டுள்ளனர். அத்துடன் இளையோர், சிறுவர் பருவத்திற்கும் முதுமைப் பருவத்திற்கும் இடையிலான ஒரு நிலைமாறு காலத்தில் அமையும் மானுட சமூகமேம்பாட்டுக்குரிய ஒரு அவத்தையில் 'இருமனப் போக்குக்கு' (ambivalence) உரிய காலத்தைப் பிரதி பலித்திருக்கும் எண்ணங்களைக் கொண்டவர்களாகின்றனர்.

உளவியலாளர்கள் கட்டிளமைப் பருவம் என்பதற்கு வரையறை தருகின்றபோது சிறுபிள்ளைப் பருவத்துக்கும் முதுமைப் பருவத்திற்கும் இடையிலான காலப்பகுதி எனக்குறிப்பிடுகின்றனர். அதாவது குழந்தைப்பருவ மற்றும் சிறுபிள்ளைப்பருவ அனுபவங்களின்வழி முதுமைப்பருவத் துக்கான நிலை மாற்றத்தினை தகவமைத்துக் கொள்ளும் நிலையாகின்றது. இந்த நிலை பற்றி ஆய்வு செய்த G.Sanley Hall என்பவர் கட்டிளமைப் பருவத்தினருக்கும் அவர்களிடை யேயான விசேட நடத்தைக் கோலங்களுக்கும் இடையிலான உறவுகளை விளக்கியுள்ளார்.

சமூகவியலாளர்கள் மற்றும் உளவியலாளர்களின் இந்த விளக்கங்களின் அடிப்படையில் இளையோரின் இயல்புகள் தொடர்பாக பின்வரும் விடயங்களைப் பட்டியல்படுத்த முடியும்.

1. இவர்கள் புதிய விழுமியங்கள், புதிய சிந்தனைகள் மற்றும் புதிய வாழ்வுக்கான வழிகளை பிரதிநிதித்துவப்படுத்துப வர்களாதல் வேண்டும்.
2. பழைய பரம்பரையினர் புதிய சிந்தனைகளை கொண்டிருப்பதில் சிக்கல்கள் இருப்பதால் இளையோரின் சிந்தனைகள் சமுதாயம் தன்னை மறுசீரமைக்க அவசியமானவை.
3. இளையோர் எப்போதும் எதிர்காலம் தொடர்பான நம்பிக்கையும் உறுதிப்பாடும் உடையதான பார்வை உடையவராதல் வேண்டும்.
4. சந்தர்ப்பங்களுக்கு ஏற்ற வகையில் தங்களின்

எண்ணங்களை சிந்தனைகளை தகவமைக்க சீரமைக்க மற்றும் மாற்றக் கூடியவராதல்.

5. இளையோர் தங்கள் பண்பாட்டை மறுசீரமைப்பவர்களாக வேண்டும்.

6. இளையோர் பாரம்பரியமற்ற சிந்தனைகளை ஆத்மார்த்த மாயும் ஆர்வத்துடனும் ஏற்றுக் கொள்பவர்களாதல் வேண்டும்.

7. புதியவற்றை முயலுவதற்கும் தவறுகளிலிருந்து கற்றுக்கொள்வதற்கும் ஏற்ற வலுவை கொண்டவர்களாக இளையோர் உள்ளனர்.

8. உலகின் சவால்களை எதிர்கொள்ளக்கூடிய திறன்களும் விளையாட்டாகச் சாதிக்கும் மனப்போக்கும் கொண்ட வர்களாதல் வேண்டும்.

9. இளையோரின் வலு, புத்திக்கூர்மை மற்றும் இளையோர் வளம் என்பவற்றை பூரணமாகவும் பொருத்தமாகவும் பயன்படுத்தி 'பயங்கரவாதத்தை' ஒழித்தல் போன்ற முக்கியமான பங்கை ஆற்றலாம்.

10. இளையோர் மரபுவழியான வேலைவாய்ப்புக்களைவிட முயற்சியாண்மைகளில் ஈடுபடுபவர்களாக வேண்டப்படு கின்றனர்.

11. உலகின் நாகரிகமானதும், கூட்டுறவானதும் மற்றும் சமாதானமானதுமான நிலையினால் இளையோரின் நம்பிக்கைகள் பூர்த்தியாக்கப்பட வேண்டும்.

12. இளையோர் பூரணமான துடிப்புள்ள எண்ணங்களைக் கொண்டிருப்பதால் அவற்றை பொருத்தமான ஊக்குவிப்பு மற்றும் போதுமான வழிகாட்டலால் மேம்படுத்த வேண்டும்.

இவை வெறுமனே இளையோர் தொடர்பான இயல்புகள் மாத்திரமன்றி அவர்கள் தொடர்பான சமுதாயத்தின் எதிர்பார்ப் புக்களுமாக அமைகின்றன. இத்தகைய எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்யும் வகையில் இளையோர் தொழிற்படுகின்றனரா? என்பது எம்முன் விஸ்வரூபமாக எழும் வினா. இந்த வினாவிற்கு 'இல்லை' என்பதுதான் பொது நிலைப் பதிலானாலும் அப்பதில்

விஞ்ஞானபூர்வமானதா? தர்க்க ரீதியானதா? என்பது ஆராயப்பட வேண்டியதே. இந்த நிலையில் இன்றைய இளையோரின் உப - பண்பாடுகள் குறித்து சற்று விளக்கம் பெறுவது அவசியம்.

## இளையோர் பண்பாடு மற்றும் இளையோர் உப - பண்பாடு

இளையோர் பண்பாடு மற்றும் இளையோர் உப-பண்பாடு ஆகிய சொற்பிரயோகங்கள் தம்முள் வேறுபட்டவை. இளையோர் பண்பாடு என்பது எல்லா இளையோர் களுக்குமானது. இளையோர் உப-பண்பாடு என்பது குறித்தவொரு இளையோர் குழுவுக்கானது. இன்றைய சமூக நிலையில் இளையோர் பண்பாடு என்பது அவர்களுக்கான உப-பண்பாடாகவே இனங்காணப்படுகின்றது. இதற்கான அடிப்படைக் காரணமாக விளங்குவது இளையோரின் மீதான புறநிலைக் காரணிகளின் செல்வாக்கு ஆகும். இளையோர் உப-பண்பாடு அல்லது பண்பாடு என்பது உண்மையில் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட இளையோரின் இயல்புகள் மற்றும் இளையோர் பற்றிய சமூக எதிர்பார்ப்புக்களுடன் தொடர்பான வையாக அமையும் போது அது சமூகத்தால் அங்கீகரிக்கப் படுகின்ற நேர்முகத் தன்மையாகின்றது. மாறாக சமூக எதிர் பார்ப்புக்களுக்குப் புறம்பான வகையில் அமையும் நடத்தைகள் இளையோர் பண்பாட்டில் உப-பண்பாட்டில் அடங்கும்போது அவை சமூகவிலகல்களாக இனங்காணப்படுகின்றன. இதுவே இளையோர் விலகல் நடத்தைகள் அடையாளப் படுத்தப்படுகின்றது. இத்தகைய விலகலானது இன்றைய சமுதாயத்தில் அதன் நலநிலைக்கு பாரிய சவாலாகி வருகின்றது. இதனால் இளையோர் பண்பாட்டின் எதிர்நிலைக் கூறுகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இளையோர் பண்பாட்டின் எதிர்நிலைக் கூறுகளில் மதுப்பாவனை, வன்குழு நடவடிக்கைகள், போதைப்பொருட் பாவனை, சூதாட்டம், திருட்டுக்களும் சூறையாடலும், ஆட் கடத்தல்கள், குழுச் சண்டைகளும் குழுவாதமும், பாலியல் வன்புணர்ச்சி போன்ற பல்வேறு நடத்தை ஒழுங்கமைவின்மை

களுடன் தொடர்புடைய விடயங்கள் இன்று முதன்மையான விவகாரங்களாகப் பேசப்பட்டு வருகின்றன.

இளையோர் பண்பாட்டின் தனித்துவமான உருவாக்கத்துக்கான காரணிகள் பல. இந்தக் காரணிகள் பிரதேச பண்பாட்டு வேறுபாடுகளுக்கேற்ப தனித்துவம் வாய்ந்தவை. ஆயினும் பொதுநிலையில் இளையோர் பண்பாட்டுக்கான காரணிகளாக பின்வருவன அடையாளப்படுத்தப்படுகின்றன.

1. நுகர்வு வாதமும் பொருளாதாரச் செழிப்பு நிலையும்
2. சிறுவர் பருவ சமூகமயமாக்கலின் விளைவுகள்
3. பதின்ம வயது தாண்டிய கல்வியின் தொடர்ச்சி
4. பதின்ம வயதினர் மீதான வெகுஜன ஊடகங்களின் தாக்கம்
5. பெற்றாரின் பொறுப்புக்களிலான தேக்கநிலை
6. குடும்பங்களிலான உடைவும் ஒழுங்கமைவின்மைகளும்
7. சட்டத்தை நடைமுறைப்படுத்துதல் தொடர்பான அதிகாரம் மற்றும் சட்டத்துக்கு மதிப்பளித்தலிலான குழப்ப நிலைகள்
8. கல்விசார் நிறுவனங்களிலான ஒழுக்கங்களில் நிலவும் தேக்க நிலைகள்
9. மாற்றங்கள் யாவையும் எழுந்தமானமாக அனுமதியளிக்கும் சமூக மனோபாவம்
10. சமுதாய விழுமியங்களிலான உடைவுகள்

மேற்கண்ட காரணிகள் தொடர்பிலான தெளிவான விளக்கத்தினை பெறுவதன் மூலம்தான் இளையோர் விலகல் தொடர்பான விவகாரங்களுக்கான நடைமுறைச் சாத்தியமான தீர்வுகள் முன்வைக்கப்படலாம். அதுமாத்திரமன்றி மேற்கண்ட காரணிகளின் தாக்கத்தினை குறித்த பிரதேசத்துக்கெனத் தனித்துவம்வாய்ந்த சமூக, பொருளாதார, பண்பாட்டு நிலைகளுடன் பொருத்தி ஆராய்கின்ற போதுதான் தீர்வுகள் எய்தப்படுகின்றன.

இன்றைய உலக நிலையில் உலகமயமாக்கச் செயன் முறையின் விளைவாக நுகர்வுக் கலாசாரம் மிகவும் அபரிமிதமாக வளர்ந்துள்ளது. இதன் விளைவாக மக்களின் வாழ்வு முறையில் சுயநலப் போக்குகள் அதிகரித்துள்ளன. தனிமனித முன்னேற்றத்துக்கான போட்டிச் சூழலை வென்றெடுப்பதற்கான வழிமுறைகள் மற்றும் தந்திரோ பாயங்களை காலதாமதமின்றி நடைமுறைப்படுத்த துணி கின்றனர். இவையாவும் பொருளாதார செழிப்பு நிலையினை இலக்காகக் கொண்டவையே. இத்தகைய சூழல் இளை யோருக்கு அவர்களின் முயற்சி எதுவும் இல்லாமலே செழிப்பு நிலை பெறுவதற்கான வாயில்களைத் திறந்து வைத்துள்ளது. தேவைக்கும் இலக்குகளுக்கும் மேலான பொருளாதாரச் செழிப்பின்பயனை அனுபவிப்பதற்கு புதியவகைத் தேவைகளை வடிவமைத்துக் கொள்கின்றனர். அப் புதியவகைகளுக்கான மாதிரிகளை (models) தங்கள் வாழ்வியல் புலங்களுக்கு அப்பாலான பண்பாட்டுச் சூழமைவுகளிலிருந்து பெற்றுக் கொள்கின்றனர். இதனால் அவை சமூக பண்பாட்டு நிலைக்குப் பொருந்தாமை என்ற முரண் நிலைக்கு உட்படுவதால் அவற்றைத் தமதாக்கிக் கொள்ளும் 'அவாவுடன்' இருக்கும் இளையோர் சமூக விலகலாளர்களாக நோக்கப்படும் நிலை உள்ளது.

இளையோர் என்ற பருவத்தினர் குழந்தைப் பருவம் மற்றும் சிறுபிள்ளைப் பருவம் ஆகிய நிலைகளில் தாம் பெற்றுக் கொண்ட சமூகமயமாக்கலின் திரண்ட அனுபவங் களைச் சுமந்தபடிதான் இளமைப் பருவத்திற்கு வருகின்றனர். இதனால் முன்னைய பருவங்களிலான சமூகமய மாக்கலிலான பிரச்சினைகள் இளையோரின் சமூகப் பொருத்தப்பாட்டை பாதிக்கும் காரணிகளாகி தொடர்கின்றன. சிறுபிள்ளைப் பருவத்திலான தண்டனைகள், சிறுபிள்ளைப் பருவத்திலான பாலியல் துன்புறுத்தல்கள், சிறுபிள்ளைப் பருவத்தினர் மத்தியில் திணிக்கப்படும் குடும்ப வன் முறைகளின் விளைவுகள் போன்றவற்றின் விளைவாக சமூகம யமாக்கலில்

ஏற்பட்ட முரண்பாடுகள் அவர்கள் இளமைப்பரு வத்தினை அடையும்போது பிரதிபலிப்பதன் விளைவாகவும் இளையோரின் சமூக விலகல்கள் நிகழ்கின்றன.

பொதுவாக பதின்ம வயதினர் (teenagers) ஒரு பருவ மாற்றத்தின் பதற்ற நிலைக்கு உட்படுபவர்களாக உளவியலாளர்கள் விளக்கமளிப்பர். ஒருவனுக்குரிய கல்விக் காலத்தில் பாடசாலைக் காலம் பதின்ம வயதையும் தாண்டி நீட்சி பெறுகின்றபோது பிள்ளைகளிடம் 'இளமை தொடர்பான உணர்வு'(youth feeling) அதிகரிக்கின்றது. இதனால் பாடசாலைக் காலத்தில் தம்மை ஒரு விசேட வகைக்குரி யவர்களாக அடையாளப்படுத்திக் கொள்ள முயல்கின்றனர். இந்த முயற்சியில் புதிய புதிய நடத்தைகளை வெளிப்படுத் துகின்றனர். இந்த நடத்தைகள் பொது நியமத்தில் மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் நடத்தைக் கோலங்களி லிருந்து முரண்பட்டவையாகின்றன. அம்முரண் நடத்தைக் கோலங்களால் அடையாளப்படுத்தப்படும்போது இளையோர் விலகலாளர்களாகக் கணிக்கப்படும் நிலைக்கு வருகின்றனர்.

தகவல் தொடர்பாடலின் விருத்தியும் அதனோடு இணைந்த வெகுஜன ஊடகங்களின் விருத்தியும் இளையோர் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன. சமகாலத்தில் முதியவர்களாக இருப்பவர்களுக்கு அவர்களின் இளமைப் பருவத்தில் கிடைத்திராத தொடர்பாடல் வசதிகளும் தொடர்பூடகங்களும் இளையோருக்குக் கிட்டியுள்ளன. எழுத்து மற்றும் கேட்டல் வழியான அறிகையைக் காட்டிலும் காட்சி வழியான அறிகைக்கான சந்தர்ப்பங்களை இன்றைய இளையோர் அதிகளவில் பெறுகின்றனர். இது ஆழ்ந்த ஆராய்வின் பின்னான உள்வாங்கலைப் பின்தள்ளி இளையோரின் இயல்புக்கு ஏற்ற வகையில் மிக அவசரமான தேர்வுகளுக்கு வழிசமைக்கின்றது. குறிப்பாக காட்சி ஊடகங்கள் வழியே இளையோர் சில தவறான மாதிரிகளையும் முன்னுதாரணங்களையும் பெற்று உள்வாங்கிக்கொள்ள வழி ஏற்பட்டுள்ளது. இது பரம்பரை இடைவெளி சார்ந்த கருத்து

நிலைகளுடன் கூடவே தொழிற்படும் தருணங்களில் இளையோர் பற்றிய முதியோரின் 'அதிருப்தியாக' வெளிப்பட்டு நிற்கின்றது. வெகுஜன ஊடகங்கள் ஒரு 'வெகுஜன சமூகத்தை' (mass society) எவ்வாறு ஏற்படுத்த முனைகின்றது என்பது பற்றி ஆய்வு செய்த 'பிராங்போட்' சிந்தனாகூடத்தினர் Hypodermic syringe model of media effects என்ற ஒரு கருத்தினை உரு வாக்கியிருந்தனர். இது ஒரு குறித்த பண்பாட்டு மேற்பரப்புக்கு கீழே இன்னொரு பண்பாட்டின் அடிப்படைகளை ஊசி போடு வது போல பாய்ச்சிவிடுவதை விளக்கும் கருத்தாக்கம். இந்த விளைவுக்கு பலியாகின்ற வயதுப்பிரிவினராக இளையோர் அமைந்துவிடுகின்றனர். இதனால் சுயபண்பாடு தொடர்பான விடயங்களில் அக்கறையற்ற ஒரு பிரிவினராக பார்க்கப் படுகின்றனர்.

இன்றைய சமுதாயத்தில் குடும்பங்களின் தொழிற் பாடுகள் மற்றும் கட்டமைப்புக்கள் ஈடாடிப் போகின்ற வகையில் பல அக மற்றும் புறக்காரணிகள் தொழிற்பட்ட வண்ணம் உள்ளன. உதாரணமாக ஒரு போரின் விளைவுகள் எவ்வாறு குடும்ப ஒழுங்கமைவில் மாற்றங்களை உண்டாக்குகின்றதோ அவ்வாறு குடும்பங்களின் அகத்தேயான வன்முறைகளும் குடும்பத் தொழிற்பாடுகளை சீர்குலைத்துவிடுகின்றன. இவ்வாறான தருணங்களில் இரண்டு விளைவுகள் பிரதானம் பெறுகின்றன. ஒன்று மூத்தவர்களான பெற்றோர் தமது பொறுப்பு நிலையில் தேக்கம் அடைகின்றனர். மற்றையது இளையோர் பெற்றோருக்கு மதிப்பளிப்பதில் தேக்கநிலையை அடைகின்றனர். இவை இரண்டும் சமஅளவில் குடும்பத்தின் உறவுசார் இசைவை குலைப்பனவாக அமைந்தபோதிலும் குடும்ப மட்டத்தில் இளையோரின் பொறுப்புக்களிலான தேக்கநிலை அவர்களை குடும்பங்களிலிருந்து வெளியே தள்ளிவிடுவதால் அவர்கள் சமூகத்தில் தனித்து விடப்படு கிறார்கள். தனித்து விடப்படும் இளையோர் தமது இருப்புக்காக பல சமூக விரோத செயல்களில் ஈடுபடவேண்டிய நிர்ப்பந்தங் களுக்கு ஆட்படுகின்றனர். 'போக்கிடம் அற்றவர்களாக' கணிப்புப் பெறும் இத்தகைய இளையோர் குடும்பங்களால்

மாத்திரமன்றி சமூகத்தாலும் புறமொதுக்கப்படுபவர்களாக மாறிவிடுகின்றனர்.

பல்வேறு புறக்காரணிகளின் செல்வாக்கினால் இளையோரிடம் ஒருவித 'கதாநாயகத்துவம்' (heroism) வளர்வது அந்த வயதுப் பிரிவினரின் பொதுவான இயல்புதான். ஆயினும், இந்த இயல்பு அவர்களைத் தம்மைச் சூழவுள்ள சமூகத்தின் நியமங்கள், விழுமியங்கள் மற்றும் சட்ட ஒழுங்குகள் தொடர்பான சிரத்தையினைத் தடுத்துவிடுகின்றது. இவர்களிடமுள்ள 'மன எழுச்சிகளிலான உந்து சக்தி நிலை' (vigor of emotions) காட்டாற்றினைப் போல பிரவாகிக்கும் நிலையில் நேர்முகமான முன்னேற்ற நிலையுடன் கூடிய சாதனைகளாக மாறுகின்ற அதேயளவில் எதிர்முக நடத்தைகளை சட்டவிரோதமான நிலைக்கு கொண்டு செல்லும்.

நிறுவன மயப்படுத்தப்பட்ட கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளின் பல்வேறு இலக்குகளில் பிரதானமாக அமைவது பிள்ளைகளின் ஒழுகலாற்றினை உறுதிப்படுத்துவதாகும். கல்வியின் எல்லா விதமான ஏற்பாடுகளிலும் இதற்கான உரிய முக்கியத்துவம் கொள்கையடிப்படையில் வழங்கப்பட்டுத்தான் செயன்முறை தொழிற்படுகின்றது. சமய அறநெறிக் கல்வி, பாடசாலை ஒழுக்கக் கோவைகள், இணைக் கலைத்திட்ட ஏற்பாடுகள், ஆன்மீகப் பயிற்சிக்கான வழிமுறைகள், மதநிறுவனத் தரிசிப்புக்கள் என்று நீட்சி பெறும் ஏற்பாடுகள் யாவும் பிள்ளைகளை அல்லது இளையோரை ஒழுக்க நெறிப்படுத்தும் ஏற்பாடுகளாவுள்ளன. ஆயினும், ஒழுக்கத்தின் இலட்சிய வகை (ideal type of ethic) பற்றிய இளையோரின் நம்பிக்கை மீது இந்த ஏற்பாடுகள் செலுத்தவேண்டிய கவனத்தை உணரத் தவறுகின்றன. இலட்சியவகை தொடர்பான முழுமையான நம்பிக்கை இன்றிய செயலாற்றுகை வெறும் 'சடங்காக' முடிந்துவிடும் பேராபத்துள்ளது. ஒழுக்கத்தின் இலட்சிய வகையை இளையோர்க்கு உணர்த்தாத சடங்குத் தன்மையான ஒழுக்க மேம்பாட்டுக்கான

செயலாற்றுகைகளால் இளையோரிடையே ஒழுக்கம் தொடர்பான முரண்நிலை மனோபாவம் ஏற்படுகின்றது. இவை இளையோரின் ஒழுக்கத்திலான தேக்க நிலையாக அடையாளப்படுத்தப்படுகின்றது.

உலகத்தில் மாற்றம் ஒன்றே உண்மையானது என்பதை வரலாறு எமக்குப் போதிக்கின்றது. மாற்றங்களை அகவயப்ப டுத்தாத சமூகம் தேங்கிய குட்டையாகிவிடுகின்றது. மாற்றங்களை உள்வாங்கிச் செல்வதால் சமூகம் முன்னேற்ற மடைகின்றது. இவை அசைக்கமுடியாத சமூக யதார்த்தங்க ளெனின் மாற்றம் எத்தகையது என்பது பற்றிய தகுந்த விழிப்புணர்வும் புரிதலும் அவசியமாகின்றது. மாற்றங்களை உள்வாங்குதல் என்பது ஒரு சமூகத்தின் பண்பாட்டு மற்றும் சமூக அடையாளங்களை அனுசரிக்காதவிடத்து அது அந்தச் சமூகத்தில் அதிர்ச்சிகள் மற்றும் சமூகப் பதற்றத்தினை உருவாக்கும். எல்லாவிதமான மாற்றங்களையும் எழுந்த மானமாக ஏற்றுக்கொள்ளும் ஒரு சமூகத்தின் மனோபாவத் தினால் உடனடியாகப் பாதிப்புறும் பிரிவினராகச் சிறார்கள் மற்றும் இளையோர் அமைந்துவிடுகின்றனர். ஏனெனில் மாற்றங்களைக் கபடமாக உள்நுழைக்க முனைபவர்கள் எப்போதும் அதனைச் சாத்தியமாக்கவல்ல வயதுப் பிரிவினராக இளையோர்களைக் கருதுகின்றனர். இதனால் மாற்றங்களை உள்வாங்கும் அளவு பற்றிய சமூகத்தின் மனோபாவம் இளை யோர் நடத்தை மீது செல்வாக்குச் செலுத்துகின்றது.

மேற்கண்ட காரணிகளில் ஒன்றோ அல்லது பலவோ ஒரு குறித்த சமூகத்தின் விழுமியங்களை உடைத்துவிடலாம். விழுமியங்கள் குலைவடைந்த சமுதாயத்தில் சீர்கேட்டுக்கான சுதந்திரம் மிக்க சந்தர்ப்பங்கள் இளையோருக்கு அதிகளவில் கிடைக்கின்றன. இதனால் பெற்றோரையும் ஆசிரியர்களையும் மறுதலித்தல், கவனமெடுத்தலிலான தேக்கநிலைகள், தீவிர உள எழுச்சிகளும் வன்முறையும், தீர்க்க தரிசனமின்மை, கடிவாளமற்ற பாலியல் நடத்தைகள், பதின்ம வயதினரின் குடும்ப வாழ்வனுபவத்திலான உடைவுகள், பொறுப்புக் களின்றிய பொருளாதாரச் செழிப்பு போன்ற ஏராளமான இளை

யோர் பிரச்சினைகள் உருப்பெறுகின்றன.

மேற்கண்ட இளையோர் விலகல்கள் மற்றும் பிரச்சினைகள் தொடர்பான அதிக சிரத்தை எடுக்கவேண்டிய காலகட்டத்தில் வாழுகின்ற சமூகமொன்று அப்பிரச்சினைகள் தொடர்பிலான விழிப்புணர்வூட்டலை செய்கின்ற அதேவேளை அப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான உபாயங்கள் குறித்து ஆழமான வழிமுறைகளைக் கண்டறிதல் வேண்டும். பல்வேறு பாதிப்புக்களுக்கு உட்பட்ட சமூகம் ஒன்றில் வாழும் இளையோர் சமூகச் செயற்றிறனிகளாக (social activists) மாற்றப்படும் வகையில் 'மாற்றம்' செய்யப்படுதல் இன்றியமையாதது. ஒத்த உளநிலையுடைய தனியன்களாகவும் உள் வாங்கப்பட்ட பிரச்சினைகளை மாற்றுவதற்கு செயலாற்றுபவர்களாகவும் இளையவர்கள் மாற்றம் பெறுதல் வேண்டும். இந்த இளையோர் செயற்றிறனிகளாக உள்ளீர்க்கப்படுவதற்கு இன்றைய சமுதாயத்தில் பல தேவைகள் உள்ளன. சூழலியல் பிரச்சினைகள், விவசாயிகள் பிரச்சினைகள், பொருளாதாரப் பிரச்சினைகள், போரின் சிதைப்பால் விளைந்த சமூக பிரச்சினைகள், மரபுச் சொத்துரிமைகளின் பராமரிப்பு சார்ந்த பிரச்சினைகள், கல்விசார் பிரச்சினைகள், முயற்சியாண்மைசார் சவால்கள் என்று விரிவுபெறும் பட்டியலில் வரும் பிரச்சினைகளை வெற்றி கொள்வதற்கான விசையாக இளையோரை வலுப்பெற வைக்கவேண்டிய பொறுப்பு சமூகத்தின் சகல மட்டங்களிலும் உள்ளது. பெற்றோர், குடும்பம், ஆசிரியர், கல்வி ஏற்பாடுகள், சமய நிறுவனங்கள், சமூகமட்ட நிறுவனங்கள் போன்ற அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தக் கூடிய சக்திகள் இதற்கான பொறுப்புணர்வுடன் கூடிய எளிய நிலை முன்னெடுப்புக்களைச் செய்யவேண்டும் என்பதே எதிர் பார்ப்பாகியுள்ளது.

### இளையோர் விலகலை வெற்றிகொள்வதற்கான உபாயங்கள்

மேற்குறிப்பிட்ட வகையில் இளையோரைச் செயற்றிறனிகளாக்குவதற்கான மடைமாற்றும் செயற்பாட்டின் பிரதான

பங்குதாரர்களின் பொறுப்புக்கள் குறித்து தனித்தனியே ஆய்வு செய்யப்படவேண்டும். எனினும் கட்டுரையின் விரிவஞ்சி சில பொதுவான உபாயங்கள் குறித்து இங்கு குறிப்பிடப்படுகின்றது. பிரதானமாக குடும்பம் மற்றும் சமூகமட்ட நிறுவனங்களின் பங்குகள் தொடர்பிலான முடிவுகளாக இவை கருதப்படலாம். அவையாவன,

1. குடும்ப மட்டத்தில் உறவுகளுக்கிடையிலான கருத்துப் பரிமாற்றத்துக்கான வாய்ப்புக்களில் இளையோரின் ஈடு பாட்டிற்குச் சந்தர்ப்பமளித்தல்.
2. பெற்றோர் குடும்பத்தில் இளையோருடனான ஊடாட் டத்துக்கான வாய்ப்பினையும் நேரத்தினையும் அதி கரித்தல்.
3. இளையோரின் திறன் மற்றும் அறிவினை சரியாக மதிப் பிட்டு அதற்கு அமைவான பொறுப்புக்களை ஆற்றுவ தற்கான சுதந்திரத்தினை குறுக்கீடற்ற கண்காணிப்புடன் குடும்ப மட்டத்தில் கையளித்தல்.
4. நவீனத்துவ சமூக மாற்றத்தின் போக்குகளை உள் வாங்கிக் கொள்ளவும் விளங்கிக் கொள்ளவும் குடும்ப மட்டத்தில் இளையோருடன் சேர்ந்து மூத்தவர்கள் முனை வதன்வழி பரம்பரை இடைவெளி தொடர்பான மனத் தடைகளை நீக்க வழிசெய்தல்.
5. இளையோரின் சமூகப்பணி மற்றும் சமூக சேவைச் செயற்பாடுகளிலான ஆர்வத்தினை குடும்ப மட்டத்தில் தட்டிக் கொடுத்தலும் பாராட்டுதலும்.
6. மூத்தவர்கள் பெற்றோர் இளையோரின் முன்னிலையில் தங்கள் முரண்பாடுகளை வன்மையாக வெளிப்படுத்திக் கொள்வதைத் தவிர்த்தல்.
7. இளையோர் தம்மளவில் பொறுப்புக்களை உணர்ந்து கொள்ளுதல் என்பதற்கு மேலாகத் தம்மைப் பற்றிய சுயமதிப்பீட்டினை உயர்த்திக் கொள்ளுதல்.
8. மூத்தவர்கள்'பழமைவாதிகள்' என்று கருதும் நிலையினை

தம்மளவில் மாற்றிக் கொள்ளுதல்.

9. புதியவகை மாற்றங்களை அங்கீகரித்தலில் ஒரு நலமான வரையறையை இளையோர் தமக்குள் வகுத்துக் கொள்ளுதல்.

10. சமூகமட்ட நிறுவனங்களிலான பங்களிப்பை இளைஞர்கள் உறுதிப்படுத்திக் கொள்ளும் அதே வேளையில் மூத்தவர்கள் இளையோரின் பிரசன்னத்துக்கான வழியைத் திறந்துவிடுதலும் சமவாய்ப்பை வழங்குதலும்.

11. சமூக மட்ட நிறுவனங்கள் கிராம மற்றும் பிரதேச மட்டத்திலான சிறிய கருத்திட்டங்களை உருவாக்கி அவற்றை சிறுசிறு இளைஞர் குழுக்களிடம் கையளிப்பதன் மூலம் அவர்களின் சமூக ஈடுபாடு, பொறுப்பெடுத்தல், வகைகூறலுக்கான வாய்ப்புக்களை அதிகரித்தல்.

12. இளையோர் விலகல், இளையோர் பிரச்சினை தொடர்பாக இளையோர் தாமாக ஆராயத்தக்க செயலமர்வுகள் மற்றும் பயிற்சிப் பட்டறைகளை சமூகமட்ட நிறுவனங்கள் முன்னெடுத்தலும் அப்பிரச்சினைகளுக்கு எதிரான பிரசாரங்கள் விழிப்புணர்வு செயற்றிட்டங்களை அவர்களே மேற்கொள்ளுதலும்.

13. உடனடியான அடையாளங்களை அவாவி நிற்கின்ற மனோபாவத்தினை தவிர்த்து உறுதியான அடையாளங்கள் குறித்து இளையோர் அக்கறை கொள்ளுதல்.

14. இளையோர் தங்கள் சுயத்தை தம்மிலே காணுவதை விடுத்து பிறிதொன்றின்மீது தம் சுயத்தை ஏற்றி வைப்பதை தவிர்த்தல்.

இத்தகைய உபாயங்கள் குறித்த மேலும் விரிவான சிந்திப்புக்கள் அவசியமானவை. அந்தச் சிந்தனைகளை இளையோரின் செயற்றிறன் விருத்தியிலான தனியாள் அகத் தடைகள், குடும்ப மட்டத்திலான தடைகள், சமூகமட்டத் திலான தடைகள், தேச மட்டத்திலான தடைகள் என்ற

வகையில் சிந்தித்து அத்தடைகளை வெற்றிகொள்வதற்கான உபாயங்களாக விஞ்ஞான பூர்வமாக முன்வைக்கப்பட வேண்டிய தேவை உள்ளது.

**நிறைவாக**

எனவே ஒரு சமூகத்தின் கவனிக்கத்தக்க மாற்றீடற்ற பிரிவினராக அமையும் வயதுப் பிரிவினர் என்ற வகையில் 'இளையோரைச் சமூக வலுப்படுத்துதல்' (empowering youth) என்ற உயரிய இலக்கினை அடைவதற்கு மிகப் பெரிய சவாலாக அமைவது இளையோரின் விலகல் நடத்தைகளாகும். இதனால் இவ் விலகல் நடத்தைக்கான காரணிகளை இனங் காணுதலும் அக்காரணிகளை வெற்றி கொள்வதும் அந்தந்தச் சமூகங்களிற்கான தனித்துவம் வாய்ந்த உபாயங்களை வடி வமைப்பதன் வழிதான் சாத்தியமாகும். இவற்றுக்கான பொறுப்புக்கள் பல்வேறு தரப்பினரிடத்தில் உள்ளன. அவர்கள் ஒன்றிணைந்து செயற்படவேண்டிய தருணத்தை தவறவிடக் கூடாது என்பதை உணரும் அதேவேளை Kofi Annan அவர்கள் கூறும் 'உலகளாவிய மாற்றம் மற்றும் புத்தாக்கங்களில் முன்னணியில் வைக்கப்பட வேண்டியவர்கள் இளையோரே. மேம்பாடு மற்றும் சமாதானத்தின் முதன்மை முகவர்களாக அவர்கள் வலுப்படுத்தப்படலாம். ஆனால் சமூகத்தில் அவர்கள் வலுவற்றவர்களாக்கப்பட்டு எல்லைப்படுத்தப் படுகின்றார்கள். இளையோர் தம் சமூகவாழ்வில் எல்லா நிலையிலும் பங்கேற்பதற்கான சந்தர்ப்பத்தினை உறுதிப் படுத்துதல் வேண்டும்' என்ற கருத்தையும் மனங்கொள்ளல் வேண்டும். மேற்குறித்த விடயங்கள் இது பற்றிய மேலும் விரிவான தேடலுக்கு வழிசமைக்கலாம்.

# கிராமிய வாழ்வின் பண்பாட்டுச் சூழல்: நிலைபேறும் மாற்றமும்

05

## Cultural Environment of Rural Life: Existence and Change

இன்றைய உலகமயமாக்கற் சூழலில் உலகமே ஒரு கிராமம் என்று பொதுநிலைக் கருத்து ஒன்று எல்லோராலும் ஏற்கப்பட்டுவிட்டது. இந்த நிலையிலும் சமூகங்களை கிராமிய சமுதாயம், நகரமய சமுதாயம் என்று வகைப்படுத்திப் பார்க்கும் நிலையும் உள்ளது. அதேநேரத்தில் கிராமங்கள் தமக்கேயான இயல்புகளை இழந்து வருவதும் கவனிக்கத்தக்கது. இதனாற்றான் கிராமிய வாழ்வு வழக்கொழிந்து போவது தொடர்பாக கூடிய அக்கறை ஏற்பட்டுள்ளது. சாதாரண மக்கள் தொடக்கம் ஆய்வாளர்கள் வரை சமூகத்தின் சகல தளத்தினரும் மறைந்துபோன, போய்க்கொண்டிருக்கின்ற வாழ்வியலின் மரபுகளை மீள நினைந்து இன்புறவும் ஆவணங் களாக பதிவாக்கவும், பேணவும் அக்கறை கொண்டுள்ளனர்.

இந்த நிலையில் பழையவற்றைப் பேணுதல் மற்றும் ஆவணமாக்குதல் தொடர்பாக முனைபவர்கள் கிராமிய சமூக உருவாக்கத்தின் பின்னணியிலுள்ள காரணிகள் குறித்துத் தெளிவாக விளங்கிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் கிராமிய வாழ்வின் எச்சசொச்சங்களும் நின்று நிலைக்கும் வகையிலான பணிகளையும் தற்காப்புக்களையும் செய்யமுடியும். அவற்றிலும் குறிப்பாக கிராமிய வாழ்வின்

பண்பாட்டுச் சூழலைப் பாதுகாத்தல் என்பது இன்று பாரிய சவால்களுக்கு முகம் கொடுப்பதால் அது குறித்து இங்கு அதிக கவனமெடுக்கப்படுகின்றது.

கிராமிய வாழ்வு என்பது என்ன ? என்ற வினாவுக்கு விடையளித்தல் சிக்கலானது. ஆயினும், கிராமிய சமூகத்தின் உறவு முறை பற்றிய ஒரு முறைப்படுத்தப்பட்ட அறிவுதான் கிராமிய வாழ்வின் சமூகவியல் என்ற விளக்கத்தின் அடிப்படையில், கிராமிய வாழ்வு என்பது கிராம சமுதாயத்தின் உறவுமுறையினாற்றான் தீர்மானமாகின்றது என்ற முடிவுக்கு வரமுடியும். ஒரு கிராமமானது தனது கட்டமைப்பு, பௌதீகமான இயல்புகள், சமூக இயக்க முறை, போன்ற பல்வேறு விடயங்களில் பன்னெடுங்காலமாக பல மாறுதல்களைப் பெற்றுவந்த போதிலும் இன்றுவரை கிராமியப் பண்பு மாறாதிருப்பதற்கான அடிப்படையினை இந்த உறவு முறைதான் தருகின்றது இதுவே கிராமிய வாழ்வாகி உயிர்ப்புடன் நிலைக்கின்றது.

கிராமிய சமூக உருவாக்கத்தைத் தீர்மானிக்கும் காரணிகளில் பின்வரும் மூன்று சூழல்கள் மிக முதன்மையானவை.

1. புவிசார் சூழல்
2. சமூகம் சார் சூழல்
3. பண்பாடுசார் சூழல்

இவற்றுள் புவிசார் சூழல் என்பது கிராமத்தின் அமைவிடம், காலநிலை, இயற்கை வளங்கள், நிலத்தின் பண்புகள் போன்ற விடயங்களைக் குறிக்கின்றது. சமூகம்சார் சூழல் என்பது சமூக வேறுபாடுகள், சமூக ஏற்றத்தாழ்வும் அடுக்கமைப்புக்களும், குடியகல்வுகள், சமூக அசைவியக்கம் என்பவற்றைக் குறிக்கின்றது. பண்பாடுசார் சூழல் என்பது பண்பாட்டு வெளிப்பாடுகளின் எளிமை, சமூகக்கட்டுப்பாடுகள், கிராமிய அறிவு மற்றும் திறன்கள் வாழ்வின் தரங்கள் என்பவற்றை உள்ளடக்கியதாகும். மேற்கண்ட மூன்று காரணிகளிலும் கிராமிய வாழ்வினை அடையாளப்படுத் துவதில் அதிக செல்வாக்குள்ள காரணியாக பண்பாடுசார் சூழல் அமை

கின்றது. ஏனைய இரண்டு காரணிகளில் ஏற்படும் குழப்பநிலைகளால் உருவாகும் விவகாரங்களைக் காட்டிலும் பண்பாடுசார் காரணிகளிலான குழப்பநிலையால் உருவாகும் விவகாரங்கள் அதிகளவில் கிராமிய வாழ்வைப் பாதிக்கின்றன. இதனால் பண்பாடுசார் காரணிகள் குறித்து சற்று விரிவாக நோக்க வேண்டும்.

பண்பாடுசார் சூழல், சமூகம்சார் சூழலிலிருந்து சற்று வேறுபட்டது. தனிமனிதர்களின் ஆளுமை விருத்தி மற்றும் தனி மனிதனது சமூகமயமாக்கலிலும் பண்பாடுசார் சூழலின் செல்வாக்கு அதிகம். கிராமிய மனிதர்கள் இதனாற்றான் பண் பாடுசார் சூழலில் வரும் இடர்பாடுகளால் அதிகம் பதற்றத் துக்கு உள்ளாகின்றனர். பண்பாடுசார் சூழலில் அடங்கும் பண்பாட்டு வெளிப்பாடுகளின் எளிமைத்தன்மை என்பது அந்த மக்களின் விவசாயம், இயற்கையுடன் இணைந்த வாழ்வுடன் தொடர்புடைய சூழலைக் கருதுகின்றது. கிராமத்தவர்களின் வாழ்வின் வெளிப்பாடுகளான கொண்டாட்டங்கள், திருவிழாக் கள், நாட்டார் பாடல்கள் மற்றும் நாட்டார் கதைகள் யாவும் அவற்றுடன் தொடர்புடையன. கிராமத்தவர்களின் கொண்டாட்ட வெளிப்பாடுகளான குழல் இசைத்தல், நடன மாடுதல், இரவு முழுவதும் மது அருந்துதல் என்பனவும் இத் தகைய வெளிப்பாடுகள்தான். இவற்றை நாட்டார் இலக்கி யங்கள்தான் வெகுவாக வெளிப்படுத்துகின்றன.

பண்பாடுசார் சூழலில் அடங்கும் சமூகக் கட்டுப்பாடுகள் என்பது கிராமிய சமுதாயங்களில் முறைசாராத வகையில் வழங்கிவரும் கட்டுப்பாடுகளைக் கருதுகின்றது. கிராமிய மனி தர்கள் இத்தகைய கட்டுப்பாடுகளிலிருந்தும் விலகுகின்ற போது அயலவர்களின் குறைகூறும் கதைகளுக்கு (அரட்டை) உட்படுகின்றனர். இத்தகைய கட்டுப்பாடுகளை தமக்குத் தாமே சுயமாக ஏற்படுத்திக் கொள்கின்றனர். கிராமியத் தலைவர் ஒரு வருக்குக்கட்டுப்படுதல், கிராமியத் தெய்வங்களுக்கு பயந்து வாழ்வை ஒழுங்குபடுத்துதல், கிராமிய நம்பிக்கைகளை அடிப் படையாகக் கொண்டு மரபுவழி ஒழுக்கங்களைப் பேணுதல்

போன்றன யாவும் இந்தக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும். இவை யாவற்றுக்கும் மேலாக மனிதர்களிடையே ஒருவரைப்பற்றி இன்னொருவர் முற்றாக அறிந்து பழகும் நிலை இந்தச் சமூகக் கட்டுப்பாட்டின் மிகவும் அடிப்படையான ஒரு அம்சமாக அமைந்துவிடுகின்றது.

பண்பாடுசார் சூழலின் அடுத்த விடயமாக கிராமிய அறிவு மற்றும் திறன்கள் அடங்குகின்றன. இது கிராமியத்தின் செய் வதிலான பாரம்பரியமான நுட்பங்கள், மண் தொடர்பான அறிவு, மரபுவழி நீர்ப்பாசன நுட்பங்கள், பயிர்களின் தன்மையும் அவற்றைப் பராமரிக்கும் உத்திமுறைகளும், கிராம மனிதர்களின் கைவினை ஆற்றல்கள், கிராமியக் கலைஞர் களின் படைப்பாக்க ஆற்றல்கள் போன்ற பல்வேறு அறிவு மற்றும் திறன்கள் கிராமியத்துக்கென தனியானவை.

வாழ்வின் தரங்கள் என்பது ஒரு பண்பாடுசார் சூழலில் ஒரு வித்தியாசமான எண்ணக்கரு. எல்லோருக்கும் இதனை வாழ்க்கைத் தரம் என்று கருதிவிடும் தவறான புரிதல் உள்ளது. ஆனால், அப்படியல்ல பொதுவாக கிராமத்து வாழ்வில் வறுமை அதிகம் இருக்கும் ஆனால், அதனை மகிழ்வாக அனுவிப்பது அவர்களின் வாழ்வாகிவிடுகின்றது. பல புதியகருவிகள் பொருட்கள் வந்துவிட்ட போதிலும் பழையகருவிகள் மற்றும் புழங்கு பொருட்களை உபயோகிப்பதில் மகிழ்ச்சி கொள்கின் றனர். அலுமினியப் பாத்திரங்களால் அவர்கள் பெறும் மகிழ்வைவிட மட்பாண்டங்களால் அதிகம் மகிழ்வார்கள். அதனைத் தர நிலையில் உயர்ந்ததாகக் கருதுவார்கள்.

கிராமிய பண்பாடுசார் சூழலின் இந்த நான்கு வகையான அம்சங்களும்தான் கிராமிய வாழ்வினை இறுதிவரை பிரதிப லித்து நிற்பவை. ஆனால், இன்று இவற்றின் மீது தாக்கத்தினை ஏற்படுத்தும் புறவிசைகள் ஏராளம். இவற்றின் மீது விழும் அடிகள் பெரும்பாலும் திட்டமிடப்பட்டவையாக அமைவதால் கீழைத்தேசக் கிராமிய வாழ்வின் தனித்துவங்கள் அலுக் குலையத் தொடங்கிவிட்டன. உலகம் ஒரு கிராமம் என்று பேசுபவர்கள் பலர் பெயர் குறிப்பிடத்தக்க தனித் தனியான

கிராமங்களுக்கான அடையாளங்களைக் கண்டு கொள்ள மறுப்பவர்களாகின்றனர். கிராமிய வாழ்வின் பண்பாடு சார் சூழல் எதிர்கொள்ளும் சவால்கள் எவை? என்பது குறித்த அறிவுத் தெளிவு ஏற்படும் போதுதான் அவற்றை அவற் றுக்குரிய அடையாளங்களுடன் பேணுவதற்கான உபாயங்கள் குறித்துச் சிந்தித்துச் செயற்பட முடியும்.

கிராமிய வாழ்வின் பண்பாடுசார் சூழலிலான சவால்கள் மேற்கண்ட அதன் நான்கு கூறுகளுக்கும் தனித்தனியானவை. அவை விரிவாக ஆராயப்பட வேண்டியவை. இங்கு விரிவஞ்சி மிகச் சுருக்கமாக நோக்கப்படுகின்றது. நாட்டார் வழக்காறுகள் சந்ததிகளுக்கிடையே கடத்தப்பட பரிமாற்றப்பட போதுமான ஏற்பாடுகள் கிராமியச் சூழலில் இல்லை. இன்றைய தொழினுட்ப விஞ்ஞான விருத்தியை நாட்டார் மரபுகளின் வளர்ச்சிக்கு ஏற்றவகையில் பயன்படுத்திக் கொள்வதிலான தயக்க நிலை உள்ளது. நாட்டார் வழக்காறுகள் பயில் நெறிகளாக மாற்றம் பெறுவதிலான வேகம் குறைவதுடன் அவ்வாறான பயில்வுகள் கிராமிய சூழலுக்கு அப்பால் நிகழ்வது பொருத்தமற்றதாகின்றது. நாட்டார் மரபுகளில் வல்லுனர் களாக இருப்பவர்களை அவர்களுக்குரிய பெறுமானத்துடன் பேணுவதிலான தயக்கநிலை உள்ளது. கிராமிய வாழ்வில் நகரவாழ்வுக் கூறுகளின் அபரிதமான ஊடுருவலும் குடியகல்வுகளின் வழியான அனுபவ விரிவாக்கமும் வாழ்வின் தரங்குறித்தபதற்றங்களை கிராமிய மனிதர்களிடையே ஏற்படுத்தியுள்ளது. கிராமியவாழ்வில் கட்டுப்பாட்டை ஏற்படுத்தும் மரபு வழிபாட்டுக் கூறுகளும் வழக்காறுகளும் சமஸ்கிருதமயமாக்கப்பட்டு அல்லது நவீனத்து வப்படுத்தப்பட்டு அவற்றுக்கேயுரிய தனித்துவப் பெறு மானங்களை இழந்துவிடுகின்றன. கிராமியப் பண்பாட்டுச் சூழலுக்கான அறிவும் திறன்களும் கபளீகரம் செய்யப்பட்டு புதிய வடிவில் அவை தோன்றிய இடத்திலேயே சந்தைப் படுத்தப்படுகின்றன. விஞ்ஞானப் புரட்சி என்ற பெயரில் ஏற்பட்டுள்ள வேகம் உற்பத்தி அல்லது விளைவின் அளவைக்

கருத்திலெடுக்கின்றதே தவிர அதன் தரத்தையோ நிலைபேற்றுத் தன்மையினையோ கருதுவதில்லை. இதனால் கிராமிய அறிவு மற்றும் திறன் என்பன பிள்ளைப் பேற்றுக்குப் பத்தியம் பார்ப்பதில் கூட இன்று அதிகம் நம்பப்படுவதில்லை. கிராமிய மனிதர்களின் வாழ்க்கைத்தரம் என்பது இன்று பெருநகரங்களில் வாழும் மனிதர்களின் வாழ்க்கைத் தரத்தைக் கணிப்பிடும் சுட்டிகளால்தான் பார்க்கப்படுகின்றன. உலகில் மனிதர்களும், அவர்களின் சமூக, பண்பாட்டு நிலைகளும் அடிப்படையான பல வேறுபாடுகளைக் கொண்டிருக்கும் போது வாழ்கைத்தரத்தினைக் கணிப்பிடும் குறிகாட்டிகள் மட்டும் எப்படி ஒரே மாதிரியானவையாக அமையமுடியும்? இவை குறித்து ஆழமாக சிந்திக்கும் போதுதான் கிராமியப் பண்பாடுசார் சூழலைப் பேணுவதற்கான அடிப்படை உணர்வூக்கமும் அதற்கான உபாயங்களும் கண்டறியப்படும். இது விரைவுபடுத்தப்பட வேண்டிய ஒரு முக்கியமான முயற்சியாக எம்முன் கிடக்கின்றது.

முடிவாக, கிராமிய அடையாளத்தை அப்படியே பேணுவதனால் வாழ்வில் மேம்பாடு ஏற்பட்டுவிடுமா? புதிய மாற்றங்களை அனுசரிப்பதில் என்ன தவறு? மாற்றங்களும் அவற்றின் பரவுகையும் தவிர்க்க முடியாதவை அல்லவா? போன்ற வினாக்களும் உள்ளன.

உண்மையில் பண்பாடு என்பது ஒரு தேங்கி நிற்கும் குட்டை அல்ல. அது ஒரு நீரோட்டம் தான். எங்கோ ஒரு மலையில் உற்பவித்த நீரோட்டம் தனக்கு இயைந்த வழிகளால் ஓடி வளைந்து நெளிந்து ஒரு பொதுவான சமுத்திரத்தில் சேரும் மார்க்கத்தினைத் தானே வகுத்துக்கொள்கின்றது. சமுத்திரம் போன்ற உலகப் பண்பாட்டுப் பன்மைத்துவத்தில் தனித்தனிக் கிராமியப் பண்பாடுகள் கலப்பதில் எந்தத் தவறுமில்லை. அது இயல்பானதுதான். ஆனால் நீரோட்டம் உற்பவித்த இடமும் அது ஓடிவந்த வழிகளும், காவிச் சென்ற நீரின் குணங்களும் இழக்கப்பட்டுவிட்டால் என்ன பயன்? நீரோட்டத்தின் வழியே புதிய கால்வாய்கள் வெட்டப்படலாம்

நீர்த்தேக்கம் அமைந்து தேவைக்குப் பயன்படுத்தலாம். இவை காலம் எமக்கிட்ட கட்டளைகள். அவ்வாறே புதிய நுட்பங்கள், கருவி கரணங்கள் வரும்போது கிராமியப் பண்பாடுசார் சூழலை புதிய வடிவில் நிலைபெறச் செய்வதற்காக அவற்றை தந்திரோபாயமாகப் பயன்படுத்தும் அறிவுத் தெளிவைப் பெறவேண்டும்.

# யாழ்ப்பாணத்துக் கிராமிய கூட்டுவாழ்வும் மாறுதல்களும்

06

## Collective Rural Life of Jaffna and Its Changes:

### அறிமுகம்

எந்தவொரு தனிமனிதனும் ஏதாவது ஒருவகை சமூகத்திற்கு உட்பட்டு வாழ்பவனாகவே உள்ளான். ஒரு தனிமனிதனுக்கும் சமூகத்திற்குமிடையே நெருக்கமான தொடர்புகள் உள்ளன. இதனாலேயே 'மனிதன் ஒரு சமூகப் பிராணி' என்று குறிப்பிடுகின்றனர். சமூக வாழ்க்கைக்கான தேவை ஒவ்வொரு தனிமனிதனுள்ளும் உள்ளது. 'மன எழுச்சிகளின் வளர்ச்சி, நுண்ணறிவின் வளர்ச்சி, தனது சுதந்திரத்திற்கும், நிறைவான ஆளுமையின் வளர்ச்சிக்கும் தேவையான ஒரு சில பொருட்கள், பண்டங்கள், ஆடம்பரப் பொருட்கள் போன்றவற்றைச் சமூகத்தின் உதவியின்றி அடைய முடியும் என்று எண்ணிப் பார்ப்பதுகூட முடியாது. சமூகத்தி லிருந்து துண்டிக் கப்பட்ட எந்தவொரு மனிதனும் இயல்பான வளர்ச்சி அடைந்ததில்லை'.(Pascual Gis berts.S.J.*1964)* என்ற கருத்தானது அடிப்படையில் மனிதனுக்கு சமூக கூட்டு வாழ்க்கையின் அவசியத்தினை வலி யுறுத்துவதாக உள்ளது.

மனித நாகரிகத்தின் வளர்ச்சியானது கூட்டுவாழ்வின் வழியேதான் சாத்தியமாகி வந்துள்ளது. தவிர மனிதப்

பண்பாட்டின் பல்வேறு குழுமங்கள் (Groups) , குலங்கள் (Clans) போன்றவற்றுக்கு உட்பட்டு மனிதன் வாழ்ந்து வந்துள்ளான். இந்தியப் பண்பாட்டின் வளர்ச்சியின் தொன்மை நிலையில் அலினா, புரு, துர்வாச,பலானபோன்ற குழுமங்கள் இருந்ததைப் பழைய இலக்கியங்கள் கூறுகின்றன. சமூக வாழ்க்கை என்பது இத்தகைய கூட்டு வாழ்வின் வழியேதான் உருவாகின்றது. இதனால் சமூகவாழ்க்கைக்கு உட்பட்டிருக்கும் மனிதனுக்கு கூட்டு வாழ்வு தவிர்க்க முடியாதது என்பதை உணரலாம்.

## கோட்பாடுகள்

ஆரம்பகாலத்து சமூகவியல் கோட்பாட்டாளர் களிடையே தனிமனிதக் கோட்பாடு (Individual Theories) முதன்மை பெற்றிருந்தது. இதன்படி தனிமனித நிலையிலே தான் ஒருவன் உன்னதம் பெறுகின்றான் எனக் கருதப்பட்டது. ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்தனியான இயல்பு உள்ளது. அந்த இயல்புகளால் ஒத்து வாழும் தன்மையை இழந்து முரண் நிலைகளை தவிர்த்துக் கூட்டுணர்வோடு தன்னை ஒரு சமூக மனிதனாக சமூகவாழ்வில் ஈடுபடுத்தவே சமூக ஒப்பந்தம் நடைபெற்றது. Thomas Hobbes, J.Locke, J.J.Rousseau போன்றவர்கள் இதனையே வலியுறுத்தியுள்ளனர் இவர்களது கருத்தினை ஏற்றுப் பின்னாளில் Hegel முழுமையான சமுதாயத்திற்கு (அரசு) இணங்கி வாழ்வதே தனிமனிதனுக்கு மகத்துவத்தை கொடுக்கும் என்று கூறுகிறார்.

Emile Durkheim என்ற சமூகவியலாளரும் Mc Dougall என்ற உளவியலாளரும் கூட்டு வாழ்வின் பொருளைப் பேசியவர்கள். இவர்கள் மனத்தினை (mind) தனிமனித மனம், சமூகமனம் என இருவகைப்படுத்தினர். இவற்றில் சமூக மனமே ஒரு கூட்டுமனம் (collective mind) எனவும் அதுவே உயர்ந்தது எனவும் இவர்கள் கூறுகின்றனர். Durkheim விளக்குகின்ற கூட்டுப் பிரதிநிதித்துவம் (collective representation), கூட்டு உணர்வு நிலை (collective consciousness) போன்றனவும் இத்தகைய கூட்டு வாழ்வின் உட்பொருளைச் சாரமாக கொண்டமைந்தவையே.

Durkheim சமூக உண்மைகள் (Social Facts) பற்றி விளக்கும் போது சமூக உண்மைகள் தனிமனித விருப்பங்களின் வழி தோன்றியவை அல்ல. எனவே அவற்றினை தனியங்களின் கூட்டு வாழ்விற்கான உண்மைகளில் இருந்தே உணர்ந்து கொள்ள வேண்டும் என்று கூறியுள்ளார். கூட்டுணர்வு நிலையினை தனிமனிதனுக்குரியது, கூட்டு நிலையில் பகிரப்படுவதென இருவகையிலே விளங்கியிருந்த போதிலும் 'கூட்டுப் பொருண்மையே' தனி மனிதன் மீது செல்வாக்குச் செலுத்தும் மேலாண்மை நிலை என்று விளக்கியிருந்தார்.

இவ்வாறு சமூகவியலின் கோட்பாடு மரபிலே 'கூட்டு வாழ்வு' தொடர்பான சிந்தனைகள் அலசப்பட்டுள்ளன. எனினும், இன்றைய உலகில் பல்வேறு விசைகளினால் இத்தகைய கூட்டு வாழ்வு அர்த்தமிழந்து தடம்மாறிச் செல்லுதல் உணரப்படுகிறது. என்னதான் உலகமயமாதல் போன்ற கருத்தாக்கங்கள் வலுப்பெற்றபோதிலும், வேறுபடுத்தல்கள் (Seperations), பாகுபடுத்தல்கள் (Classifications), தனியாள் வாதம் (Individualization), மைய வாதம் (Centerism) என்பன முதன்மை பெற்றுள்ளன.

பண்பாட்டின் அனைத்துக் கூறுகளின் வழியும் கூட்டு வாழ்வை வலியுறுத்தி நிமிர்ந்து நிற்கும் கீழைப்புலப் பண்பாடுகளில் கூட கூட்டுவாழ்வுக்கான சவால்களும் அச்சுறுத்தல்களும் ஏற்பட்டுள்ளன. சமய சமூக வழக்காறுகள், விழுமியங்கள், கலைகள், தொழில்கள், உணவுப்பழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள் போன்ற மரபுகளின்வழி புகுந்த வாழ்வியல் அம்சங்களின் அடிக்கட்டுமானத்தில் முகிழ்த்து எழுந்த கீழைப்புலங்களின் கூட்டுவாழ்வுநிலை இன்று ஆட்டம் கண்டதற்கு யாழ்ப்பாண சமூகம் கூட விதிவிலக்காகிவிடவில்லை.

## யாழ்ப்பாண சமூகமும் கூட்டுவாழ்வும்

புவிசார் இடஅமைவு, மரபு வழிப்பண்பாடுகள், சமூகக் கட்டமைப்புப் போன்றன பல்வேறு அம்சங்களினாலும் ஒரு

தனித்துவ வகைப்படுத்தலுக்கு உட்படும் யாழ்ப்பாணம் சாதிக் கட்டமைப்புக்கள், தொழில்சார் வேறுபாடுகள், பிரதேச வேறுபாடுகள் போன்றன நிலவிவரும் பிரதேசமாக விளங்கிய போதும் அனைத்து தரப்பினரிடையிலும் விதந்து சொல்லக் கூடிய கூட்டுவாழ்வின் அடிப்படைகள் நீண்ட காலமாக இருந்தே வந்துள்ளன. குழுசார் உணர்வுகள், தொழில், பிரதேச வளங்கள், சமய நடைமுறைகள் போன்றவை விசைகளாய் நின்று யாழ்ப்பாண மக்களிடையே கூட்டு வாழ்வினை ஏற்படுத்தியிருந்தன.

யாழ்ப்பாண மக்களின் கூட்டு வாழ்வின் தன்மையினை எடுத்துக் காட்டுபவையாக பல்வேறு நடைமுறைகள் இருந்துவந்துள்ளன. கிடுகு பின்னுதல், பந்தல் போடுதல், பாத்திகிண்டுதல், அரிசி இடித்தல், தண்ணீர் அள்ளுதல், வீடு வேய்தல், பன்னம் செய்தல், வேள்வி செய்தல், நாற்சார் வீடமைத்தல் என்பன சிந்தித்தவுடன் ஞாபகத்துக்கு வரும் நடை முறைகளாகியிருந்தன. பெரும்பாலும் இந்த நடைமுறைகளை கிராமம் சார் பண்பாடுகளே தாங்கிநின்றன. ஆனால் இன்றைய நிலையில் நகரம் கிராமம் என்ற வேறுபாடு இன்றி சமூக மாற்றத்துக்கான பலவிசைகள் ஊடுருவி உள்ள நிலையில் யாழ்ப்பாணத்தின் கூட்டு வாழ்க்கை முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள் அவதானிப்புக்கு உட்படுகின்றன.

இத்தகைய மாற்றங்களை விளங்கிக்கொள்ள முற்படும் போது மாற்றங்களைத் தூண்டிய விசைகளோடு இணைத்து விளங்கிக் கொள்வதே பொருத்தமானதாகும். இந்தப் பிரதேசத்தில் நிலவிய கூட்டுக்குடும்ப முறையில் ஏற்பட்ட ஈடாட்டங்கள், போர்தந்த விளைவுகளால் உருவான அனர்த்தங்கள் புலப்பெயர்வுகள்-இடப்பெயர்வுகள், தொலைத்தொடர்பு சாதனங்களின் பரவுகையும் அவற்றுக்கு வழங்கப்பட்ட முக்கியத்துவமும் வெளிநாடுகள் நோக்கிய பெயர்வுகள் தந்த பொருளாதார மாற்றங்களும் பண்பாட்டிடை ஊடுபரவுகையும், நுகர்வுக்கலாசாரத்தின் விளைவுகள், மரபுகள்-சமய நடை முறைகள் வாழ்வியல் விழுமியங்கள் தொடர்பான தவறான மதிப்பீடுகள் போன்ற விசைகளின்

பின்னணியிலேதான் தனி மனிதர்களதோ அல்லது சமூகங்களினதோ கூட்டுவாழ்வின் ஈடாட்டத்தினை விளங்கிக் கொள்வதும் பொருத்தமாகும்.

**பெண்களும் கூட்டுவாழ்வும்**

அரிசி இடித்தல், பன்னம் செய்தல், கிடுகு பின்னுதல், தண்ணீர் மொள்ளல் போன்ற நடைமுறைகள் பெரும்பாலும் பெண்கள் கூட்டுச் சேர்ந்து ஈடுபடும் நடைமுறைகளாக இருந்தன. குடும்ப உறவினர்களாகவோ, அயலவர்களாகவோ இருக்கும் பெண்கள் ஒன்றுகூடி இத்தகைய நடைமுறைகளில் தேவைக்கு ஏற்றவகையில் பரஸ்பரம் ஈடுபடுவர். ஊரில் கோயில், வயல் போன்ற இடங்களில் அமைந்த கிணறுகளில் தண்ணீர் எடுப்பதற்காக பெண்கள் கூடிச்செல்வர். பாய், பெட்டி போன்றவற்றை வீடுகளில் அயற்பெண்கள் கூடியிருந்து இழைப்பர். இத்தகைய வேளைகளில் 'பலதும் பத்தும்' கதைத்துக் கொண்டே ஈடுபடுவர். கவலை, சந்தோசம், மன எண்ணங்கள் பரஸ்பரம் பரிமாறப்படும். ஊளவியலாளர்கள் கூறும் உள எழுச்சிசார் இதமான நிலையினை (Emotional Comfort) ஏற்படுத்தும் சூழ்நிலைகளாக அத்தருணங்கள் அமைந்தன. தனிமைப்படாத ஒருவித கூட்டுவாழ்வை அந்நடை முறைகள் பெண்களுக்கு ஏற்படுத்திக் கொடுத்தன.

அரிசி இடித்தல் மிக இனிமை தரும் ஒரு நடைமுறையாக விருந்தது. அயலிலுள்ள நான்கைந்து பெண்கள் ஒன்றாகக் கூடி ஒவ்வொருவரும் தாங்கள் தாங்கள் 'வாரவைத்த' அரிசிகளுடன் (கழுவி நீர் வடியவிட்ட) ஒரு வீட்டில் பிற்பகல் வேளையில் கூடுவர். மாறிமாறி ஒருவரது அரிசியை மற்றவர்களும் சேர்ந்து இடிப்பர். ஒரு உரலில் இரண்டு உலக்கைபோட்டு இடிக்கும் அழகு அற்புதமானது. இருவர் மாறிமாறி இடிப்பதைப் போல இடித்தமாவினை கட்டைநீக்க அரிப்பர். ஒரு மாலைப் பொழுதில் இரண்டு மூன்று வீட்டுக்கான அரிசி ஒரேவீட்டில் இடிக்கப்படுவதுடன் பெண்கள் 'ஊர்க்கதைகள்' கதைப்பர். புதினங்கள் அறிவர். தமது இன்ப துன்பங்களைப் பரிமாறுவர்.

இந் நடைமுறைகள் படிப்படியாக அருகிவந்துள்ளன அல்லது இழக்கப்பட்டுள்ளன. வீடுதோறும் தனிக்கிணறுகள், வீடு தோறும் தொலைக்காட்சிகள், பனம்பொருட்களுக்குப் பதிலாக 'பிளாஷ்டிக்' பொருட்கள், அரிசி இடிக்க 'கிறைன் டர்கள் நுகர்வுக் கலாசாரம் (Consumerrism) தந்த விளைவுகள் தனியாள் உணர்வு நிலையினை மிஞ்சவைக்கும். குடும்பப் பெண்களைத் தம்மோடு கட்டிவைத்து அவர்களுக்குத் தனிமை மிஞ்சவைக்கும் சாதனமாக தொலைக்காட்சி மாறியுள்ளது.

**ஆண்களும் கூட்டுவாழ்வும்**

ஆண்களின் மத்தியில் ஒரு கூட்டு நிலையினை ஏற்படுத் துபவையாக வீடு வேய்தல், பாத்தி கிண்டுதல், பந்தல் போடுதல் போன்ற நடைமுறைகள் நில்வி வந்துள்ளன. யாழ்ப்பாண சமூகத்தின் உறவு முறைகள், உறைவிட முறைகள் சார்பாக இத்தகைய நடைமுறைகள் வழக்கத்திலிருந்தன. பெரும்பாலும் கிராமப்புறங்களில் பெரியளவிலான மண்வீடுகளை வருடா வருடம் மழைக் காலத்தின் முன்னர் பனையோலையால் வேய்வர். வீடு வேய்ச்சல் அதி காலையிலேயே தொடங்கப்பட்டு வெயில் தீவிரம் பெறமுன்னர் முடிவடையும். முதனாளே அயலில் ஆண்களுக்கு வேய்ச்சலுக்கு வீடுதோறும் சென்று சொல்வர். அவர்களில் எல்லோரும் நிபுணர்கள் அல்ல. எனினும் நிபுணத்துவம் உள்ளவர்களும் சிறப்பாக இடம்பெறுவர். வேய்ச்சலுக்கு உட்படும் வீட்டில் அன்று பெரும்பாலும் சாப்பாட்டுக்காக தோசை தயாரிக்கப்படும். வீடு வேய்ச்சலின் இடையிலோ, அல்லது முடிவிலோ வேய்ச்சலில் ஈடுபட்ட ஆண்கள் யாவரும் சேர்ந்து தோசை உண்ணும் நடைமுறையும் அவர்களின் இணைவும் நினைந்து இன்புறத்தக்கது.

இந் நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டு விட்டன. பலர் கூடி வேய்ச்சல் செய்யும் வீடுகள் இப்போது இல்லை. கல்வீடுகளின் இலகுத்தன்மையும் இந்த நடைமுறைகளை மாற்றி அமைத்துள்ளன. வேயும் தன்மையுள்ள பெரிய வீடுகள் அருகிப் போனமை ஒருபுறமிருக்க சிறியளவில் வேயப்படும் வீடுகள் கூட கூலி கொடுத்து வேயப்படுவதால் கூட்டு நிலை

நலிவடைந்துள்ளது எனலாம்.

இதனைப் போலவே பந்தல் போடுதலும் ஆண்கள் சேர்ந்து ஈடுபடும் நடைமுறையானது. ஒரு வீட்டில் திருமணமோ அன்றி பூப்பு நீராட்டுச் சடங்கோ நடைபெறப் போகின்றதெனின் அந்த ஊரின் ஆண்கள் விசேட நாளுக்கு இரண்டொரு நாட்கள்வரை வரும் இரவு வேளைகளிலே ஒன்றாகச் சேர்ந்து வைபவத்துக்கான பந்தலை கிடுகினாலும், அயலில் சேகரிக்கப்பட்ட மரந்தடிகளாலும் அமைப்பர். இந்தப் பந்தல்களை கலைத்துவமாக அமைக்கும் வல்லுனர்கள் கிராமப்புறங்களில் அதிகளவில் இருந்துள்ளனர். அத்தகைய வல்லுனர்களின் வழிகாட்டலுடன் பந்தல்போடுதல் இடம்பெறும். வைபவம் நடைபெறவிருக்கும் வீட்டிற்கு அழைக் காமலேயே ஊரின் ஆண்கள் இரவுவேளைகளில் பந்தல் போடுவதற்காக வருவர்.

இன்றைய நிலையில் எம்மிடையே நிலவும் திருமணங்கள் பெரும்பாலும் மண்டபங்களை வாடகைக்குப் பெற்றே செய்யப்படுகின்றன. தட்டுமுட்டுப் பாத்திரம் தொடக்கம் மண்டபம், மணவறை எல்லாமே ஒருவரிடம் வாடகைக்கு அமர்த்தக் கூடிய வகையில் நுகர்வியம் எம்மிடையே வளர்ந்துள்ளது. முன்னைய காலங்களில் ஒரு சடங்காக ஊரிலுள்ள பெண்கள் கூடி எவ்வளவு உணவையும் சமைத்துப் போட்டனர். இன்று உணவு சமைப்பதற்குக் கூட கூலியாட்கள் உள்ளனர். நகரப்புறத்து நடைமுறைகளின் ஊடுபரவுகை கிராமிய நடைமுறைகளை மாற்றிய மைத்துள்ளன.

பாத்தி கிண்டுதல், வீடு வேய்ச்சலைப்போலவே ஆண்களின் பரஸ்பர கூட்டுச் செயற்பாட்டுக்குரியதொன்றாக விளங்கியது. பனங்காய்களைப் பிரித்து, அவற்றை மெத்தை போன்ற மண்படுக்கை அமைத்து அதன் மேல் அடுக்கி பனம் பாத்திகள் அமைக்கப்படும். பெரும்பாலும் பங்குனி மாதத்தை அண்டிய காலங்களில் பானம்பாத்திகள் கிழங்கிற்காகக் கிண்ட பப்படும். பனம் பாத்திகள் போடுவதில் ஒரு சிலர் ஈடுபட்டாலும்,

பாத்தி கிண்டுதல் பலர் ஈடுபடும் சடங்காக விளங்கும். பெரும்பாலும் மாலையில் பாத்திப்படையல்வைத்து ஆண்கள் பலர் சேர்ந்து பாத்திகிண்டி கிழங்கை எடுப்பர். அதிக பனங்காணியுள்ளவர்களின் பாத்திகள் பெரியளவில் அமையும். அதனை ஆண்கள் சேர்ந்து கிண்டுவதும், பெண்கள் சேர்ந்து கிழங்கு தெரிவதும், நெட்டி வெட்டி தோலுரித்து ஒடியல் காயப்போடுவதும், கிழங்கவிப்பதும் பால்நிலை வேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்ட தொழிற்பிரிப்பு முறையான (gender discrimination on division of labour) போதிலும் ஒரு கூட்டுவாழ்க்கை முறையாக விளங்கியதை மறுத்துவிட முடியாது.

எனினும், இன்று இந் நடைமுறைகளிலே மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன. குறிப்பாக மக்களது உணவுப்பழக்கத்தில் ஏற்பட்ட மாற்றங்கள் ஒடியல், புழுக்கொடியல் போன்றவற்றின் முக்கியத்துவத்தை இழக்கவைத்துள்ளது. அத்துடன் மக்களிடையே நிலவிவரும் சீதன முறையினால் காணிகள் துண்டாடப்பட்டு வருவதால் இந்நடைமுறைகளில் மாற்றங்கள் ஏற்பட்டள்ளன.

### சமூக நிலையில் கூட்டுவாழ்வு

ஒரு சமூகத்தின் அடிப்படைத் தனியலகு ஆணும் பெண்ணும்தான். இதனால் சமூகத்தின் கூட்டு வாழ்வு என்பது அவர்களின் கூட்டு வாழ்வினையே கருதுவதாகும். எனினும், ஆண், பெண் என்ற வேறுபாட்டுக்கு அப்பால் பொதுநிலையில் நின்று பார்க்கக் கூடிய சில கூட்டுவாழ்வின் வெளிப்பாடுகள் யாழ்ப்பாணக் கிராமியத்தின் உட்கிடையாக விளங்கியதையும் நாம் இனங்கண்டு கொள்ளுதல் வேண்டும். நாற்சார் வீடமைப்பு, வேள்விச் சடங்குகள், கிராமியத் தெய்வ வழிபாடுகள் போன்ற கருமங்கள் கூட்டுவாழ்வினைப் பிரதி பலிக்கும் சமூக நிகழ்வாக இருந்தன.

அன்றைய சமூகங்களில் சிறிய வீடுகளில் பெரிய குடும்பங்கள் வாழ்ந்தன. இன்று பெரிய வீடுகளில் சிறிய குடும்பங்கள் இருக்கின்றன. நாற்சார் வீடுகளை இன்று இடித்து வடிவமாற்றம் செய்யும் நிலை வந்துள்ளது. நாற்சார் வீடுகளில்

வாழ்ந்த கூட்டுக்குடும்ப அமைப்புகள் இன்று மாற்றம் கண்டுள்ளன. பொது முற்றங்கள் தனி முற்றங்களாக மாற்றம் பெற்றுள்ளன.

கிராமப்புறங்களில் நடைபெற்று வந்த வேள்விகள் அன்றைய கூட்டு நிலையின் அடிப்படை அம்சமானது. பலியிடலை முதன்மைப்படுத்திய வேள்விகள் பின்னாளில் பண்பாடற்றவை என்று கருதியபோதிலும், அதுவும் ஏதோவொரு அடிப்படையில் மக்களை ஒன்று கூட்டியிருந்தது. அந் நடைமுறை மாற்றமெய்தி மடைபரவுதல், நீர்ப்பாளையம் என்பவற்றுடன் தொடர்புடைய 'பக்குவப்பட்ட' வேள்விகள் கூட சமுதாய கூட்டு வாழ்வின் உந்துசக்தியாக அமைந்தன. ஒரு காத்தவராயன் கூத்துக்காக கிராமியமட்டத்தில் கூடிய மக்கள் தொகை காலகதியில் கருமாதியில் கூட இல்லை என்றாகி விட்டது.

**கூட்டு வாழ்வுக் குலைவும் பிரச்சினைகளும்**

இன்றை உலகளாவிய மாற்றங்களும், தனித்தனியே ஏற்படும் உள்ளக சமூக மாற்றங்களும் இணைந்து தனியாள் வாதத்தினை முனைப்புப்பெற வைக்கின்றது என்று கூறு வதையே அடிப்படைவாத சிந்தனை எனக்காணும் மரபு வலுப் பெற்றுள்ளது. எனினும் கீழைப்புல வாழ்நிலைப் பண்பாட்டு அடிப்படைகளின் உயிர்ப்பொருளான கூட்டு வாழ்வின் குலை வினைத் தூண்டும் விசைகள் யாவும் தனியாள் வாதத்தினை ஒரு பிரச்சினையாகவே எமது சமூகத்தில் விட்டுச் செல் கின்றன என்பது உண்மையே.

இன்று பரம்பரை இடைவெளியால் விளையும் பிணக்குகள், முதிர்கன்னிகள் பிரச்சினை, முதியவர் தனித்து விடப்படல், பாகப்பிரிவினையால் உண்டாகும் பிணக்குகள், பெண்களின் உள நெருக்கீடுகள் போன்ற பல்வேறு பிரச்சினைகள் விஞ்சி நிற்பதற்கு இந்தக் கூட்டுவாழ்வின் இழப்புக் காரணமாகி விடுகின்றது. வெறுமனே பொருளாதார நலன்களை மாத்திரம் மையப்படுத்திய தனியாள்வாத சிந்தனைகள் எமது வாழ்வை ஊடறுப்பது கூட்டு வாழ்வின் அவசியத்தை உணராத அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

# போரின் பிந்திய கிராமிய மேம்பாட்டில் சனசமூக நிலையங்கள்

07

## Community Centres in Post-War Rural Development

இன்று 'போருக்குப் பின்னான சமூக மேம்பாடு' என்ற கருத்துநிலை பல்வேறு தளங்களிலும், பல மட்டங்களில் பேசப்பட்டு வருவதையும், அவ்வாறு பேசப்படும் விடயங்கள் குறித்து பல நோக்கிலான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருவதையும் வெகுசாதாரண நிலையில்கூட அவதானிக்க முடிகின்றது. இந்தக் கருத்தியல் சர்வதேச நிலைப்பட்ட தேவைப்பாடுகள், தேசநிர்மாணம், பிரதேசமேம்பாடு என்ற பல தளங்களிலான நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. இவற்றில் பெரும்பான்மையான நோக்கங்கள் அரசியல் நிலைப்படுத்தப்பட்டதாகவே அமைகின்றன. எது எவ்வாறாயினும் போரினால் பாதிப்புக்குள்ளான மக்களின் பிரதான வாழ்விடங்கள் இன்றும் கிராமப்புறங்களாகவே விளங்குகின்றன. போரின் பின்னான சமூகமேம்பாடு, போரின் பின்னான சமுதாய மேம்பாடு என்றெல்லாம் பேசத் துணிகின்றபோது அவை போர் நிகழ்ந்து முடிந்த பிரதேசங்களின் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒவ்வொரு தனிமனிதனதும் வாழ்வு நிலை குறித்து அதிக அக்கறையுடன் கூடியதாக அமைவது அவசிய மாகின்றது.

சர்வதேசரீதியில் தீர்வுத்திட்டங்கள், சுயநிர்ணயம், ஜன நாயகம், தேர்தல் கண்காணிப்புகள் என்ற பேச்சுக்கள்

அதிகரித்துள்ளன. தேசிய எல்லைகளில் இனஒருமைப்பாடு, இனநல்லிணக்கம், தேசநிர்மாணம் என்ற பேச்சுக்கள் வலு வடைந்துள்ளன. இந்த 'மையப்படுத்தப்பட்ட கோசங்கள்' ஒருபுறம் இருக்க இவற்றிலிருந்து அந்நியமாகிப் போன நேரடியான போரின் தாக்கங்களுக்கு உள்ளான கிராமப்புற மக்களின் வாழ்வுகுறித்து அதிகமான கவனஈர்ப்புத் தேவைப் படுகின்றது. அந்த மக்கள் சமுதாயத்தின் மேம்பாட்டில் கவனிப்புக்குள்ளாகவேண்டிய விடயங்கள் குறித்துக் கலந் துரையாடவேண்டிய அவசியம் 'உணர்வு நிலைப்படுத்தப்பட' வேண்டியுள்ளது.

போரின் பின்னான மேம்பாட்டுத்திட்டங்கள் போர் பாதிப்புக்கள் ஏற்பட்ட பிரதேசங்களில் முடுக்கி விடப்பட்டுள்ளன என்பது குறித்த விவாதங்களுக்கு அப்பால் அத்தகைய திட்டங்கள் கிராமிய மட்டத்துக்குச் சென்றுசேரும் அளவு, வழிவகைகள் மற்றும் பொருத்தப்பாடு தொடர்பான அதிகமான 'உசாவல்கள்' தேவைப்படுகின்றன. இத்தகைய உசாவல்கள் போரின் பின்னான கிராமிய மேம்பாடு தொடர்பான 'புதிய மாதிரிகளை' தருவனவாக அமையும். இத்தகைய மாதிரிகளில் அடங்கவேண்டிய சில விடயங்கள் குறித்த கருத்தாடல்களை ஒரு கோட்பாட்டு நிலையில் நின்று உருவாக்குவதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். அத்துடன் ஒரு கிராமியச் சூழலில் அங்கு வாழும் மக்களின் ஒருமுகப்பாடான செயற்பாட்டினை உறுதிப்படுத்தவேண்டிய சமூகமட்ட நிறுவனங்கள் பல உள்ளன. அத்தகைய சமூகமட்ட நிறுவனங்களில் சனசமூக நிலையங்கள் முதன்மையானவை.

இன்று இந்த நிலையங்களின் பணிகள் விரிவாக்கம் பெறவேண்டிய தேவைகள் உள்ளன. போரின் பின்னான கிராமிய மேம்பாடுக்கான மாதிரிகளை இனங்கண்டு அவற்றை கிராமிய மட்டங்களில் நடைமுறைப்படுத்த முனையும் எவருக்கும் - எந்த அமைப்புக்கும் இத்தகைய கிராமிய மட்ட

நிறுவனங்களின் வலுவான ஆதரவு அவசியமாகின்றது. சனசமூக நிலையங்கள் மற்றும் அது சார்ந்த நிர்வாக கட்டமைப்பில் உள்ளவர்கள் கிராமிய மட்டத்தில் மிகுந்த செல்வாக்கும் இசைவும் உடையவர்கள். இந்த மேம்பாட்டு நடைமுறைகளில் வழமையான கருத்திட்டங்களுக்கு அப்பாற் சென்று புதிய பல விடயங்களை கருத்திலெடுக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. அதனால் போரின் பின்னான கிராமிய மேம்பாட்டு நடவடிக்கைகள் குறித்து விளக்கம்பெறும் அதே வேளையில் அதற்கான சனசமூக நிலையங்களின் பங்களிப்புகள் எவ்வாறு அமையலாம் என்பது குறித்தும் சிந்திப்பது அவசியமாகின்றது.

கிராமிய மேம்பாடு குறித்த மரபுவழிப்பட்ட விளக்கங்கள் கிராமிய சமுதாயத்தின் புவிசார் வரையறைகள், உள்ளூர் சமூக முறைகள் மற்றும் உள்ளூர் உறவுமுறைகளின் வகைகள் என்பன குறித்துத்தான் அதிகளவில் கவனம்செலுத்தின. அதாவது உள்ளூர் விவசாய தொழின்முறை விருத்தி, விவசாய தொழினுட்பங்களிலான மேம்பாடு, கிராமியமட்ட சமூக நிறுவனங்களின் கட்டமைப்பும் விருத்தியும், உள்ளூர் தலைமைத்துவ உருவாக்கம், உள்ளூர் சமய மற்றும் பண்பாட்டு நெறிமுறைகளிலான மேம்பாடு, கிராமிய மக்களின் இசைவும் ஒருமைப்பாடும், அதன் வழியான சமுதாய பங்கேற்றல்களும் குறித்துத்தான் அதிகம் பேசப்பட்டுவந்தது. இன்றைய கிராமிய மேம்பாட்டுக் கொள்கைகளில் இவைகுறித்த ஒரு 'மீள்கட்டமைத்தல் அணுகுமுறை' முன் வைக்கப் படுகின்றது. இந்த அணுகு முறையானது கிராமத்திினை ஒரு பாரம்பரிய வாழ்விடமாக மாத்திரம் கருதுவதில்லை. கிராமிய சமுதாயத்தின் இயக்கப்பாங்கிலான உருமாற்றத்துக்கான புதியவிசைகளையும் உள்வாங்கிக் கொண்டுதான் கிராமிய சமுதாய மேம்பாடு குறித்துப் பேசமுடியும் என்பதை இந்த மீள்கட்டமைத்தல் அணுகுமுறை வலியுறுத்துகின்றது.

கிராமிய மேம்பாடு குறித்து மீள்கட்டமைத்தல் அணுகுமுறையானது கிராமிய பொருளாதாரம், கிராமிய

சமுதாய நிறுவனங்கள், பண்பாடு, உறவுமுறை போன்ற பல்வேறு அம்சங்களிலும் ஏற்பட்டுள்ள இயல்பான மாற்றங்களை மாத்திரமன்றி ஏற்படுத்தவேண்டிய மாற்றங்களையும் குறித்து விளக்க முனைகின்றது. அதாவது கிராமமேம்பாடு குறித்த பாரம்பரியமான எண்ணக் கருக்களிலான மாற்றங்களை இது வலியுறுத்துகின்றது. இந்த மீள்கட்டமைத்தல் எண்ணக்கரு 'கிராமிய மேம்பாட்டினைப் பூகோளமயப்படுத்தல்' என்ற வேணவாவினைத் தன்னுள் பொதிந்து வைத்துள்ளது.

உலகளாவிய ரீதியில் இயல்பாக ஒரு சமூகமாற்றச் செயன்முறையின் வழியான கிராமிய சமுதாய மீள்கட்டமைப்பு நிகழ்தலும் போர் போன்ற ஒரு உடனடிக் காரணத்தினால் அந்த மீள்கட்டமைப்பு நிகழ்தலும் வித்தியாசமானவையே. போரினால் கிராமிய சமுதாயத்தில் நிகழும் மீள்கட்டமைப்பு என்பது உண்மையில் இருந்து வந்த ஒரு மரபான கிராமியவாழ்வு பற்றிய 'மீள்கண்டுபிடிப்பாகவும்' அதேநேரத்தில் நிகழ்போக்கிலுள்ள எதிர்பார்ப்புக்கள் மற்றும் உலகளாவிய அளவுகோல்களுக்கு ஏற்றவகையில் அந்தக் கிராமிய வாழ்வினை நிலை நிறுத்த முற்படுதலுமாகும். போரின் தாக்கத்துக்கு உட்பட்ட கிராமங்கள் பற்றியும் அவற்றின் மேம்பாடு குறித்தும் பேசுபவர்கள் அந்த இரட்டைச் சுமையினை இன்று கொண்டுள்ளனர்.

இலங்கையில் யுத்தத்தின் நேரடியான மற்றும் உடனடியான பாதிப்புக்களை வடக்கு கிழக்கு மாகாணத்திற்கு உட்பட்ட பிரதேசங்களே அதிகளவில் அனுபவித்து வந்துள்ளன. அந்தப் பிரதேசங்களுக்கு அப்பால் அதன் 'அதிர்வுகள்' ஏற்பட்டுள்ளமையும் இன்னொரு விடயம். வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் கிராமிய மேம்பாட்டிற்கு இயல்பாக இருந்துவந்த சவால்களுக்கு மேலாக இன்று போரின் விளைவால் உருவான புதிய சவால்களையும் இணைத்துச் சிந்திக்கவேண்டிய அவசியம் எழுந்துள்ளது.

இயல்பாக இருந்துவந்த சவால்களை விரிவாக ஆராய்வது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல. ஆயினும் அச்சவால்கள் போரின் பின்னர் சில பிரதேசங்களில் இரட்டைச் சுமைகளாக உருவெடுத்துள்ளன. குறிப்பாக குடியிருப்புக்களின் அளவு, சொந்தக் காணியுரிமை, வீட்டுவசதி, விவசாயம் சார்ந்த உழைப்பின் கிடைப்பனவு, கிராமமட்ட நிறுவனங்களின் இயல்பான செயற்பாடுகள், சுத்தமான குடிநீர் கிடைப்பனவு, போக்குவரத்து, மின்சாரம், கல்விக்கான வளம், கிராமிய வறுமை போன்ற பல்வேறு விடயங்களிலும் கிராமியப் பிரதேசங்கள் அனுபவித்துவந்த சவால்கள் இன்றும் தொடர்வதுடன் போரின்பின் இச் சவால்களின் கனம் அதிகரித்துள்ளதுடன், அவை புதிய சில பிரச்சினைகளாக 'கிளைத்துள்ளமையும்' அவதானிக்கத்தக்கது.

கிராமியப் பிரதேசத்தின் சமூகப் பண்புகள் பலவும் போரின் பின்னர் 'நிலைதடுமாற்றம்' எய்தியுள்ளன. பொதுவாக இத்தகைய சமூகப் பண்புகளாக:

**01.** குடியியல் கட்டமைப்பு

**02.** இன, மொழிப் பண்பு

**03.** சமூகக் கட்டமைப்பு

**04.** நிலவுரிமையும் மரபுச் சொத்துக்களும்

**05.** சமயச் செயற்பாடு மற்றும் நம்பிக்கைகள்

**06.** வழக்காறு, சடங்குகள், விலக்குகள் மற்றும் முற்சாய்வுகள்சார் பண்பாட்டு செயற்பாடுகளும் நம்பிக்கைகளும்

**07.** வாழ்வின் எந்தவொரு அம்சம் தொடர்பான தனியன்கள் அல்லது குழுக்களின் உளப்பாங்குகள்

என்பவற்றைக் குறிப்பிடலாம். இப்பண்புகளில் அடிப்படை மாற்றங்களை கிராமப் பிரதேசங்களில் போர் விளைவித்துள்ளது. இதனால் போரின் பின்னரான கிராமிய மேம்பாடு பற்றிய சிந்திப்புக்களில் இவை கவனத்திலெடுக்கப்பட வேண்டும்.

இயல்பாக இருந்துவந்த சவால்கள், சமூகப் பண்பிலான மாற்றத்தின்வழி விளைந்த சவால்கள் என்பவற்றுக்கு மேலாக இன்று கிராமங்களில் போரின் விளைவான அங்கவீனம், பெண் தலைமைக் குடும்பங்கள், பாடசாலை இடைவிலகல், உள நெருக்கீடுகள், புனர்வாழ்வு, பெற்றோரின் சமூக இசைவு, 'அவசரத் திருமணங்களின்' பின்னான விதவையாதல் மற்றும் மணமுறிவுகள், சிறுவர்கள் தனித்து வாழ்தல், முதியோர் தனித்து வாழ்தல், குடும்ப பொறுப்புக்களிலான வகிபங்கு மாற்றங்கள், திடீர் மாற்றங்களுக்கு இசைவுபடுத்தமுடியாத ஏக்கங் களும் பணப் பாய்ச்சலின் வழியான இடைவெளிகளும் போன்ற பல பிரச்சினைகள் எழுந்துள்ளன. இந்நிலையில் ஒரு கிராமியமட்ட நிறுவனமாகத் தொழிற்படும் சனசமுக நிலையம் இந்த மூன்றுவித சவால்களையும் வெற்றிகொள்ள தன்னளவில் செய்யவேண்டிய பணிகள் குறித்து 'தன்னூக் கத்துடன்' செயற்படல் வேண்டும்.

மேற்கண்ட பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான மாதிரிகள் குறித்த விடயங்கள் ஆழமான ஆராய்ச்சியின் வழியானவை; தனித்தனியான விவாதங் களுக்குரியவை. இவற்றுக்காக ஒருங்கிணைக்கப்பட்ட மாதிரியை கண்டறிதல் என்பது இலகுவானதொன்றல்ல. ஆனால், ஒரு சமூகமட்ட நிறுவனத்தினையோ அல்லது சனசமுக நிலையத்தினையோ பொறுத்தவரையில் இப்பிரச்சி னைகளை வெற்றிகொள்ளும் நோக்கில் உருவாக்கக்கூடிய தனித்தனியான 'கருத்திட்டங்கள்' மிகக்கூடிய நடைமுறைச் சாத்தியத்தினையும் வலுவூட்டல் பண்பினையும் கொண்ட னவாக அமைய முடியும். இத்தகைய கருத்திட்டங்களை உள்ளடக்கிய சனசமுக நிலையங்களின் பணிகள் எவ்வாறு அமையலாம் என்ற ஒரு கருத்துநிலை விளக்கமாக பின்வருவன முன்வைக்கப்படுகின்றன.

01. கிராமங்கள் பலவும் இன்று துண்டாடப்பட்ட காணி உரிமை களுடன் உள்ளன. இதனால் வேளாண்மை முயற்சிகளின்

போக்குகளில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இதனால் விவசாயம் சார்ந்த உழைப்பின் கிடைப்பனவில் மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. புதியவகை தொழில் முயற்சிகளின் வருகை கிராமிய உழைப்பு மற்றும் வருமானம் என்பவற்றில் மேலாண்மை செய்கின்றன. இதனால் பாரம்பரியமான தொழில்களில் ஏற்பட்டுவரும் மாற்றங்களுக்கு அமைவாக தொழில்சார் புத்தறிவு மற்றும் பயிற்சிகளை இளையவர்களுக்கு வழங்கும் ஏற்பாடுகளை மேற்கொள்ள சனசமூக நிலையங்கள் முன்னிற்க வேண்டும்.

02. சில கிராமிய சமுதாயங்களில் இன்னொரு பிரதேசத்திலிருந்து உள்ளக இடப்பெயர்வின் மூலமாக வந்து குடியேறியுள்ளவர்கள் நீண்டகாலமாக வாழ்ந்துவருகின்றனர். அத்தகையவர்களின் மீள் குடியேற்றத்திலான தாமதத்தினால் காணியுரிமை குடியிருப்பின் அளவு, வீட்டு வசதிகள், சூழல்சார் பிரச்சினைகள், தொழில்சார் பிரச்சினைகள் போன்றன தொடர்பில் கிராமப்புறங்கள் எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்கும் ஆற்றலுள்ளவையாக சனசமூக நிலையங்கள் தொழிற்படல் வேண்டும். இது ஒரு வாழ்விடவெளி (space) சம்பந்தப்பட்ட பிரச்சினையாக மாத்திரமன்றி சமூக, பொருளாதார பண்பாட்டு வேறுபாடுகள் சார்ந்த பிரச்சினையாகவும் விளங்குவதால், மனிதாபிமானத்துடனும் ஒருமைப்பாட்டுடனும் கையாளவேண்டிய பொறுப்பினைச் சனசமூக நிலையங்கள் எடுத்துக்கொள்ளவேண்டும்.

03. கிராமிய வறுமையானது பாரம்பரிய தொழில் முறையிலான மாற்றம், புதிய தொழில்களின் வருகையும் அதற்கான போதிய பயிற்சியின்மையும் போன்ற காரணிகளுடன் தொடர்புடையன. ஆயினும், இன்று அவற்றைவிட முதன்மையான பல காரணிகள் உள்ளன. க.பொ.த சாதாரண மற்றும் உயர்தர வகுப்புடன் கல்வியிலிருந்து இடைவிலகிப்போன, தங்கியிருக்கும் இளைஞர், யுவதி

களின் வேலையின்மை, குடும்பத்தின் உழைக்கும் தலை மகனின் (Bread winner) இழப்பு, புதிய முயற்சியாண் மைகளின் வரவிலான தேக்கம் போன்ற பல காரணிகளை எதிர்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்களை கிராம மட்டத்தில் முன்னெடுக்கும் திடசங் கற்பம் கொள்ளுதல்.

04. கிராமிய வாழ்வின் ஒரு தவிர்க்கமுடியாத கூறாக மாறிவருகின்ற இளையோரின் விலகல்கள் மற்றும் பிறழ் வுகள் தொடர்பில் அதிக அக்கறை எடுக்கும் நிறுவனமாகச் சனசமுக நிலையங்கள் மாற்றம் பெறுதல். இளையோர்க் கான சந்தர்ப்பமளித்தல், தலைமைத்துவ பயிற்சியளித்தல், தொழிற்பயிற்சியளித்தல், வழிகாட்டல் ஆலோசனை வழங்கல், ஆளுமைவிருத்திப் பயிற்சிகள் வழங்கல் போன்றவற்றின் வாயிலாக இளையோரின் சமுதாயப்பணி ஈடுபாட்டினைத் தூண்டிவிடுதல் இன்று மிக அவசியமான பணியாகி நிற்கின்றது. இதன்மூலமாக போருக்குப் பிந்திய சூழலில் திடீரென முகிழ்த்து எழும் இளையோரின் எதிர்முகமான உபபண்பாட்டு நடைமுறைகளின் பெருக்கத்தினைக் கட்டுப்படுத்தும் வகையிலும் இளையோரின் சமூகப் பங்களிப்பினை உறுதி செய்யும் வகையிலும் சனசமூக நிலையங்கள் நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல் வேண்டும்.

05. கிராமிய வாழ்வின் மரபார்ந்த அம்சங்கள் சமூக மற்றும் பண்பாட்டு மாற்றத்தின் விசைகளால் மாற்றம் கண்டுவருவது தவிர்க்கவியலாததுதான். ஆயினும், மர பார்ந்த அம்சங்களின் தொடர்ச்சியான நிலை பேற்றுக்கான அடித்தளங்கள் கிராமங்களே. இதனால், போரின் பின்னான மீள்கட்டுமான முயற்சிகள் அபிவி ருத்திச் செயற்றிட்டங்களின் பெயரால் 'மரபுச் சொத்துகள்' என மதிக்கத்தக்க வாழ்வின் செழுமையினைப் பிரதி பலிக்கும் அமிசங்கள் அழிக்கப்பட்டுவிடாமல்பாது காப்பதற்கான மக்களின் உளப் பாங்கின் உறுதியை கட்டிக்

காக்கும் நிறுவனங்களாகச் சனசமூக நிலையங்கள் தொழிற்படல் வேண்டும்.

06. போரின் நேரடியான பாதிப்புக்களால் நலிவுற்ற பிரிவினரில் பல வகைப்பட்டவர்கள் உள்ளனர். அத்தகையவர்களில் சிறுவர்கள், முதியோர், இளம் விதவைகள், விதவைகள், முன்னாள் போராளிகள், அங்கவீனர்கள், உள நெருக்கீட்டுக்கு உள்ளானோர் போன்றோர் குறிப்பிடத் தக்கவர்கள். இவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் விரிவான தனித்தனி ஆய்வுக்குரியன. இவர்கள் குறித்தான அக்கறை உலகளாவிய நிலையில் அமைந்துள்ளது. ஆயினும், அடிப்படையில் கிராமிய மட்டத்தில் தொழிற்படும் நிறுவனங்கள் அவர்களின் வாழ்வு குறித்து அதிக சிரத்தை எடுத்தல் வேண்டும். முதன்மையாக, சமூகத்தில் தாம் ஏதோ அடிப்படையில் புறந்தள்ளப்பட்டவர்கள் என்ற மனோபாவத்திலிருந்து அவர்களை மீட்டெடுத்து இசைவான சமுதாய வாழ்வுக்குள் ஈர்த்தல் வேண்டும். இதற்கான மிக அடிப்படையானதும் எளிமையானதுமான கருத்திட்டங்களை கிராமிய மட்டத்தில் நடைமுறைப் படுத்துவது மிகவும் அவசியமானதாகும்.

07. போரின் நேரடியான பாதிப்புக்குள்ளான கிராமப்புறங்களில் உள்ளவர்களிடம் ஒரு முதன்மையான மனநிலை உள்ளது. அதாவது 'போரின் கொடிய நினைவுகளுக்கு உட்படுதல்' என்பது ஒரு தவிர்த்துவிட முடியாத உளநிலையாகத் தொடர்கின்றது. இந்நிலையிலிருந்து மீட்சி பெறுவதற்கு உளவியல் ரீதியாக பல்வேறு வழி முறைகளை முன்வைத்தாலும் அடிப்படையில் கிராமியவாழ்வின் உயிர்ப்பான அம்சங்களில் ஒன்றாகக் கூடிச் செயலாற்றல் நல்லதொரு 'தப்பித்தற்' செயன்முறையாகும். இதற்கான நல்ல வாய்ப்புக்களை வழங்கத்தக்க செயற்றிட்டங்களை சனசமூக நிலையங்கள் உருவாக்க வேண்டும்.

மேற்குறித்த விடயங்கள் யாவும் மிக ஆழமான ஆய்வுகளின் வழி விளங்கிக் கொள்ளப்படவேண்டியவை. கிராமிய வாழ்வின்

சவால்களை அதன் பாரம்பரிய சமூக பண்பிலான மாற்றம் என்ற நிலைகடந்து இன்று பல்வேறு வடிவங்களை உலகளாவிய ரீதியில் எடுத்துள்ளன. இவற்றுக்கு மத்தியில் போர் ஒன்று நடந்துமுடிந்த பிரதேசத்தில் மிகவும் சிரத்தை யுடன் கவனிக்கவேண்டிய பல பிரச்சினைகள் கிராமிய மட்டத்தில் புதிதாய் முகிழ்த்துள்ளன. இவை யாவற்றையும் எதிர்கொண்டு பணியாற்றும் அமைப்புக்களாய் கிராமியமட்ட நிறுவனங்களில் குறிப்பாக சனசமூகநிலையங்கள் செயலூக்கம் பெறவேண்டியது காலத்தின் தேவையாகும்.

# பேண்தகு மேம்பாட்டில் சமூக வலுவூட்டலின் வகிபாகம்.

08

## Role of Social Empowerment in Sustainable Development

### முகவுரை

சமூக மேம்பாடு தொடர்பான கருத்தாடல்களின் மையப் பொருளாக இன்று 'பேண்தகு மேம்பாடு' (sustainable development) என்பது முதன்மை பெற்றுள்ளது. எந்தத் துறைசார்ந்த மேம்பாடுகளும் நீடித்து நிலைக்கக்கூடியதாகவும் எதிர்கால சந்ததியின் நலமான வாழ்வுக்கு இடையூறு அற்றதாகவும் அமைதல் வேண்டும் என்பதே இதன் அடிப்படையாகும். உலகம் பூராகவும் மேம்பாட்டு முன்னெடுப்புக்கள் யாவற்றினதும் பக்கவிளைவுகளாகவும் சமாந்தர வெளிப் பேறுகளாகவும் சூழல் மாசடைதல், வளப்பற்றாக்குறை, வளப் பரம்பலிலான சமமின்மை என்ற பல பிணக்குகள் அதிகரித்து வந்துள்ள நிலையில், இந்தப் பாதக நிலைகளின் தாக்கங்களைத் தவிர்த்து தேசங்களின் மேம்பாட்டினைக் கட்டியெழுப்புதல் வேண்டும் என்ற சிந்தனை 'பேண்தகு மேம்பாடு' என்ற எண்ணக்கருவினுள் அடங்கியுள்ளது. மேம்பாடு என்பது எந்தத் துறை சார்ந்த வகையில் பேசப் பட்டாலும் இறுதியில் அது 'சமூக மேம்பாடு' என்ற உயரிய நோக்கினையே கொண்டதாகும். சமூக மேம்பாட்டின் பிரதான பங்காளிகளாகவும் பயனாளிகளாகவும் விளங்குகின்ற மக்களின் பங்கேற்றலே பொருத்தமான சமூக மேம் பாட்டுக்கான முன் தேவைப்பாடாக (pre requisition) அமையும். மக்கள் பங்கேற்றலை அதிகரித்து சமூக மேம்பாட்டினை

அடைய பொருத்தமான ஒரு 'சமூக வலுவூட்டற் செயன்முறை' (social empowerment process) இன்றியமையாததாகின்றது. இதனால் பேண்தகு மேம்பாட்டின் அடிப்படையான ஒரு அம்சமாக சமூக வலுவூட்டல் அமைந்து விடுகின்றது.

## சமூக மேம்பாட்டின் உயர் இலக்குகள்

சமூக மேம்பாடு என்பதை பலவாறு வரையறுப்பர். 1948 இல் நடைபெற்ற அஷ்றிச் சமூக மேம்பாட்டு மாநாட்டில் 'Community development is a movement designed to promote better living for the whole community with the active participation and if possible with the initiative of the community' என்று விளக்கம் வழங்கப்பட்டுள்ளது. இதன்படி செயற்றிறன் வாய்ந்த மக்களின் பங்களிப்பும் அவர்களின் முன்னெடுக்கும் ஆற்றலும் தான் சமூக மேம்பாட்டின் அடிப்படைகளாக விளங்கப்பட்டுள்ளன என்பதை உய்த்துணரலாம். அதாவது ஒரு முழுமையான சமுதாய நலவாழ்வு என்பதுதான் சமூக மேம்பாட்டுப் பணிகளின் இலக்காகும். இந்த இலக்கு மக்களின் செயற்றிறன் வாய்ந்த பங்கேற்றலாலும் சமுதாயத்தின் முன்னெடுக்கும் திறன்களாலும் சாத்தியமாவதாகும். முன்னெடுக்கும் திறன் மற்றும் செயற்றிறானான பங்கேற்றல் என்பவற்றை எய்துவதற்குத்தான் சமூக வலுவூட்டலின் அவசியம் குறித்துப் பேசப்படுகின்றது.

சமூக மேம்பாட்டிலும் அதன் நிலைத்திருக்கும் தன்மையிலும் சமூக வலுவூட்டல் எந்தெந்த வழிகளில் தேவைப்படுகின்றது என்பது குறித்து விரிவாக ஆராய்வதற்கு சமூக மேம்பாட்டின் சில தத்துவ அடிப்படைகளையும் அதன் தந்திரோபாயங்களையும் விளக்கிக்கொள்வது அவசியமாகும்.

சமூக மேம்பாடு மூன்று பெரும் ஜனநாயகப் பண்புகளின் அடித்தளத்தில் உருவாக வேண்டும் என்பார்கள். அவையாவன

1. இது வெறுமனே அளவுரீதியான முன்னேற்றம் (quantitative advance) அல்ல. பதிலாக தரத்தினை உள்ள டக்கிய நியமம் சார்ந்த உட்கூறுகளை (normative elements) கொண்டு அமைதல் வேண்டும்.

2. வறுமை தொடர்பான பிரச்சினைகள், தரமான கல்விச் செயன்முறையை விரிவுபடுத்துதல் மற்றும் சுகாதார பராமரிப்பை வெளிப்படுத்துவதாக அமை தல் வேண்டும்.

3. சமூக மற்றும் பொருளாதாரச் செயன்முறைகளில் பாராபட்சம் மற்றும் வெளிப்படுத்தும் குரலிலான தேக்கம் (lack of voice) போன்ற சமூகப் புறந்தள்ளல் (social exclusion) தொடர்பான விவகாரங்களை வெளிப்படுத்துவதாக அமைதல் வேண்டும் என்பனவாகும்.

மேற்கண்ட அம்சங்களின் உள்ளடக்கமாகத்தான் 1995 இல் சமூக மேம்பாட்டுக்கான சர்வதேச உச்சி மகாநாட்டில் சமூக மேம்பாட்டின் இறுதி இலக்காக எல்லா மக்களினதும் வாழ்க்கைத் தரத்தினை வளர்த்தல் மற்றும் முன்னேற்றுதல் அமைதல் வேண்டும் என்ற கருத்து உருவாக்கப்பட்டது. இதன் வழி சமூக மேம்பாடு என்பது ஜனநாயக விழுமியங்கள் சமத் துவத்தைக் கட்டி வளர்த்தல் போன்ற அம்சங்களை நிறைவேற் றுவதாக அமைதல் வேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த எதிர்பார்ப்புக்கள் குறித்து செயற்பாட்டு நிலையில் சமூக மேம்பாடு தொடர்பில் பல சவால்கள் உள்ளன. உயர்ந்த மட்டத்திலான வறுமை, சமத்துவமின்மை, வேலையின்மையும் கீழுழைப்பும், சமூக பொருளாதார மேம்பாட்டின் நன்மைகளை அனுபவிப்பதிலிருந்து பெரும்பான்மையானவர்கள் புறந்தள்ளப்படுதல், பங்குபற்றல் மூலமான ஜனநாயகத்தின் அடைவு, சிவில் சமூகத்தின் வரையறுக்கப்பட்ட பங்கேற்றல் போன்ற பல காரணிகள் சவால்களாக அமைந்து அச்சுறுத்தி வருகின்றன.

இத்தகைய அச்சுறுத்தல்களிலிருந்து விடுபட்டு உண்மையான சமூக மேம்பாட்டினை அமைப்பதற்கான தந்திரோபாயங்களை குறித்துச் சிந்திக்கும் போது பின்வரும் விடயங்களை முனைப்பாக கவனித்தல் வேண்டும்

1. சமூக மேம்பாடு தொடர்பில் முதன்மைப்படுத்தப்படும் தலைச்சன் (flagship) நிலையிலிருந்து விலகி முழுமை தரும் அதிகளவிலான விடயங்களை உள்ளடக்கிய தரவு

உயர்வுக்கான சமூக பாதுகாப்பு அம்சங்களை கவனித்தல் வாழ்நாள் முழுவதற்குமான சமூக காப்பீடு, சமூக சேவை செயற்பாடுகள், முதியோர் ஓய்வூதியம், வலுவற்றவர் களுக்கான மானியம், சிறுவர்களுக்கான உதவிகள் போன்றவற்றை இதற்கு உதாரணமாகக் கூறமுடியும்.

2.வலுவற்றிருக்கும் நிலையினை வெளிப்படுத்தலும் சமூக மற்றும் பொருளாதார உட்படுத்தல் நிலைக்கு (inclusion) ஆதரவளித்தலும் தொடர்பாக கவனமெடுத்தல் இதற்காக தேசியரீதியில் கிராமியமட்டத்து வேலைவாய்ப்பை உறுதி செய்யும் நிகழ்ச்சித் திட்டங்கள், பொதுவான வேலை வாய்ப்பு நிகழ்ச்சித்திட்ட விரிவாக்கம், உள வளத்துணை மற்றும் சோதனைகள் தொடர்பாக உதவியளித்தல் போன்ற பல விடயங்கள் இன்று உலகளாவிய ரீதியில் மேம்பாடு குன்றிய நாடுகளில் நடைமுறைப்படுத்தப்படு கின்றன.

3.மனித மூலதனத்திலான முதலீட்டை அதிகரித்தல் மற்றும் அடிப்படை சேவைகளை செயல் வடிவாக்குதல் சார்பான உறுதிப்பாடுகளை கவனித்தல்.

4.மக்களிடையே உணவுப் பாதுகாப்பு தொடர்பான விடயங்களை கவனித்தல். இதற்காக போசாக்குத் தொடர்பில் தேசிய அளவிலான ஆரம்பக் கல்வி நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குதல் போன்ற நடவடிக்கைகளை நாடுகள் எடுத்துவருகின்றன.

5.உள்ளூர் தொடர்பான அறிவையும் பண்பாட்டினையும் தழுவிய விடயங்களில் கூடுதலான கவனமெடுத்தல்.

6.பேண்தகு மேம்பாடு நோக்கிய வேலைத்திட்டங்களை கவனித்தல்.

7.ஜனநாயகப் பண்பினை வளர்க்கவல்ல சிவில் சமூக பங்கேற்றலை மேம்படுத்தல் தொடர்பாக கூடிய கவனமெடுத்தல்.

இத்தகைய தந்திரோபாயங்களைக் கையாள்வதன் மூலம் தான் உண்மையான சமூகமேம்பாடு எய்தப்பட முடியும். இதன் வழிதான் பேண்தகு மேம்பாடு என்பது சாத்திய மாகின்றது. இன்றைய உடன் நிகழ் போக்குகளின் பேண்தகு சமூக மேம்பாட்டின் பிரதான 'இணைப்பயணியாக' சமூக வலுவூட்டல் அமைந்து விடுவதைக் காணலாம்.

**பேண்தகு மேம்பாட்டின் அடிப்படைகள்.**

பேண்தகு மேம்பாடு என்பது ஏற்கனவே கூறப்பட்டது போல 'சூழலியல்' பற்றிய கருத்துக்களுடன் பொருந்தி மேம் பாட்டினை நோக்குவது ஆகும். Mintzer (1992) என்பவர்இதுபற்றி கூறும் போது 'பேண்தகு மேம்பாடு என்பது சூழலின் தரத்தினைப் பாதுகாத்தல் என்பதைக் குறிக்கின்றது. இவை ஒன்றில் இன்னொன்று செல்வாக்கு செலுத்துவது இயற்கை உலகுக்கும் மனித நடவடிக்கைகளுக்கும் இடையிலான உறுதிப்பாடான உறவு பற்றியதே என்பதுடன் எதிர்கால சந்ததியின் வாழ்க்கைத் தரம் குறித்த ஆகக் குறைந்த மகிழ்வு நிலை பற்றியதாகும்' என்று குறிப்பிடுகின்றார். அத்துடன் பேண்தகு மேம்பாட்டினை அடைவதற்கான முன்தேவைப் பாடுகளாக பங்குபற்றலுடன் கூடிய ஜனநாயகம் (participatory democracy) அதிகாரமளிக்கப்பட்ட ஆர்வத்தின் வழியான மேலாண்மை அற்ற நிலை (undominated by vested interests) என்பன தான் என பல அவதானிகளும் நம்புகின்றனர் (Mintzer,1992) என்றும் கூறுகின்றார். இந்தக் கருத்து உண்மையில் பேண்தகு மேம்பாட்டில் மக்கள் பங்கேற்றலை ஊக்குவிப்பதற்குப் பொருத்தமான சமூக வலுவூட்டல் செயன்முறைகள் தொடர்பாக விவாதித்தல் வேண்டும் என்பதை உணர்த்துகின்றது.

பேண்தகு மேம்பாடு என்பது சமூகம், பொருளாதாரம், சூழல் என்ற மூன்று அம்சங்களின் வழி நின்று சிந்திக்கப்படும் ஒரு எண்ணக்கருவாகும். இவ்வாறு சிந்திக்கும் போது 1987 இல் சூழல் மற்றும் மேம்பாட்டுக்கான உலக ஆணைக்குழுவின் முன்வைப்புக்களாக அமைந்த (Agenda 21) பின்வரும் நான்கு கருப்பொருள்கள் (themes) கவனிக்க வேண்டியவை;

1. பிரிவு I சமூக மற்றும் பொருளாதார பரிமாணம்.
2. பிரிவு II மேம்பாட்டுக்காக வளத்தினை முகாமை செய்தலும் பாதுகாத்தலும்
3. பிரிவு III பிரதான குழுவினரின் வகிபாகத்தினை வலுப்படுத்தல்
4. பிரிவு IV நடைமுறைப்படுத்தும் வழிமுறைகள்

இவற்றில் பிரிவு I இல் வறுமையை எதிர்த்துப் போராடுதல், நுகர்வுக் கோலத்தை மாற்றியமைத்தல், சுகாதாரத்தை மேம்படுத்தல், சனத்தொகையை மாற்றுதலும் உறுதியான வாழ்விடமும் போன்றன குறித்து விவாதிக்கப் படுகின்றது.

பிரிவு II இல் வளிமண்டலப் பாதுகாப்பு, காடழித்தலுக்கு எதிராகப் போராடுதல், உயிர்ப்பல்வகைமையை கட்டுப் படுத்துதல் போன்றன குறித்து பேசப்படுகின்றது.

பிரிவு III இல் பேண்தகு மேம்பாட்டில் சிறுவர், இளைஞர் பங்குகள், பெண்களின் பங்கு, உள்ளூர் அதிகாரங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், வியாபாரம் மற்றும் வேலைகளில் ஈடு படுபவர்களின்பங்குகள் குறித்து கலந்துரையாடப் படுகின்றது.

பிரிவு IV இல் பேண்தகுமேம்பாட்டு வழிகளான வேலைத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வழிகளான விஞ்ஞான தொழிநுட்ப பரிமாற்றம், கல்வி சர்வதேச நிறுவனங்கள் மற்றும் நிதித் தொழிற்பாட்டு முறைகள் என்பன குறித்து விளக்கப் படுகின்றன.

இந்த நான்கு பிரிவுகளில் எந்தப் பிரிவாயினும் மக்களின் முறையான பங்கேற்றலை உறுதிப்படுத்திக் கொள்ளாமல் சாத்தியமாக முடியாதவை அவற்றுக்கான மக்கள் பங்கேற்றல் என்பது பொருத்தமான வலுவூட்டல் செயன்முறை வழி அடையப்படும் போதுதான் பேண்தகு மேம்பாட்டின் உயரிய இலக்குகளை அடையமுடியும். மேற்கண்ட நான்கு பிரிவுகளில் அடங்கும் விடயங்களும் அமுல்படுத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்களாக அமையும் போது அவற்றில் பங்கேற்று

தாம்சார்ந்த சமூக மேம்பாட்டுக்கு உதவும் வகையில் மக்களை வலுவூட்டுதல் முதன்மையான ஒரு பணியாகின்றது.

## பேண் தகு மேம்பாட்டுக்கான சமூக வலுவூட்டல் இலக்குகள்

சமுதாய மேம்பாட்டுத் திட்டங்களில் சமூக வலுவூட்டலின் முக்கியத்துவத்தை நோக்குவதற்கு சமூக வலுவூட்டல் தொடர்பான சரியான புரிதல் இன்றியமை யாததாகும்.சமூகவலுவூட்டல் என்பது உளவியல் அல்லது சமூகமேம்பாடு சார்ந்த மாற்றீடான அணுகு முறைகளுடன் பொதுவாக இணைந்துள்ளது என்பதுடன் உள்ளூர் அடிமட்ட, சமுதாய மட்ட அமைப்புக்கள் மற்றும் தன்னார்வ முன்னெடுப் பாளர்களை கருத்தில் கொண்டதுமாக அமைந்தது. (Parpart,Rai&Staudt, 2003) சமுதாய வலுவூட்டல் என்ற சொற்பிரயோகம் பல்வேறுவகையான துறைகளில் பிரயோகமாகி வருகின்றது. சமுதாய உளவியல், முகாமைத்துவம், அரசியல் கோட்பாடுகள், சமூகப்பணி, கல்வி, பெண்சார் கற்கைகள், சமூகவியல் போன்ற துறை களிலும் இது ஆழமாகக் கலந்துரையாடப்படும் எண்ணக் கரு வாகிவிட்டது. பல்பரிமாணம் கொண்ட இந்தச் சமூகச் செயன் முறையானது மக்கள் தங்களது வாழ்வைத் தாமே கட்டுப்படுத்த உதவுகின்றது. (Page&Czuba,1999) தனியாள் நிலையிலும் குழு நிலையிலும், சமுதாய மட்டத்திலும் இந்த சமுதாய வலுவூட்டல் நிகழ்கின்றது.

சமூக மேம்பாட்டுத் திட்டங்களில் சமூகவலுவூட்டல் ஏன் அவசியமானது என்பதை விளங்கிக் கொள்ளும் போது தான் பேண் தகு மேம்பாட்டில் சமூகவலுவூட்டலின் இடம் குறித்து தெளிவு பெறமுடியும்.

சமூக வலுவூட்டலின் இலக்குகள் தொடர்பாக விளக்கம் தரும் ஆய்வாளர்கள் பின்வருவனவற்றை முதன்மையளித்து பேசுவர்.

1. சமூக மூலதனத்தை வலுவூட்டும் வகையிலான திறன் விருத்தியை ஏற்படுத்துதல்.
2. பிராந்திய ரீதியான தலைமைத்துவக் கோலங்களை

விருத்தி செய்தல்.

3. எல்லைப்படுத்தப்பட்ட மக்களின் ஈடுபாட்டினை அதி கரித்தல்.
4. பால் நிலை ரீதியாக கருத்துக்களில் தெளிவு பெற்று பெண்களை வலுவூட்டுதல்.
5. பண்பாட்டு ரீதியாக மற்றும் சமூக ரீதியாக மேம்பாட் டுக்கான தடைகளை தாண்ட அவசியமான திறன் களைப் பெறுதல்.
6. சமுதாய மட்ட நிறுவனங்களை அமைத்தல் அல்லது மீளக்கட்டி அமைத்தல்
7. தனியாட்களுக்கும் சமுதாயத்திற்கும் இடையிலான உறவினைக் கட்டிவளர்த்தல்
8. மனித மற்றும் பௌதீக வளங்களை ஒழுங்க மைத்தலும் பயன்படுத்துதலும்.
9. தனியாள் நிலையிலும் கூட்டுநிலையிலும் தீர்மானம் எடுத்தலுக்கான திறன்களைக் வளர்த்தல். அதற்காக தகவல்கள் மற்றும் வளங்களை கையாளும் திறனை அதிகரித்தல்.
10. மாற்றம் ஒன்றை அறிமுகப்படுத்தவும் அதனை ஏற்றுக் கொள்வதற்குமான நேர் சிந்தனையை உருவாக் குதல்.
11. சுய முன்னெடுத்தலுக்கான திறன்களை வளர்த்தல்.

மேற்கண்ட இலக்குகளை சமூக வலுவூட்டல் செயன்முறை மூலமாக எய்தும் போது அது பேண்தகு மேம்பாட்டுக்கு எவ்வாறு வழிவகுக்கின்றது என்பது குறித்தும் சிந்தித்தல் இங்கு பொருத்தமானது. சாதாரண மக்களிடத்தில் மேற்குறித்த மாற்றங்களையும், வல்லமைகளையும், திறன் களையும் உருவாக்குவதன் வழிதான் மேம்பாட்டு செயன் முறைகளின் நிலைபேறு பேணப்படும் வாய்ப்பு உருவாக்கப் படுகின்றது. இதற்கான ஒரு சில அடிப்படை வழிமுறைகளை பின்வருமாறு சிந்திக்க முடி யும்.

1. சமூக மூலதனத்தின் வலுவூட்டல் என்னும் போது சமூக மூலதனம் தொடர்பான மக்களின் பொறுப்புணர்வை வலுவூட்டுதலையே குறிக்கின்றது. இது சமூக

மேம்பாட்டுக்கான திறன்களை உருவாக்கும் வகையில் சமூக மூலதனத்தைத் திரட்டுதலையே கருதுகின்றது. இத்தகைய திறன்களை வளர்க்கும் வகையில் அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்கள் சமூக மூலதன திரட்சிக்காக பணியாற்றும் கட்டுப் பாடுடையவை. ஆயினும் மக்களின் விழுமிய நிலையில் சமூக மூலதன திரட்சிக்கான பல சவால்கள் உள்ளன. இந்த விழுமிய நிலைகளிலான பின்னடைவுகளால் சமூகமூலதனத் திரட்சிக்கான முயற்சிகள் பின்னடைவு பெறுகின்றன. இதனால் இந்த விழுமிய நிலைகளை சீர்செய்யும் தேவை உருவாகி வளர்கின்றன. இவை பெரும்பாலும் பண்பாடு மரபுவழி மற்றும் வழக்காறுகளுடன் பிணைந் திருப்பதால் மாற்றங்கள் இலகுவில் சாத்தியமாவ தில்லை.

2. உள்ளூர் தலைமைத்துவக் கோலங்களை விருத்தி செய்தல் என்பது சமுதாயத்திற்கு மிகப் பொருத்தப்பா டான தலைமைத்துவம் பற்றிய ஒரு சிந்தனையாகும். தர விருத்தியைத் தரவல்ல பேண்தகு தலைமைத்துவமாக அது அமைதல் வேண்டும். இதற்கான பயிற்சிகளை மக்கள் பெறுவதற்கான வாய்ப்புகள் வேண்டும். சமுதாய மட்ட நிறுவனங்களின் வலுவான செயற்பாடுகளை அமுல்படுத்தவல்ல தலைமைத்துவ வெறுமை அல்லது இடைவெளிகளை நீக்குவதற்கான உபாயங்களைக் கண்டறிதல். அதன் வழி அரசியல் பங்கேற்றலுக்கான வாய்ப்புகளை அதிகரித்து தலைமைத்துவத்தின் மக்கள் மயப்பாட்டினை அதிகரிக்கும் உபாயங்கள் குறித்துச் சிந்தித்தல் வேண்டும்.

3. எல்லைப்படுத்தப்பட்ட விளிம்புநிலை மக்களின் ஈடு பாட்டினை அதிகரித்தல் என்பது சமசந்தர்ப் பத்திற்கான நிலையை உருவாக்குதலைக் குறிக்கின்றது. மனித உரி மைகள் தொடர்பான சட்டங்கள் பற்றிய அறிவினை மக்களிடத்தில் பகிர்தல் மூலம் விளிப்புநிலை மக்களின் விருத்திக்கு உதவுதல். இலாப நோக்கற்ற நிறுவனங்கள்

தர்மச்சபைகள் (trusts) போன்ற அமைப்புக்கள் வழிதான் இவர்கள் வலுவூட்டப்பட வாய்ப்பு உள்ளது. இதன் வழியாக சமூகப்புறந்தள்ளல் தவிர்க்கப்படும். அதேநேரம் மையச்செயற்பாடுகளில் விளிம்பு நிலை மக்கள் உள்ளீர்க்கப்படவும் வாய்ப்புக்கள் உருவாகும். இத்தகைய உள்ளீர்த்தலுக்கான அண்மைக்கால தந்திரோபாயங்கள் குறித்து கூடிய கவனம் எடுப்பதன் மூலம் விளிம்பு நிலை மக்கள் வலுவூட்டப்பட வாய்ப்பு உள்ளது.

4. பால்நிலை ரீதியான கருத்துக்களில் தெளிவும் பெண்கள் வலுவூட்டலும் என்பது மேம்பாட்டில் பெண்கள் பங்கேற்றலை அதிகரிப்பதற்கான முயற்சி யாகும். சமூக மட்டத்தில் பெண்களுக்கு எதிரான வன் முறைகளைத் தவிர்த்தல், பெண்களின் வேலையின் மையை நீக்கி வேலைவாய்ப்புக்களைத் தேடுதல், பெண், ஆண் தொடர்பான ஒரே வார்ப்பான கருத்து நிலைப் படிமங்களை (portrait) இல்லாது ஒழித்தல். கிராமிய மட்டத்திலான பெண்கள் பங்கேற்றலை ஊக் குவித்தல், மரபுவழி மனநிலை (mind set) பாரம்பரியம் தொடர்பில் வரும் சவால்களை எதிர்கொள்ளல் போன்ற முயற்சிகளை அவற்றுக்கேயுரிய பொருத்தப்பாடான உத்திகள் மூலமாக பெண்கள் வலுவூட்டலுக்காகக் கையாளவேண்டும்.

5. பண்பாடு மற்றும் சமூக ரீதியாக நிலவும் மேம்பாட் டுக்கான தடைகள் என்பது சமூக மட்டத்தில் நிலவும் பிரிவுகள் சமூக அடுக்கமைப்புக்கள், பிராந்திய வாதங்கள் சமூகநிறுவனங்களின் செயற்பாடும் அதற்கான முறைமைகளிலான தவறான போக்குகள் சமூகப்படிமங்கள் (Social Images) போன்ற பல அம் சங்கள் சமூக மேம்பாட்டின் தடைக் காரணிகளாக அமைவதால் அவற்றினுள், அவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டு வாழும் மக்களிடத்தில் அத்தடைகளைத் தூண்டும் வல்லமைகளை உருவாக்குதல் என்பது பாரிய சவாலாகிவிடுகின்றது.

6. சமுதாய மட்ட நிறுவனங்களை மீளக்கட்டியமைத்தல் என்பது மேம்பாட்டு இலக்குகளை எய்த முடியாத வகையில் தேக்க நிலைக்கு உட்பட்டிருக்கும் சமூக மட்ட நிறுவன மீள்கட்டமைப்பையே கருதுகின்றது. இதற்காக நிறுவனங்களில் கட்டமைப்பு மாற்றங்கள் ஏற் படுத்தப்பட வேண்டும். ஈடுபாடு மிக்க திறன்வாய்ந்த சமுதாயமட்ட நிறுவனப் பணியாளர்கள் தேவைப்படு கின்றனர். பலம் வாய்ந்த தலைமைத்துவமும் அர்ப் பணிப்புடன் செயற்படும் செயற்குழுக்களும் அவசியம். இவையாவற்றுக்கும் மேலாக செயலொழுங்கு முறை களை (procedures) திடமாகப் பின்பற்றும் ஒழுங்கமைப் புக்கள் ஏற்படுத்தப்பட வேண்டும். இவற்றின் மூல மாகத்தான் ஒரு சமுதாயமட்ட நிறுவனத்தின் தீவிர செயற்பாடு பேணப்பட வாய்ப்பு உள்ளது.


இவ்வாறாக ஏனைய வலுவூட்டல் இலக்குகள் குறித்துச் பிரச்சினைகள் மற்றும் உபாயங்கள் குறித்த சிந்திக்க முடியும். எந்த உபாயங்களாயினும் சரி அது ஒரே நேரத்தில் தனியாள் வலுவூட்டலுக்கும் (individual empowerment), கூட்டுநிலை வலுவூட்டலுக்கும் (collective empowerment) துணையாக அமைதல் வேண்டும்.

தனியாள் வலுவூட்டல் என்பது சுய உறுதிப்பாடு (self confidence) சுய சார்பு நிலை (self determination), சுய நிறைவு நிலை (self sufficiency), சுயகட்டுப்பாட்டு உணர்வு, விமர்சன உணர்வு நிலை (critical consciousness), திறன் விருத்தி (competence promotion) போன்ற இலக்குகளை முன்வைத்துத்தான் செய்யப் படுகின்றன. இந்தப் பண்புகள் ஒரு தனியனை பேண்தகு மேம் பாட்டு இலக்குகளை நோக்கி இட்டுச் செல்லும்.

கூட்டுநிலை வலுவூட்டல் என்பது சமூக ஒட்டுணர்வு (social cohesion), சமுதாய ஈடுபாடு (community engagement), இணக்கப்பாட்டை கட்டிவளர்த்தல் (coalition building) அதிகாரம் மற்றும் சமூக மாற்றம் தொடர்பான புலமை ரீதியான புரிதல், சமுதாயக் கட்டமைப்புக்களும் தலைமைத்துவத்திறன்களும்

போன்ற பருநிலை இலக்குகளை முன்வைத்துத்தான் செய்யப் படுகின்றன. இந்தப் பண்புகள் கூட்டுநிலையில் சமூகத்தை வலுப்படுத்தி மேம்பாட்டு இலக்குகளை நிலைத்து நிற்கச் செய் கின்றன.

இந்த இரண்டு நிலை வலுவூட்டல் குறித்து பின்வரும் காட்டுருவின் மூலமாக மேலும் விளக்கம் பெற முடியும்




## முடிவுரை

சமுதாய மேம்பாடு, சமூக மேம்பாடு பேண்தகு மேம்பாடு என்று எந்த வகையில் மேம்பாடு குறித்து விவாதித்தாலும் அவற்றின் இலக்கு சாதாரண மக்களே. மேம்பாட்டின் பயனாளிகளும் அவர்களே. அதன் தொடர் இயங்குமுறை

மற்றும் திசையினையும் தீர்மானிப்பவர்களும் அவர்களே. இதுதான் சமூக வலுவூட்டலின் அடிப்படைக் குரல். இதனாற்றான் இன்றைய பிராந்திய ரீதியான மேம்பாட்டுத் திட்டங்களிலெல்லாம் மக்கள் பங்கேற்றல் மற்றும் வலு வூட்டல் குறித்து அதிக அக்கறை காட்டப்படுகின்றது. இது தொடர்பாக இன்று முனைப்புப் பெறும் ஒரு எண்ணக்கருவாக PEP (People Empower People) என்பது அமைந்துள்ளது. Friere *(1970)* Horton *(1989)* என்பார் இது பற்றி விரிவாக எழுதியுள்ளனர். PEP என்பது மக்களை பலப்படுத்துதல், சந்தர்ப்பங்களை வழங்குதல், திறன் மற்றும் அனுபவங்களை பெறவல்ல வளங்களை வழங்குதல், தம்மைத்தாம் கட்டுப்படுத்தும் வாழ்வை உருவாக்குதல் என்ப வற்றை குவிமையப்படுத்தியது. ஒரு நிகழ்ச்சித்திட்டத்தில் பங்காளிகளான பங்குபற்றுவோர், வசதியளிப்பவர்கள், ஆலோசனைக் குழுவினர் போன்ற வர்களிடையே பரஸ்பர உறவினை ஏற்படுத்த வேண்டும் என்பதை PEP உள்ளடக்கமாக கொண்டது. பங்குபற்றுபவர்கள் தமது சுய விழுமியங்கள் நம்பிக்கைகளை அறிதல், தமது பிரச்சினைகள் தொடர்பான சுயவெளிப்பாடு என்பவற்றிற்கு சுதந்திரம் வழங்குவதை இது குறிக்கின்றது. சமுதாய செயல் மற்றும் தனிமனித செயலுக்கு இடையிலான தொடர்பை இது வலுப்படுத்துகின்றது. தனியாட்களுக்கு சமுதாய பங்கேற்றலுக்கான சந்தர்ப்பத்தை வழங்குகின்றது. இது மக்களின் மேம்பாடு தொடர்பில் மக்களின் அதிகாரத்தை மக்களிடத்திலேயே வழங்கிவிடுகின்றது. இவற்றின் வழி குறித்த ஒரு சமுதாயத்தின் அல்லது பிராந்தியத்தின் பேண்தகு மேம்பாடு என்பது அந்த மேம்பாட்டுச் செயன்முறையில் மக்கள் எவ்வாறு வலுவூட்டப்படுகின்றார்கள் என்பதில்தான் தங்கி யுள்ளது என்பதை உணரலாம். மக்கள் தம்மைத் தாமே வலுவூட்டும் வல்லமை பெறும்வரை மேம்பாட்டின் இலக்கு களை நிலைத்திருக்கும் வகையில் பேணுவது என்பது சவாலுக் குரியதே.

# உலகமயமாக்கமும் மேம்பாடும் 09

## Globalization and Development:

**அறிமுகம்**

மேம்பாடு என்ற சொல்லின் பிரயோகம் பல தளங்களில் பலவாறு கையாளப்பட்டு வருகின்றது. ஒரு தனிமனிதனது வாழ்விலான மேம்பாடு தொடக்கம் ஒரு தேசத்தின் முழுதளாவிய மேம்பாடுவரை பல்வேறு விளக்கங்களுக்கும் வியாக்கியானங்களுக்கும் உட்படுகின்றது. மேம்பாட்டின் சமூகவியல் (sociology of development) என்பது தனியான ஒரு துறையாக விருத்தி பெற்ற நிலையில் மேம்பாடு தொடர்பான சமூகவியல் அணுகுமுறைகள் பல தோன்றி, தேசங்களின் மேம்பாடு குறித்த விளக்கங்களைத் தந்துள்ளன. இவ் அணுகுமுறைகள் தமக்கிடையே பல்வேறு முரண்பாடுகளைக் கொண்டிருக்கும் அதேவேளை ஒன்றைச் சார்ந்து மற்றொன்று உருவாகியிருப்பதும் கண்கூடு. உலகத்தில், தேசங்களின் மேம்பாடு குறித்த தாம்சார்ந்த கொள்கை நிலையில் நின்று கொண்டு காலங்காலமாக வழங்கிவந்த விளக்கங்கள் ஏராளமானவை. மேம்பாடு பற்றிய படிமலர்ச்சி அணுகுமுறை (evolution approach), நவீனமயமாதல் அணுகுமுறை (modernization apporach) காலனித்துவம் மற்றும் சார்பு நிலை அணுகுமுறை (colonialism and dependency theoretical approach) போன்ற பல அணுகுமுறைகளுக்கூடாக சமூகவியலாளர் தமது

விளக்கங்களைத் தந்துள்ளனர். இத்தகைய விளக்கங்கள் ஒவ்வொரு காலகட்டத்து உலகளாவிய ஒழுங்கின் மாற்றத்தை தரிசிப்பதன் வழி எழுந்த மேம்பாடு பற்றிய கோட்பாட்டு அணுகுமுறைகளாக மேம்பாட்டின் சமூகவியலில் நிலைத்துவிட்டன. இந்தவகையில்தான் சமகால உலகின் செல்நெறியை மேம்பாட்டுச் சமூகவிய லாளர்கள் உலகமயமாக்கத்தின் பின்புலத்தில் வைத்து விளக்க முற்படுகின்றார்கள். 'ஒடுக்கற் கோட்பாடு' (convergence theory) ஒளியில் நின்று Kerr, Froble, Sklair, Waters போன்ற மேம்பாட்டின் சமூகவியலாளர்கள் உலகமயமாக்க சமுதாயத்தைத் தரிசிக்கும் வகையினை விளக்குவதே இந்தக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஒடுக்கற் கோட்பாடு**

ஒடுக்கற் கோட்பாடு பற்றிய புரிதல் உலகமயமாக்க சமூகத்தை விளங்கிக் கொள்ள இன்றியமையாதது. 'எல்லா நாடுகளும் ஒரு புள்ளியை நோக்கி நகர்கின்றன. நம்பமுடியாத நிலையில் அவை தமக்குள் ஒத்த தன்மை பெறுகின்றன'. (Kirby 1997:p482) என்று Kerr என்ற அறிஞர் கூறுவது ஒடுக்கற் கோட்பாட்டின் தார்ப்பரியத்னை விளக்குகின்றது. உலகம் ஒடுக்கப்படுவதற்கு காரணமாக இவர் கைத்தொழில் மயமான நாடுகளை (advanced inducstrial nations) தோற்றுவித்தன. அந்நாடுகளை மாதிரிகளாக (models) கொண்டு அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகள் நகர்வதனால் 'எல்லா நாடுகளும் ஒரு புள்ளி நோக்கி நகர்கின்றன' என்று இவர் விளக்கம் தருகின்றார்.

நவீனமயமாக்கல் கோட்பாட்டின் ஒரு வளர்ச்சியாகக் காணப்படும் ஒடுக்கற் கோட்பாடு கைத்தொழில் மயமாக்கலின் விளைவாக முதலாளித்துவம் மட்டுமல்லாது சமவுடமைத் தத்துவமும் தோன்றியது எனவும் இவற்றுக்கிடையிலான பனிப் போரின் விளைவு இந்த ஒடுக்க நிலையினைத் தோற்றுவித்தது எனவும் விளக்குகின்றது. இவ்விளக்கத்தின் பின்புலத்தில்

சமகால உலகமயமாக்க சமூக மேம்பாடு குறித்துப் புரிந்து கொள்ளலாம்.

வெறுமனே ஒடுக்கக் கோட்பாடு உள்ளடக்கத்தின் பிர மாணங்களின்படி உலகமயமாக்க மேம்பாட்டினை விளங்கிக் கொள்வதுடன் நின்றுவிடாது சந்தை திசைமுகக் கோட் பாடுகள் (market-oriented theories) நவீன மயமாக்கல் கோட்பாடு (modernization theory) புதிய தாராளவாதம் (neo liberalism) கால னித்துவம் மற்றும் சார்புநிலைக் கோட்பாடு, உலக முறைமைக் கோட்பாடு (world system theory), அரசு மையக் கோட்பாடுகள் (state centered theories), என்பவற்றுடன் இணைத்துப் பார்க்கும் போதுதான் சரியான புரிதலுக்கான வழி ஏற்படுகின்றது.

**உலகமயமாக்கல் செயன்முறை**

மேம்பாட்டின் சமூகவியலாளர்கள் உலகமயமாக்கச் செயன் முறையிலடங்கும் பல்வேறு எண்ணக்கருக்களைத் தெளிவாக விளக்குகின்றனர். Frobel என்ற அறிஞர் உலகமயமாதலின் மையப்பொருளாக 'புதிய சர்வதேச வேலைப்பகுப்பு' (new international division of labour) என்பதை முன்வைத்துக் கருத்தாடு கின்றார். இதன்படி உலகத்தினை எவ்வாறு வெவ்வேறுபட்ட பண்புகளுக்கு ஏற்ற வகையில் தனிப்பிரிவுகளாக (sectors) ஆக்குவது என்பது பற்றி விளக்குகின்றார். ஆரம்ப காலத்துத் தொழிற்பிரிப்பு முறையானது ஏற்றுமதி செய்யும் மூலப் பொருட்களால் தீர்மானிக்கப்பட்டது. பின்னர் மலிவான தொழி லாளர்கள் என்பதனை மையமாகக் கொண்டு பிரிப்புக்கள் நிகழ்ந்தன. மூன்றாம் மண்டல நாடுகளின் கூட்டுறவுக்கான இயக்கங்களை (movement of cooperation) விளக்குவதற்காக Fobel அதனைப் பயன்படுத்தினார். Forbel இன் புதிய சர்வதேச வேலைப்பகுப்பு பற்றிய கருத்துக்கான எதிர்நிலை விளக் கங்களும் முக்கியமானவை. அதாவது புதிய தொழிற் பிரிப்பு முறைகளில் உலகமய அரசியல் பொருளாதார அணுகுமுறை களின்படி மூன்றில் இரண்டு பங்கு நேரடி முதலீடுகள் உயர்கைத்தொழில்மயமான நாடுகளுக்குச் செல்கின்றதே ஒழிய மூன்றாம் மண்டல நாடுகளுக்கோ வறிய நாடுகளுக்கோ

செல்வதில்லை என்ற கருத்து முக்கியமானது. இதன்படி உலக மயமாக்க வலைப்பின்னலுக்குள் நுழையாத நாடுகள் பொருளாதார உயர்வினைப் பெறுவதற்கான உபாயங்கள் இல்லாதவை என்ற கருத்து வலுப்பெற்று மேலேழுவதைக் காணலாம்.


இவ்வாறே Beaker மற்றும் Sklair என்பவர்கள் தமது ஏகாதிபத்தியம் பற்றிய கோட்பாட்டில் (theories of imperialism) மூன்றாம் உலக நாடுகளின் மீதான முதலாளித்துவத்தின் செல்வாக்கினைப் பொதுநிலையில் விளக்கினர். 'மரபுவழி அரசியல் விசைகளின் அரசியல் வலுவிலான திருப்பத்துக்கு வளர்ச்சி பெறும் நவீனத்துவ உயர்குழாமிற்கு (progressive modernizing elites) பல்தேசியக் கம்பனிகளே (TNCs) துணையாகலாம்' (Sklair, 1994) என்று கூறினார். பல்தேசியக் கம்பனிகள் மூலதனத்தைக் கையாளுதல், தொழில் வல்லுனர்களைப் பரிமாற்றல், சந்தை வாய்ப்புக்களை உறுதிப்படுத்துதல் என்பவற்றின் மூலமாக உலகமயமாக்க மேம்பாட்டுச் செயன் முறைக்கு உதவும் என்பது இவர்களின் வாதமாகும். இதற்குப் புதிய சர்வதேச தொழிற்பிரிப்பு மாத்திரமன்றி வெகுஜனத் தொடர்பூடகங்களின் உலகளாவிய இலக்குகளும் பிரதான பங்காளிகளாக விளங்குகின்றன என்றார்.

இன்றைய உலகில் ஒரு தேசம் கடந்த முதலாளித்துவ வர்க்கமானது அரசியற் செயற்பாடுகள், பொருளாதார வழிமுறைகள், பண்பாட்டுத்துறைகள் என்பவற்றுக்கூடாகத் தொழிற்படுவதை Sklair இனங்காட்டுகிறார். இந்த வர்க்கமானது பல்தேசியக் கம்பனிகளின் நிறைவேற்று அதிகாரமுள்ளவர்கள், உலகமயமான அரச பணிக்குழு அமைப்பினர், முதலாளித்துவ ஊக்கமுள்ள அரசியல் வாதிகள், முதலாளித்துவ ஊக்கமுள்ள வாண்மை மற்றும் நுகர்வுசார் உயர் குழாமினர் போன்ற பிரிவினரைக் கொண்டதாக வளர்ந்துள்ளது என்று குறிப்பிடுகிறார்.

இவர்களின் கருத்துக்களின் அடுத்து படிமுறை வளர்ச்சியாக Waters என்பவரின் 'Globalization'(1995) என்ற நூலில் கூறப்பட்ட

உலகமயமாக்க உள்ளடக்கத்தினைக் கருதலாம். இதனைப் பின்வரும் காட்டுரு விளக்குகின்றது.

### Waters மாதிரி




**மூலம்:** Mark kirby&Co edt p: 483

இக் காட்டுரு 16 ம் நூற்றாண்டு தொடக்கம் 21 ம் நூற்றாண்டு வரை பொருளாதாரம், அரசியல், பண்பாடு போன்ற துறைகளில் ஏற்பட்ட உலகமயமாக்கம் நோக்கிய நகர்வுக்கான காரணிகளையும் உலக ஒழுங் கினையும் பிரதிபலித்துக் காட்டுகின்றது. எவ்வாறு பொரு ளாதார ரீதியில் முதலாளித்துவ உலக முறைமை வாழ்க்கை முறை நுகர்வுவாதமாக (life style consumerism) உருவெடுத்ததோ அவ்வாறுதான் அரசியல் கொள்கை ரீதியில் பூர்சுவா அரசு முறையானது தனியன்களின் மீதான உயர்ந்த அரச கட்டுப்பாட்டை (disetatazation) உருவாக்கிக் கொண்டது. அவ்வாறே பண்பாட்டுரீதியிலும் தனித்தனியே துண்டாடப் பட்ட உப பண்பாட்டு முறைகள் உலகளாவிய கருத்து நிலைக்கு (global Idealization) வந்துவிட்டது என்று விளக்குகின்றார். ஒடுக்கக் கோட்பாட்டின் தாற்ப்பரியத்தினை விளக்க Waters இன் மாதிரி மிகப்பொருத்தமான ஒன்றாகும்.

மேற்கண்ட கருத்துக்களின் பிரகாரம் ஒடுக்கற் கோட்பாடு அணுகுமுறையாளர்கள் மேம்பாடு என்பதை பின்வரும் வகையில் சாராம்சப்படுத்தினர்.

*01.* புதிய சர்வதேச தொழிற்பிரிப்பு முறைகளின் விருத்தியின் மூலமாக பொருளாதாரத்தை ஈட்டும் நாடுகளை வளர்முக நாடுகள் மாதிரிகளாகக் கொண்டு உலகமயமாக்க நிலை யினுள் இணைந்து கொள்ளுதல்.

*02.* தேசம் கடந்த கூட்டிணைப்புக்களாக பல்தேசியக் கம்பனிகளின் செயற்பாடுகளை ஏற்றுக்கொண்டு அவற்றின் வழி மூலதனத்தைக் கையாளுதல், தொழினுட்ப வல்லுனர்களைப் பரிமாற்றுதல், சந்தை வாய்ப்பினை உயர்த்துதல்.

*03.* நவீனத்துவ உயர்குழாமினரின் தோற்றத்தினால் மரபு வழியாக இருந்துவந்த அரசியல் அதிகாரங்களிலான மாற்றங்களை ஏற்படுத்துதல்.

*04.* வெகுஜன ஊடகங்களின் துணையுடன் ஒரு நாடு உலகளாவிய குறிக்கோள்களுக்குள் தம்மை உட்படுத்திக் கொள்ளுதல்

*05.* தேசம் கடந்த ஒரு முதலாளித்துவ வர்க்கத்தினை உரு வாக்கிக் கொள்ளுவதன் மூலமாக முதலாளித்துவ ஊக்கம் மிக்க அரசியல்வாதிகள், உயர்குழாம் நுகர்வோர், வாண்மையாளர்கள் என்போரை உருவாக்குதல்.

இவற்றின் வழியாகத்தான் உலகம் ஒடுக்கப்பட முடியும் அல்லது 'ஒரு புள்ளி நோக்கி' நகர முடியும். அதுவே உலகமய மாக்க ஒழுங்கில் நாடுகளின் மேம்பாடு என்றனர்.

**ஒடுக்கத்தின் முகவர்கள்**

மேம்பாட்டின் சமூகவியல் அணுகுமுறைகள் ஒவ்வொன்றின் பின்னேயும் பல விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றன. ஒடுக்கற் கோட்பாட்டின் மீதான விமர்சனங்களை முன்வைப் பவர்கள் சார்புநிலைக் கோட்பாட்டின் (dependency theory) அடிப்

படைகளை முன்வைத்துப் பேசுவது தவிர்க்கவியலாத ஒன்றா கின்றது. முதலாளித்துவ முறைமையை விமர்சனம் செய்யும் அதேவகையான போக்கு ஒடுக்கற் கோட்பாட்டினை விமர்சிப்பவர்களிடமும் காணப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். இதனால் மாக்ஸிய நிலை நின்று மேம்பாட்டை விளக்குபவர் களும் ஒடுக்கற் கோட்பாட்டின் பிரதான விமர்சகர்களாகின் றனர்.

ஒடுக்கற் கோட்பாடு நாடுகளை ஒரு மையத்தில் குவிய வைக்கும் செயன்முறையைக் குறிப்பிடுகின்ற போதிலும் இன்றும் உலகளாவிய சமத்துவமின்மையை குறைப்பதைக் 'கோசமாகக்' கொண்ட சக்திகளான உலக வங்கி மேம்பாட் டினை ஏற்படுத்தும் நோக்கில் தாழ் வருமானம் மற்றும் நடுத்தர வருமானம் உள்ள நாடுகளின் வறுமையைக் குறைக்க கடன்கள், கொள்கை ஆலோசனை, தொழினுட்ப உதவிகள், அறிவைப்பகிரும் சேவைகள் என்பவற்றை வழங்குகின்றது. அவ்வாறே சர்வதேச நாணய நிதியம் வறிய நாட்டு மக்களின் வறுமையைத் தணிக்கும் வகையிலான 'சந்தை இயக்க சீர்திருத்தங்களை' (market-driven reforms) செய்கின்றது.

மேற்குறிப்பிட்ட அமைப்புக்கள் மாத்திரமன்றி 'தேசம் கடந்த கம்பனிகள்' (TnCs-Trans National Companies) முக்கியமான முகவர் அமைப்புக்களாகத் தொழிற்படுகின்றன. இவை வணிக முதலாளித்துவ நோக்கினை நிறைவேற்றும் அதே வேளை அதன் நிலைபேற்றைச் சாத்தியப்படுத்தும் நுகர்வுக் கலாசார நோக்கினையும் வளர்த்து வருகின்றன.

## முடிவுரை

காலத்துக்குக் காலம் மாறிவருகின்ற உலக ஒழுங்கின் போக்கினை விளக்கி அதன் சமூகப் பயனை விவாதிக்கும் பல அறிஞர்கள் தாம் சிந்தித்த அடிப்படைகளில் நின்று தமது கோட்பாடுகளை உருவாக்கினர். இவற்றில் உலகமயமாக்க நிகழ் போக்கினை விளக்கும் ஒடுக்கற் கோட்பாட்டின் அடிப்படைகள் மீதான பெருமளவு விமர்சனங்களும் உள்ளன.

மாக்ஸிய சிந்தனை மரபினர், சார்புநிலைக் கோட்பாட்டாளர் இது பற்றிய அதிக விமர்சனங்களை முன்வைப்பர். இன்றைய உலக மேம்பாட்டின் போக்குகளை விளங்கிக் கொள்ள ஒடுக்கற் கோட்பாடு பயன்படுவது ஏதோ உண்மைதான். ஆனால் ஒரு குறித்த மக்கள் தொகுதிக்கான தனித்துவமான அடையாளங்கள், சமூகபொருளாதார பண்பாட்டம்சங்களை இந்த ஒடுக்கற் செயன்முறை, தந்திரோபாயங்கள் பலவற்றைக் கையாண்டு அழிப்பதைத் தன் கபடமான நோக்கமாகக் கொண்டுள்ளது. மையப்படுத்தப்பட்ட சில கோசங்களை முன்னிறுத்தி கிராமிய வாழ்வு மற்றும் கீழைப்புலங்களின் வாழ்வின் அடிப்படையானதும் அடையாளத்துடன் கூடியதுமான செழுமைகளைக் கட்டுக்குலைத்து முதலாளித்துவ நோக்குள்ள நாடுகளின் வேணவாக்களை நிறைவேற்றி வைக்கும் ஒரு செயன் முறையே இந்த 'ஒடுக்கல்' ஆகும். இது ஒரு முதலாளித்துவ மேன்மையினை நிலை நாட்டும் மறைமுகமான நிகழ்ச்சி நிரலைத் தன்னகத்தே கொண்ட செயன்முறையாகும்.

# முரண்பாடு :
## முகாமையும் உருமாற்றமும்

10

Conflict: Managment and Transformation

### அறிமுகம்

முரண்பாடு என்பது வாழ்வின் தவிர்க்க முடியாத செயன் முறைகளில் ஒன்றாகும். இது தனி மனித நிலையிலிருந்து பாரிய அரசியல் நிறுவனத் தொடர்பாடல் முறைகள்வரை எளிய நிலையிலிருந்து சிக்கல் தன்மை பெற்று வளர்ந்துள்ளது. மனித இன வரலாற்றுப் படிமலர்ச்சியின் வரலாறே முரண்பாட்டின் வரலாறாகத்தான் இருந்து வந்துள்ளது. உலகில் எந்தவொரு மக்கள் தொகுதியிலும் போர்கள், புரட்சிகள், வர்க்க முரண்கள், கிளர்ச்சிகள் எனப் பல்வேறு வகையிலான முரண்பாடுகளின் வெளிப்பாடுகள் நிகழ்ந்தேறி யுள்ளன. இதன் பின்னணியில் சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் ரீதியான காரணங் கள் தொழிற்பட்டு வந்துள்ளன.

முரண்பாடு என்பது பொதுநிலைச் சமூகச் செயன் முறையாக தொழிற்பட்டாலும் இன்று இனரீதியான முரண் பாடுகளை முன்னிறுத்தி சிலாகிக்கப்படும் எண்ணக் கருவாகவே முனைப்புப் பெறுகின்றது. வேறுபட்ட இனங்கள் தமக்கிடையே சமூக, பொருளாதார, கலாசார, அரசியல் அடிப்படைகளின் வழியான வரையறைகளை முன்வைத்து முரண்பாடு கொள்ளுகின்றன. இது அரசியல் ரீதியான தீர்வுகளின் வழியான சாத்தியமான இணக்க அவாக்களைக்

கொண்ட செயன்முறையாக நிலை பெற்றுத் தொடர்கிறது. இந்நிலையில் தான் முரண்பாட்டை முகாமை செய்தல், முரண்பாட்டு உருமாற்றம் போன்ற எண்ணக்கருக்கள் கருத்தாடப்படுகின்றன.

முரண்பாட்டு முகாமை மற்றும் முரண்பாட்டு உரு மாற்றம் என்பவை வெறுமனே ஒரு பாரிய அரசியல் தொடர்பாடல் செயன்முறையாக மாத்திரமன்றி தனிமனித முரண் இடை வினைகளில்கூட வேண்டப்படும் அம்சங்களாக வலியுறுத்தப்படுகின்றன. இதன் பின்னணியாக முரண்பாடு 'நலமில் நிலையினை' உருவாக்கும் செயன்முறை என்ற கருத்துருவம் மற்றும் முரண்பாடு எப்போதும் ஒரு எதிர்நிலைச் செயன்முறை அல்ல என்பது சமூகவியலாளர்களின் கருத்து எனினும் முரண்பாடு அதன் நிகழ்போக்கின் சமாந்தரங்களாக பல்வேறு வகையான அழிவுகள் இழப்புக்களைத் தருவதால் யதார்த்த தரிசனங்களின் வழி அதுவொரு எதிர்நிலை அம்சமாக பார்க்கப்படுவது தவிர்க்கவியலாதது. இந்நிலையில் தான் முரண்பாட்டு முகாமை, முரண்பாட்டு உருமாற்றம் போன்ற எண்ணக்கருக்கள் பற்றிய கலந்துரையாடல்கள் வலுப் பெறுகின்றன. இவை முரண்பாடுகளை நீக்குகின்ற அல்லது தீர்க்கின்ற செயன்முறையின் படிமுறைகளாக அமைகின்றன.

### முரண்பாடு என்பதன் பொருள்

முரண்பாடு என்பது பொது நிலையில் இரண்டு குழுக் களிடையே பரஸ்பரம் நிலவும் எதிர்ப்பு உணர்வு என்று குறிப்பிட்டாலும், முரண்பாட்டினை உடன்பாட்டு நிலையிலும் (positive) எதிர் நிலையிலும் (negative) விளக்கும் அறிஞர்கள், விளக்கங்களில் தம்முள் வேறுபடுகின்றனர். முரண்பாடுகளை தனியாள் முரண்பாடு (personal conflict), உள்ளார்ந்த முரண்பாடு (latent conflict), வகுப்பு முரண்பாடு (class conflict), இன முரண்பாடு (racial conflict), சாதி முரண்பாடு (caste conflict), குழுநிலை முரண்பாடு (group conflict), சர்வதேச முரண்பாடு (international conflict) என்றெல்லாம் வேறுபடுத்திப்பார்க்கும் அறிஞர்கள் அவற்றின் நேர்முக விளைவுகள் (posltive effects) மற்றும் எதிர்முக விளைவுகள் (negative effects) என்பவற்றை விரிவாக ஆராய்கின்றனர்.

| முரண்பாட்டின் எதிர்முக விளைவுகள் | முரண்பாட்டின் நேர்முக விளைவுகள் |
|---|---|
| 1. சமூக ஒருமைப்பாட்டினை பாதிக்கும் | வரையறுத்த அளவுமுரண் குழு உறுதிப்பாட்டைத் தரும். |
| 2. சமூக ஒருங்கமைவை குலைக்கும் | உள்ளார்ந்த வேறுபாடுகளை இல்லாது ஒழிக்கும். |
| 3. உளரீதியான மற்றும் விழுமிய குலைவினை உண்டாக்கும். | தனியாள் முரண்பாடு உயர்மட்ட வாழ்வைத் தரும். |

இந்த அட்டவணை முரண்பாட்டின் இரு முகங்களை காட்டும் மிக எளிமையான உதாரணமாக அமையும்

இவற்றை பின்னணியில் வைத்தே முரண்பாட்டிற்கான விளக்கங்கள் முன்மொழியப்பட்டுள்ளன. 'தனியன்கள் அல்லது குழுக்கள் வன்முறை ரீதியான பயமுறுத்தல்களை நேரடியாக எதிர் கொண்டு தமது இறுதி நிலையினை தேடும் செயன்முறை முரண்பாடு' என்று Gillin கூறுகின்றனார். (C.N.Shankar Rao,1990) போட்டியாளரை புறமொதுக்குதல் அல்லது வலுக்குன்ற வைத்தல் மூலமாக தனியுரிமைப்படுத்த செய்யும் ஒரு செயன்முறையே முரண்பாடு என Horton and Hunt கூறுகின்றனர். மேலும் Zoung and Mack என்போர் குறிப்பிட்ட ஒரு இலக்கு அல்லது வெகுமதியினை அர்த்தமுள்ளதாக பாதுகாக்கும் பொருட்டு எதிர் நிலையாளரை தாவிச் செல்லும் வன்முறை ரீதியான எதிர்ப்பு நடவடிக்கை மற்றும் மன வெழுச்சியின் வடிவம் முரண்பாடு' எனவும் வரையறுக்கின்றனர்.

இந்த வரையறைகள் முரண்பாட்டினை ஓரளவு மேலெழுந்த நிலையில் விளக்க முற்பட்டிருப்பினும் முரண்பாடு நிலவும் அடிப்படைக் காரணிகளின் பின்னணியில் எழுந்த விளக்கங்கள் அல்ல. இதனால் நிலவும் முரண்பாட்டின் வகைமை (type) எத்தகையது என்பதற்கு அமைவாக இவ் வரையறைகளை விரிவாக்கம் செய்ய வேண்டிய தேவை உள்ளது. Ramsbotham, Ropers, Norbert, Anderson, Mary, Bush, Kenneth, Peter Wallensteen, John Paul Ledrach, Marshall B.Rosenberg போன்ற பல்வேறு சிந்தனையாளர்களின் கருத்துக்கள் இத்தகைய

தொரு விரிவாக்கத்திற்கு வழிவகுத்திருப்பது குறிப்பிடத்தக்க தாகும்.

**முரண்பாட்டுக்கான காரணிகள்**

மேற்கண்ட வரையறைகளின் பின்னணியில் முரண் பாட்டிற்கான காரணிகளை இரண்டு தளங்களில் விளங்கிக் கொள்ளலாம்.

1. அமைப்பியல் நிபந்தனைகள் (Structural condition)

2. முடுக்கிவிடும் காரணிகள் (Triggering factors)

அமைப்பியல் நிபந்தனைகள் வன்முறைசார் முரண் பாட்டினை உருவாக்குதலுக்கான 'கவிவு நிலையினை' கருதுகின்றது. அரசியல், சமூக, பொருளாதார காரணிகளின் இணைவான குடியடர்த்தி, செல்வம் மற்றும் வாய்ப்புக்களின் பரம்பல், குழுக்களுக்கிடையிலான இடைஉறவின் வரலாறு என்ற பல்வேறு அம்சங்களில் அரசியல் ரீதியான மேலாண்மை கொண்ட சமூகம் கட்டுப்படுத்தும் காரணியாகத் தொழிற் படுவதை இது விளக்குகின்றது. வன்முறைசார் முரண் பாட்டினைத் தூண்டுகின்ற நிகழ்வுகள், செயற்பாடுகள், முடிவுகள் யாவும் முடுக்கிவிடும் காரணிகளாக வரையறுக்கப் படுகின்றன. இக் காரணிகளை முறைப்படுத்திப் பட்டியலிடுவது சாத்தியமானதல்ல. பொருளாதாரவீழ்ச்சி, உள்நாட்டு அரசியல் கட்டுப்பாடு, மத்திய அதிகார இடமாற்றங்கள், பிராந்திய அதிகாரவலுக்கள், அயல்நாட்டுத் தலையீடுகள் போன்ற காரணிகளை மேலோட்டமாக கூறலாம்.

முரண்பாடு ஒன்றுக்கான தீர்வு, முகாமை மற்றும் அதன் உருமாற்றம் தொடர்பாக சிந்திக்கும் போது மேற்கண்ட காரணிகள் பற்றிய பாகுப்பாய்வு மிக முக்கியமாகின்றது. ஏனெனில் முரண்பாடு ஏற்படாது பாதுகாத்தல் (conflict perevention), சமாதானத்தை கட்டியெழுப்புதல் (peace building), முரண்பாடு தீர்த்தல் (conflict resolution), போன்ற நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு இந்தப் பகுப்பாய்வு இன்றியமையாத தாகின்றது.

## முரண்பாட்டு பகுப்பாய்வும் முகாமையும்

முரண்பாட்டினைப் பகுப்பாய்வு செய்யும் போது பின்வரும் மூன்று அடிப்படைகளில் பகுப்பாய்வு செய்கின்றனர்.

1. உளப்பாங்கு (attitude)
2. நடத்தை (behaviour)
3. அமைப்பு (context)

உளப்பாங்கு என்பதனுள் முரண்பாட்டுக்கு ஏதுவான முற் சாய்வு, பயம், வெறுப்பு, அந்நியமாதல், இணங்கிப் போகாமை போன்றன பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. முரண்பாட்டுக்கு உட்படுகின்ற தனியனிடத்தில் மாத்திரமன்றி ஒரு குழுவிடம் கூட இந்த உளப்பாங்கு சார் அம்சங்கள் ஏறு வரிசையில் வளர்வதை அவதானிக்க முடியும். முரண் பாட்டினை முகாமை செய்தலில் இந்த உளப்பாங்குகளிலான மாற்றங்கள் முக்கியமான இடத்தினைப் பெறுகின்றன.

நடத்தை என்பதனுள் சமூக பாரபட்சங்கள், தாக்கு தல்கள், சமூக வேறுபடுத்தல்கள், எல்லைப்படுத்தல்கள், இடப்பெயர்வுகள் போன்றன உள்ளடக்கப்படுகின்றன. இது முரண்பாடு தனிமனித நிலை கடந்து எவ்வாறு சமூக நடத் தையாக மாறுகின்றது என்பதை பகுப்பாய்வு செய்வதாகும். முரண்பாட்டை முகாமை செய்தலில் இரண்டாம் கட்ட பகுப்பாய்வு இதுவாகின்றது.

மூன்றாம் நிலையில் அரசியல் ரீதியாகவும் சமூக அமைப்பு ரீதி யாகவும் முரண்பாட்டினை பகுப்பாய்வு செய்யும் போது நீதி (justice), உரிமைகள், சட்டரீதியான பாரபட்சம், அரசியல் மற்றும் பொருளாதார கட்டமைப்புக்கள், வளப் பங்கீடுகள் தொடர்பில் உள்ள முரண்பாடுகளை முகாமை செய்தலுக்கான பகுப்பாய்வாக அது அமைகின்றது.

மேற்கண்ட பகுப்பாய்வின் வழியாக முரண்பாட்டினை முகாமை செய்தல் என்பது பின்வரும் இரு வழிகளில் விளக்கப்படலாம்.

1. முரண்பாட்டின் வழியேயான அழிவுதரவல்ல அம்சங் களை தடுக்கும் நடவடிக்கைளை கொண்டமுகாமை


2. முரண்பாடு என்பது சமூக மாற்றத்துக்கான வழி எனக் கருதி முரண்படும் சக்திகளை இசைவித்து மேம் பாட்டுக்கு வழி நடத்தும் முகாமை

இவ்விரு வழிகளிலும் அடிப்படையில் மேம்பாடு என்ற இலக்கினை நோக்கியே முரண்பாட்டினை முகாமை செய்தல் அமைகின்றது என்பதை விளக்கிக் கொள்ளலாம். இன்று சிலாகிக்கப்படும் ஜனநாயகம், மனித சுதந்திரம், அதிகாரப் பகிர்வு, தன்னாட்சிக்கான அதிகாரம் போன்ற சொல்லாடல் களுக்கான உடனடிப் புனர்வாழ்வு சமாதானம், தேசத்தை கட்டி யெழுப்புதல் போன்ற மேம்பாட்டு நிகழ்ச்சித் திட்டங்களின் அர்த்தங்களும் இந்த வழியான முகாமைத்துவத்தின் மூலமாக சாத்தியமாகின்றன.

**முரண்பாட்டு உருமாற்றச் செயன்முறை**

முரண்படும் சக்திகள் எவையாயினும் அவை தம்மிடையே இணக்கமில்லா நிலையில் இருப்பர். முரண்பாட்டில் ஈடுபடுபவர்களின் எண்ணப் போக்குகள், முரண்பாட்டுக்குரியதான விடயம், முரண்பாட்டுக்கு உரியவர்கள் பின்பற்றும் அமைப்பியல் ரீதியான விதிகள் ஆகியவற்றில் ஏற்பட்டுவரும் மாற்றங்களை முன்னைய வரலாற்றுப் பட்டறிவுகளின் அடிப்படையில் தூண்டுதல் அல்லது கடந்து செல்லுதல் முரண்பாட்டு உருமாற்றம் (ஜயதேவ உயங்கொட, 2004) எனப்படும். இம் முரண்பாட்டு உருமாற்றமானது தனியன்களிடத்திலும் அவற்றின் இடை உறவுகளில் வரும் முரண்நிலைகளிலும் சமூக கட்டமைப் பிலும் குறிப்பிடத்தக்களவு ஏற்படுவதனை காணலாம்.

முரண்பாட்டு உருமாற்றம் என்பது ஒரு முரண்பாட்டின் முழுதளாவிய நிலைமையை மாற்றியமைத்தலையே கருது கின்றது. முரண்பாட்டு உருமாற்றம் செயன்முறை மற்றும் அதன் படிமுறைகளை விரிவாக்குவதன் மூலம் இதனைத் தெளிவுபடுத்த முடியும். இதனை Diana Francis என்பாரின் பின் வரும் காட்டுரு விளக்குகின்றது.





*மூலம்:* SAI-Report,*2000*

*மேற்கண்ட காட்டுரு முரண்பாட்டு உருமாற்றத்தின் செயன்முறை மற்றும் படிமுறைகளை விளக்குகின்றது. அதாவது ஒடுக்கப்படுதல் மற்றும் நீதி முறைமைகளிலான அசமத்துவம் குழுக்களிடையே மறைமுகமான முரண் பாடுகளாக வளர்ந்து,*

பரஸ்பரம் குழுக்கள் ஒன்றை ஒன்று சந்தேகிக்கும் நிலை உருவாகி முரண்பாடு வலுப்பெறும் நிலையில் அதனை தீர்ப்ப தற்கான ஆர்வம் உண்டாகின்றது. அதன் பின்னான முரண்பாடு தீர்த்தல், பேச்சினை முன்னெடுத்தல், கடந்த காலத்தில் உருவாக்கப்பட்ட முற்சாய்வான வார்ப்பு எண்ணங் களைக் களைத்தல் வழியான சமாதான தீர்வும் அதன் பின்னான சமுதாய மீள்கட்டுமானப் பணிகளும் நிலைத்து நிற்கும் சமாதானம் தொடர்பான முயற்சிகள்வரை நீட்சிபெறும் அனைத்துச் செயன்முறைகளும் முரண்பாட்டு உருமாற்றத் தினுள் அடங்குகின்றன.

முரண்பாட்டு உருமாற்றம் மற்றும் முரண்பாட்டு முகாமை என்பன தமது இறுதி இலக்காக நிலைத்து நிற்கும் சமாதானம் மற்றும் சமூக நீதியை வலியுறுத்துகின்றன. இதற்காக சமுதாயத்தின் அடிமட்டத்திலிருந்து மேல்நிலை வரையிலான அணுகுமுறைகள் சிலவற்றை John Paul Lederach விளக்குகின்றார்.




மூலம் : SAI Report,2000

மேற்கண்ட கூம்பகம் சமாதானத்தை கட்டியெழுப்புதல் மற்றும் நிலைத்திருக்கச் செய்தலுக்கான அடிப்படையிலான மக்கள் பங்கேற்றல் செயன்முறை எவ்வாறு அமைதல் வேண்டும் என்பதையும் அதற்கான சமூக மட்டத் தலைமைத் துவங்களின் பொறுப் புக்களையும் தெளிவுற விளக்குகின்றது

**நிறைவாக**

முரண்பாட்டு தீர்வு என்ற எண்ணக்கருவிற்கு ஈடாக இன்று கையாளப்பட்டுவரும் முரண்பாட்டு முகாமை, முரண்பாட்டு உருமாற்றம் போன்ற சொற்பிரயோகங்கள் விரிவாகவும் நுணுக்கமாகவும் விளங்கிக்கொள்ளப்பட வேண்டிய பல செயன்முறைகளைத் தம்மகத்தே கொண்டவை. பல்வேறு அடிப்படைகளில் உலகம் முழுவதும் முரண்பாடுகள் நிலவிவரும் போதிலும் இனமுரண்பாடுகள் அரசியல் ரீதியான முன்னெடுப்புக்களுக்கு உட்பட்டு சமாதான தீர்வுவரை நகருகின்ற பின்னுமான பல விடயங்களை உருமாற்றம் செய்யும் வகையில் பாரிய சவால்கள் எதிர்கொள்ளப்பட்டு வரும் நிலை நிதர்சனமானது. அடிமட்ட அரசியல் பங்கேற்பு தொடக்கம் உயர்மட்ட சமாதான முன்னெடுப்புக்கள் வரை பாரிய செயன்முறைகள் விளக்கப் படுகின்றன. எனினும் இக் கட்டுரையில் ஒரு சிறு கோட்பாட்டு அறிமுகம்தான் சாத்திய மாகின்றது. இதன் மறுபக்கத்தில் நடைமுறையில் (practical) எதிர்கொள்ளப்படும் பிரச்சினைகளும் அவற்றை வெற்றிகொள்ளும் வழிவகைகளும் சிலாகிக்கப்படுதல் வேண்டும்.

**உசாத்துணை நூல்கள்:**

கல்வியும் கிராமிய மேம்பாடும்...

- Ahmed, M & Coombs, P.H(1975)., *Education for rural development- case studies for planners*, Praeger publishers, New York.
- Andy Pike & etal(2011)., *Hand book of local and regional development*, Routledge, London and New York.
- Chambers Robert(1983)., *Rural development: Putting the last first*, Longman, London.
- David Atchoarena & Lavinia Gasperini(2006)., *Education for rural development: Towards new policy responses*, Rawat publication, New Delhi.
- Margrit I. Kennedy(1979).,*Building community schools-an analysis of experiences*, Unesco.
- Sinsh Katar(1999)., *Rural development principles, policies and management,* Sage publications, New Delhi.

உட்படுத்தல் கல்வி: மனப்பாங்குமாற்றமும்...

- David A. Sousa(2001)., *How the special needs brain learns*, Corwin press, Inc, California.
- Gletman H(1995)., *Psychology*- fourth edition, W.W. Northon and company, New Delhi.
- Kevin Wheldall(2006).,*Development in educational psychology*, Routledge, London and New York.
- Maigaret Sharp(1976)., *Children learning introduction to educational psychology*, Great Britain.
- Mangal, S.K(2008)., *Advanced educational psychology*- 2nd edition, PHI learning private limited, New Delhi.
- Nayak, A.K and Rao, V.K(2008)., *Educational Psychology*, A P H Publishing cooperation, New Delhi.

ஆசிரிய முன்மாதிரிகளும், தலைமைத்துவமும்

- Oliver Banks(1968)., *The sociology of education*, B.T Balsford Ltd., London.
- Pickering, W.S.F (edt.)(1979)., *Durkheim: essays on morals and education*, Routledge & Kegan Paul, London.

- Sam D. Sieber and David E. Wilder(edt.)(1973)., *The school in society-studies in the sociology of education*, Collier Macmillan publishers, London.
- Stevan T. Bossert(1979)., *Task and social relationships in classrooms- A study of instructional organization and its consequences*, Cambridge university press, London.
- Wilbur B. Brookover, Edsel I. Ericson(1975)., *Sociology of education*, The Dorsey press.

இளையோர் பண்பாடும் சமூக விலகலும்...

- Carmen Germaine Warner(1981)., *Conflict intervention in social and domestic violence,* Prentice-Hall of India Pvt Limited, New Delhi.
- Clinard,M.B and Meier,R.F(1985)., *Sociology of deviant behavior*, Rinehart and Winstor, New York.
- Cohen, S(1994)., *Vision of social control: crime, punishment and classification*, Polity press, Cambridge.
- Craig.B. little(1989)., *Deviance and control-theory, research and social policy*, F.E. Peacock publishers, Inc.
- Donal, E.J, Mac Namara and Andrew Karman(1993)., *Deviants: Victims or Victimizers*, Beverly Hills, California.
- Douglas, J.R and Wakseler, F.C(1982)., *The sociology of deviance: an introduction*, Boston: Little Brown.
- Mayers, D.G(2007)., *Exploring social psychology*, McGraw Hill, New York.

கிராமிய வாழ்வின் பண்பாட்டுச் சூழல்...

- Desai, A.R(1979)., *Rural India in transition* ,Popula prakashan publishers, Bombay.
- Jayapalan, N(2002)., *Rural sociology*, Atlantic publishers, India.
- Rajendra Kumar Sharma(2004)., *Rural sociology*, Atlantic publishers, New Delhi.

யாழ்ப்பாணத்துக் கிராமிய கூட்டுவாழ்வும் மாறுதல்களும்...

- Bellah, N. Robert(edt.)(1973)., *Emile Durkheim on morality and society*, The university of Chicago press, Chicago.

- Giddens,A(edt.)(1972)., *Emile Durkheim: selected writings*, Cambridge university press, Cambridge.
- Pascual Gisbert(1959)., *Fundamentals of Sociology*, Orient Longman.

போரின் பிந்திய கிராமிய மேம்பாட்டில்...

- Diane Conyers(1993)., *Guide line on social analysis for rural area development planning*, FAO, Rome.
- Eric Damian Kelly(2010), *Community Planning- An introduction to the comparative plan*, Island press, London.
- Lina Payne(1998)., *Rebuilding communities in a refugee settlement- A case book from Uganda*, Oxfam G B.
- Oza,D.K(1997)., *Voluntary action and Gandhian approaches*, National book trust, India.
- Shirley Giggery(1988)., *Rural community resource centers-A guide for developing countries*, Macmillan, Delhi.

பேண்தகு மேம்பாட்டில் சமூக வலுவூட்டலின்...

- Blanchard, Kenneth. H., John P. Carlos & Alan Randolph(1996).,*Empowerment takes more than a minute*, Berrett- Koehler, San Francisco.
- Chris Maser(1997)., *Sustainable community development: Principles and concepts*, St. Lucie press, Delray Beach.
- Kumar Somesh(2002)., *Methods of community participation: A complete guide for practitioners*, Vistaar publication, New Delhi.
- Louise c. Johnson(1986)., *Social work and practice: A generalist approach*, Allyn and Bacon.

உலகமயமாக்கலும் மேம்பாடும்...

- Behera, M.C(2006)., *Globalizing rural development-competing paradigms and emerging realities*, Sage publication, New Delhi.
- Giddens, A(2000)., *Capitalism and modern social theory*, Cambridge University Press.
- Giddens, A(2006)., *Sociology* fifth edition, Wiley Pvt limited, India.

- Inozemtsew, N(1974)., *Contemporary capitalism: New development and contradictions*, Progress publishers, Moscow.
- Kirby Mark & Co edt.(1997)., *Sociology in perspective*, Heinemann.

முரண்பாடு: முகாமையும் உருமாற்றமும்...

- Azar, E(1999)., *The management of protracted social conflict: Theory and cases*, Dartmouth.
- Johan Galtung(2003)., Peace by Peaceful means- Peace and conflict, development and civilization, Sage publication, New Delhi.
- Lederach, J(1995)., *Preparing for peace conflict transformation across cultures*, New York.
- Marshal B. Rosenberg(2003)., *Non-violent communication language of lift*, Puddle Dancer Press.
- Miall Hugh, Oliver Ramsbotham, Tom WoodHouse(2003).,*Contemporary Resolution- The prevention, management and transformation of deadly conflict*, Polity, Cambridge.



முன்னை வாழ்வின் மேலான விழுமியங்களை ஆராதிக்கும் அதேவேளையில் இன்னும் தொடரும் அநீதியான மேலாண்மைகளைக் கேள்விக்குள்ளாக்கும் சிந்தனை வீச்சுக்களாக இக் கட்டுரைகள் அமைந்துள்ளன. கிராமிய வாழ்வின் அசைவியக்கத்தின் ஆதார விசையான கல்வி, இக் கட்டுரைகளின் மையப் பொருளாகவுள்ளது. கிராமியச் சமூகவியல், கல்வியின் சமூகவியல் ஆகியவற்றினைத் தன் ஆய்வார்வத்துறையாக வரித்துக்கொண்ட இராஜேஸ்கண்ணனின் தெளிந்த பார்வையும், பகுப்பாய்வுத் திறனும் இக் கட்டுரைகள் முழுமையும் பளிச்சிடக் காணலாம். கிராமிய வாழ்வைத் தன் ஆய்வனுபவமாகவும் வாழ்வனுபவமாகவும் ஆழத்தரிசிக்கும் இராஜேஸ்கண்ணனின் புலமைத் திறனுக்கும் சமூக உணர்திறனுக்கும் சான்றாக இந்நூல் விளங்குகின்றதென்றால் மிகையில்லை.

-பேராசிரியர் என். சண்முகலிங்கன்

சாத்வீகசுருதி

ISBN 978-955-4900-00-4
9 789554 900004

கிராமியம்-கல்வி-மேம்பாடு

சமூகவியல் பார்வைகள்

ஆகாயம் பதிப்பகம், இமையாணன்